# ஞானச்சுடர்








சித்திரை

2014

வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



# குறள்வழி

**அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை.**

**பொருள் :** தன்னைத் தோண்டுகின்றவரை விழாமல் தாங்கும் நிலம்போலத் தம்மை அவமதிப்பவரைப் பொறுத்தல் உயர்ந்த அறமாகும். (151)

**பொறுத்த லிறப்பினை யென்று மதனை**
**மறத்த லதனினும் நன்று.**

**பொருள் :** தாம் தண்டிக்கக் கூடிய காலத்தும் பிறர் செய்த தீமையைப் பொறுக்கவேண்டும்; அதனை உடனே மறந்துவிடக் கூடுமாயின் அது அப்பொறுமையிலும் நன்று. (152)

---



# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

**முத்தி நல்குமே**

### குறள் வெண்செந்துறை

தருமமு மில்லைத் தானமு மில்லைக்
கருமமு மில்லைக் கண்டுகொண் டேனே 51

மண்டல முழுவதும் மன்னிய பொருளைக்
கண்டுகொண் டேனே கவலைதீர்ந் தேனே 52

அண்டமும் பிண்டமு மடங்கலு மதுவே
தொண்டர்கள் கண்டு துயர்தீர்ந் தாரே 53

முண்டக மலர்த்தாள் முடிமிசைக் கொண்டேன்
அண்டரு மறியா ரதிசய மதிசயம் 54

பண்டுசெய் வினையெல்லாம் பறந்தன பறந்தன
தண்டையம் மலர்த்தாள் தான்பணிந் தேனே 55

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

# ஞானச்சுடர்

வெளியீடு– 2 சுடர்– 196

2014 சித்திரை


## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| இறைவனை விசாரித்துக்... | குமாரசாமி சோமசுந்தரம் | 01 –03 |
| போற்றித் திருவகவல் | சு. அருளம்பலவனார் | 04 –07 |
| ஆலயமும் சுகவாழ்வும் | செல்வி பா. வேலுப்பிள்ளை | 08 –10 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 11 –13 |
| இறை வழிபாடு | செல்வி செ. ஜடா | 14 –15 |
| வட இந்திய தல யாத்திரை | செ. மோகனதாஸ் சுவாமிகள் | 16 –20 |
| ஔவையாருக்கு நெல்லிக்... | நா. நல்லதம்பி | 21 –23 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | தொகுப்பு | 24 –26 |
| மனிதன் மனிதனாக வாழ... | இராசையா ஸ்ரீதரன் | 27 –29 |
| சிறுவர் கதைகள் | – | 30 –32 |
| சைவத் திருக்கோயிற்... | கா. கைலாசநாதக்குருக்கள் | 33 –34 |
| திருநாவுக்கரசு நாயனாரைத்... | சிவ. சண்முகவடிவேல் | 35 –36 |
| படங்கள் தரும் பதிவுகள் | – | 37 –40 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 41 –42 |
| அந்த வாக்கும் பொய்த்துப்... | கே.எஸ் சிவஞானராஜா | 43 –46 |
| திருவருட்பயன் | முனைவர் ஆ. ஆனந்தராசன் | 47 –49 |
| சைவ சமய வினாவிடை | ஆறுமுகநாவலர் | 50 –51 |
| கண்டோம் கதிர்காமம் | கவிமணி அன்னைதாசன் | 52 –54 |
| ஸ்ரீ கருட புராணம் | இரா. செல்வவடிவேல் | 55 –60 |
| தமிழகத் திருக்கோயில்... | வல்வையூர் அப்பாண்ணா | 61 –64 |



வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் பங்குனிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:**

பங்குனிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையை திரு வ. கணேசமூர்த்தி இளைப்பாறிய அதிபர் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது ஆரம்ப உரையில், ஞானச்சுடர் மலரானது இன்றைய கால கட்டத்திற்கான தேவைகருதி வெளிவருவதோடு, மனிதனை சமயநெறியில் நெறிப் படுத்துகின்றது என்று கூறினார்.

அடுத்து அவர் தனது உரையில் ஆச்சிரமமானது மருத்துவப் பணி, கல்விசார் உதவிகள், அறிவை வழங்கும் வெளியீடுகள், அன்னப்பணி, வறுமைக்கோட்டின்கீழ் உள்ளவர்களுக்கு உதவுதல் எனப் பல விடயங்களை மேற்கொண்டு வருகின்றது. இவ்வாறான செயற்பாடுகள் மேலும் மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என்று கூறித் தனது வெளியீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை:**

195ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திரு க. ஆனந்தராசா (இளை. அதிபர்) அவர்கள் நிகழ்த்தினார்கள்.

தனது ஆரம்ப உரையில், ஞானச்சுடர் அட்டையில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை எனப் பொறிக்கப்பட்ட இலட்சினை காணப்படுகின்றது. அதில் இசைக்கருவிகள் பொறிக்கப்பட்டுள்ளன. அவைமூலம் ஆச்சிரமத்தில் கலைகளுக்கு ஓர் இடம் வழங்கப்படுகின்றது என்பதை உணர்ந்துகொள்ள முடிகின்றது.

அடுத்து அவர் தனது உரையில் ஞானச்சுடர் மலர் சிறியோர் முதல் பல்கலைக் கழகம் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் பயன்படக்கூடிய ஆக்கங்களைக் கொண்டு வெளிவருகின்றது. சுடர் தரும் தகவல் எனும் பகுதியில் மனிதனின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்களைக் கொண்டுள்ளது.

195ஆவது ஞானச்சுடர் மலரின் சிறப்பு என்னவென்றால் சித்தாந்த கருத்துக்களை உள்ளடக்கிய ஆக்கம் காணப்படுகின்றது. இவ்வாக்கத்தின்மூலம் சைவ சமயிகள் கைக்கொள்ள வேண்டிய நற்பழக்க வழக்கங்களை அறிந்துகொள்ளமுடியும் என்று கூறித் தனது மதிப்பீட்டுரையை இனிதே நிறைவு செய்தார்.

# சுடர் தரும் தகவல்

ஆன்மீகம் என்பது அனுபவத்துக்குரியது. வெறும் வாய்ப் பேச்சுக்களுக்குரியதன்று. ஒருவரைப் பார்த்த மாத்திரத்தில் அவரது உள்ளத்தின் உணர்வுகளை எல்லாம் யார் உள்ளது உள்ளபடி அறிந்து கொள்கிறாறோ அவரைத் தெய்வீக மகா புருஷர் என்று கூறலாம். இத்தகைய அருட்திறம் கொண்டவர்களது உள்ளத்தில் ஆன்மீக நாட்டம் மேலெழுந்து அவரை வழிப்படுத்துவதோடு ஆன்மநேயத்தையும் வளர்க்க பேருதவியாக அமைகின்றது.


மானிடராகிய நாம் உலகில் நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்குப் பல வழிகள் உள்ளன. அவற்றில் மிகவும் முக்கியமானது அறிவிலும், ஒழுக்கத்திலும், தவத்திலும் சிறந்த பெரியோர்களைத் துணையாகக் கொள்ளுதல் ஆகும். அத்தகைய பெரியோர்கள் இறைவனை அடையும் வழியை உணர்ந்திருப்பதோடு, பிறரை இறைவனை நோக்கி வழிநடத்தக்கூடியவராகவே இருப்பார். அவரையே நாம் ஞானி, யோகி, சித்தர் என்று கூறிக்கொள்கிறோம்.

அந்த வகையில் யாழ்ப்பாணத்து சித்தர் பரம்பரையில் ஒருவராகத் தோன்றியவர்தான் யோகர் சுவாமிகள். இவரது குருவாக விளங்கிய செல்லப்பா சுவாமிகளினால் ஆட்கொள்ளப்பட்டு பூரண ஞானம் பெற்ற தவயோகியாகத் திகழ்ந்தவர் இவரது அருட்திறத்தை உணர்ந்தவர்கள் உலகில் பல பாகங்களிலும் வாழ்வதோடு அவரது மேன்மையை பறைசாற்றிக் கொண்டு இருக்கின்றார்கள். அத்துணை பெருமை வாய்ந்த யோகர் சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசை தினம் 10.04.2014 வெகு விமரிசையாக உலகின் பல பாகங்களிலும் வாழும் அவரது சீடர்களினால் கொண்டாடப்பட்டது.

குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் குருபூசை நிகழ்வு மிக சிறப்பான முறையில் நடைபெற்றது. சுவாமி அவர்களால் நிர்மாணிக்கப்பட்ட சிவதொண்டன் நிலையம், கொழும்புத்துறையில் அவர் நினைவாலயத்தில் மற்றும் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இன்னும் பல இடங்களில் குருபூசை நிகழ்வு இடம்பெற்றது. சுவாமி அவர்களின் குருபூசை நிகழ்வினால் அன்றைய தினம் யாழ் நகரம் புதிய எழுச்சி பெற்றது என்றே சொல்லலாம்.

இத்தகைய செயற்பாடுகள் யாழ் குடா நாட்டில் உள்ள கிராமங்கள்தோறும் இடம்பெற வேண்டும். சுவாமிகள் இருந்த காலத்தில் அவர் போகாத இடமே இல்லை என்றே கூறலாம். அந்த வகையில் ஐம்பதாவது ஆண்டு குருபூசை நிகழ்வு இந்த ஆண்டு முழுவதும் அவரது அடியார்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து பல இடங்களில் நடாத்தி இளம் சமூகத்தினரோடு நாமும் எழுச்சி பெறுவோமாக.

# சைவ கலை பண்பாட்டுப் பேரவை வாழ்க



சந்நிதியான் ஆச்சிரம சைவகலைபண் பாட்டுப் பேரவை
சாதிக்கும் கரும மொன்றோ – அதன்
சரித்திரம் எழுத முடியுமோ

கண்போல அன்னதானம் கருணையுடன் செய்வதனை
காணுங்கள் அடியார்களே – சந்நிதி
கந்தனென்றே எண்ணிப் பாருங்கள்

கந்தனை நம்பினாலும் கழலடி வாழ்பவரை
கருத்தில் உறுப்பில் குறைவோரை – சபையார்
கை கொடுத்து ஆதரிக்கிறார்

வருடப் பிறப்பு நாளும் வரும்தீபா வளிநாளும்
புதிய புடைவை கொடுப்பார் – அன்றி
பொறுமை யுடனுங் காப்பார்

பூண்ட விரதம் பிடிப்போர் நீண்ட நோய் உள்ளவர்கள்
ஆண்டு சந்நிதி யமர்ந்தோரை – சபையார்
ஆகவேண்டிய தெலாம் செய்கிறார்

வள்ளிதெய் வானை மணாளன் புள்ளி மயில் வாகனன்
ஆறுமுகன் சந்நிதியானை – வேண்டிடின்
அனைத்தும் அள்ளித் தருவானே

சந்நிதி யாச்சிரமம் பண்பாட்டுப் பேரவை
சார்ந்தென்றும் வாழியவே – அந்தச்
சபையுடன் தருமங்கள் செய்பவர் யாவரும்
சார்ந்தென்றும் வாழியவே.


–முதுபெரும் புலவர் வை.க. சிற்றம்பலம் அவர்கள்–

# ஆச்சிரம சுவாமிகளுக்கு "லங்கா இரத்தின ஜோதி" விருது

சந்நிதியான் ஆச்சிரமத்தின் பல்வேறு சமுதாயப் பணிகளையும் கௌரவித்து ஆச்சிரம பீடாதிபதி மோகனதாஸ் சுவாமிகளுக்கு "லங்கா இரத்தின ஜோதி" விருது வழங்கப்பட்டுள்ளது. பாரம்பரிய சுதேச வைத்திய பிரதியமைச்சர் பண்டு பண்டாரநாயக்க அவர்களால் ஆச்சிரம சுவாமி அறையில் வைத்து இவ்விருது வழங்ப்பட்டது.









20.04.2014 ஞாயிறு அன்று காலை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடந்தேறிய இவ் வைபவத்திற்கு, யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி ந. யோகராஜன் அவர்கள் முன்னிலை வகித்தார். பிரதியமைச்சர், பணிப்பாளர் இரு வருக்கும் சுவாமிகள் திருநீறு பிரசாதம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவித் தார்கள்.

வட இலங்கை சுதேச வைத்திய சபையினரால் வழங்கப்பட்ட "லங்கா இரத்தின ஜோதி" விருதானது, சந்நிதியான் ஆச்சிரமத்தின் பல்துறை சார்ந்த சமுதாயப் பணி களுக்காக வழங்கப்பட்ட உயர் கௌரவிப்பு என்பது இங்கு குறிப்பிடவேண்டியதொன்று.



பிரதியமைச்சர், தொழில்நுட்பக் கல்லூரி பணிப்பாளர் ஆகியோருடன் பேரவை யினரும் ஆச்சிரமத்து அனைத்து ஊழியர்களும் சுவாமிகள் பல்லாண்டு காலம் வாழவும் பணிகள் தொடரவும் வாழ்த்துகின்றோம்.

# சித்திரைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**நா. உமாசங்கர்**
(கயூரி வீடியோ விஷன், அச்சுவேலி)

**நா. குகன்**
(குகன் ஸ்ரூடியோ, பருத்தித்துறை)

**பொ. பாலசிங்கம்**
(பத்தமேனி, அச்சுவேலி)

**இராசையா சற்குணதாஸ்**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)

**திருமதி ஸ்ரீனிவாசன்**
(பழம்றோட், கந்தர்மடம்)

**Dr R. பாக்கியநாதன்**
(பொன்னையா வைத்தியசாலை, திருநெல்வேலி)

**திருமதி சிவராஜா**
(நல்நடத்தை உத்தியோகத்தர், கொழும்பு)

**க.வ. இரவீந்திரநாதன்**
(விஞ்ஞானபீடம், யாழ் பல்கலைக்கழகம்)

**கு.மு. இராஜேந்திரா**
(வட்டுக்கோட்டை)

**வீ. கிருஷ்ணராஜா**
(ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி)

**சி. கனகசபாபதி**
(சிவன் கோயிலடி, ஆவரங்கால்)

**மா. குலநாதன்**
(நாதன் கராஜ், ஆவரங்கால்)

**க. பாலசுப்பிரமணியம்**
(பதிவாளர், இமையாணன்)

**ஐயாத்துரை முருகதாசன்**
(யாழ். போதனா வைத்தியசாலை பரிசோதகர்)

**செ. சிவராசா**
(வாசிகசாலையடி, உடுப்பிட்டி)

**S. தர்மபாலகிருஷ்ணன்**
(தும்பளை பருத்தித்துறை)

**த. நடேசன்**
(உரும்பராய் தெற்கு, உரும்பராய்)
**க. கிரிதரன்**
(திரு இல்லம், கரவெட்டி)
**வீரையா சிவஞானம்**
(நவக்கிரிமேற்கு, புத்தூர்)
**க.கு. கிருபாகரராசா**
(பிரதானவீதி, ஆவரங்கால்)
**இ. மனோகரன்**
(மனோ லைற், கோப்பாய்)
**சி. நந்தகுமார்**
(வங்கி ஊழியர், உரும்பராய்)
**ச. கனகராசா**
(துஷி மினி சினிமா, ஆவரங்கால்)
**சின்னத்தம்பி கிருஷ்ணானந்தன்**
(உமாபதி தொலைத்தொடர்பகம், உரும்பராய்)
**வ.க. சாம்பசிவம்**
(வில்லூன்றி, யாழ்ப்பாணம்)
**சி. அமிர்தசாகரன்**
(அம்பாள் மோட்டோர்ஸ், ஆவரங்கால்)
**தி. பாலசிங்கம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**சி. சுகிர்தலிங்கம்**
(புலோலி கிழக்கு, பருத்தித்துறை)
**T. இரவீந்திரதாஸ்**
(சாமியன் அரசடி, கரவெட்டி)
**தலைவர்**
(சுண்ணாகம் ப.நோ.கூ. சங்கம்)
**உரிமையாளர்**
(ஏகாம்பரம் ரெக்ஸ், யாழ்ப்பாணம்)
**க. ஞானச்சந்திரன்**
(நாகலிங்கம்வீதி, கொக்குவில்)
**ஐ. வேலாயுதர்**
(வேல்வாசம், கோப்பாய்)
**ஐ. நற்குணநாதன்**
(உடுவில், சுண்ணாகம்)
**தம்பு சற்குருநாதன்**
(ஏழாலை மேற்கு, சுண்ணாகம்)

**இரா. சிவலிங்கம்**
(கேசரிவிலா, கரவெட்டி)
**வே. சந்திரசேகரம்பிள்ளை**
(சிறுப்பிட்டி, நீர்வேலி)
**K. இராமச்சந்திரன்**
(சங்கானை)
**த. இராஜசிங்கம்**
(நீர்வேலி)
**ம. புலேந்திரன்**
(கரணவாய், கரவெட்டி)
**கி. தவராசா**
(காந்தியூர் புலோலி)
**V. கனகநாயகம்**
(கனகேந்திரா தொலைத்தொடர்பு நிலையம், இணுவில்)
**உரிமையாளர்**
(அரவிந் போட்டோ, ஆனைப்பந்தி)
**ஐ. சத்தியபாலன்**
(பலாலி வீதி, உரும்பராய்)
**இ. ஸ்ரீஸ்கந்தராம்**
(உப தபாலதிபர், உப அஞ்சல் திணைக்களம், சுண்ணாகம்)
**செல்வி சந்திரலிங்கம் மாதுமை**
(இன்பர்சிட்டி, பருத்தித்துறை)
**சுப்பிரமணியம் சுரேஸ்குமார்**
(மயிலணி வீதி, சுண்ணாகம்)
**அதிபர்**
(தமிழ்க் கந்தையா வித்தியாலயம், கந்தரோடை)
**வி. செல்வரெத்தினம் J.P**
(அராலிமத்தி, வட்டுக்கோட்டை)
**ஐ. குகேந்திரராணி**
(ஐயனார் கோயிலடி, சுண்ணாகம்)
**N. பாலசுப்பிரமணியம்**
(நீர்வேலி வடக்கு)
**ம. கந்தையா**
(சிவன்கோவிலடி, சாவகச்சேரி)
**க. மகேந்திரன்**
(சங்கத்தானை, சாவகச்சேரி)

**மா. தங்கவேல்**

(போடிங் றோட், பருத்தித்துறை)

**செல்வி பாலாம்பிகை கந்தசாமி**

(கட்டைவேலி, கரவெட்டி)

**A. தயாவதி**

(வேம்படி, வல்வெட்டித்துறை)

**S. தங்கேஸ்வரா**

(காட்டுப்புலம்)

**ம. சிவானந்தம்**

(நாவலர் றோட், யாழ்ப்பாணம்)

**எஸ்.ரி. குமரன்**

(மல்லாகம்)

**பொ. காசிலிங்கம்**

(கொக்குவில்)

**கா. செல்லத்துரை**

(உடுவில், சுண்ணாகம்)

**வீ. புஸ்பநாதன்**

(உரும்பராய் வடக்கு)

**சந்திரசேகரம் மகிந்தன்**

(சிறுப்பிட்டி மேற்கு)

**தர்சினி பகீரதன்**

(உப தபாலதிபர், நீர்வேலி)

**கு. குணரூபன்**

(மீசாலை கிழக்கு)

**வ. ஆறுமுகம்**

(இளை. அதிபர், ஆவரங்கால்)

**கி. வரதராசன்**

(அச்சுவேலி தெற்கு)

**அ. சந்திரகுமாரன்**

(சந்திரகோட்டம், சுழிபுரம்)

**வி. நாகம்மா**

(பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்)

# இறைவனை விசாரித்துக் கருமமாற்றுவோம்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

சிவபெருமான் சைவ சமயிகளால் முழுமுதற் கடவுளாகப் போற்றித் துதிக்கப்படுகிறார். "உலகத்திற்குக் கருத்தா சிவபெருமான்", என நாவலர் பெருமான் தமது சைவ வினாவிடை நூலில் குறிப்பிட்டுள்ளார். விநாயகர், முருகன், வைரவக் கடவுள், வீரபத்திரக் கடவுள் நால்வரும் சிவபெருமானுடைய திருக்குமாரர்கள் ஆவர். இக்கடவுளர்களும் சிவபெருமானும் வேறல்லர். நாமங்கள் வேறு வேறாக இருப்பினும் கடவுள் ஒருவரே என்பது சைவத்தின் நிலைப்பாடு ஆகும். "சைவம் சிவனுடன் சம்பந்தமானது" எனத் திருமூலர் தெளிவுபடுத்தி உள்ளார். சைவ சமயம் வரலாற்றுக் காலத்துக்கு முற்பட்ட தொன்மையைக் கொண்டதும், உலகின் மூத்த சமயமுமாக விளங்குகிறது.



சிவபெருமான் ஆன்மாக்களின் ஈடேற்றத்தின் பொருட்டு, அவற்றின்மேல் கொண்ட அளப்பருங் கருணையினால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் தமது சக்தியின் துணைகொண்டு செய்வார். சிவபெருமானுக்குச் சக்தி உமாதேவியார். "சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்கிறது திருவருட் பயன் என்னும் சைவ சித்தாந்த நூல்.

சிவபெருமான் என்றும் உள்ளவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லவர். ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதியாக உள்ளவர். அருவம், அருவுருவம், உருவம் என்னும் திருமேனிகளைக் கொள்பவர். ஆன்மாக்களுக்கு அருள் புரிவதற்காகவே இத் திருமேனிகளைக் கொள்வார். ஆன்மாக்கள் தத்தம் பக்குவ நிலைக்கேற்ப, அவர்கள் விரும்பிய திருமேனியில் சிவபெருமானை வழிபட்டு உய்வு பெறலாம்.

சிவனே நமது முழுமுதல், நமது வாழ்முதல், எமக்கெல்லாம் உயிர்க்குயிர் ஆனவர். எனவே, சிவம் என்னும் பரம்பொருளுடன் ஆதியிலிருந்து, சம்பந்தப்பட்டவர்களே நாம் என்பது உணரப்படவேண்டியது. நாம் உய்வுபெறுவதும்; அவர் நமக்குத் தநு, கரண, புவன, போகங்களை வழங்கி நம்மை வாழ்விப்பதும், நாம் சிவனோடு அநாதிமுதல் கொண்டுள்ள தொடர்பினால் ஆகும். உயிர்களாகிய எமக்குப் பதியாக விளங்குகிறார். நாம் சிவபெருமானை நினைந்திருப்பினும் சரி, மறந்திருப்பினும் சரி, சிவன் எம்மை ஒருபோதும் மறந்திருப்பதில்லை. சிவம், அங்கிங்கெனாத படி எங்கும் எல்லாவற்றிலும் நீக்கமற நிறைந்திருக்கிற பரம்பொருள். அந்த வகையில் எம்மிலும் உள்ளார். எம்மில் உள்ள இறைவனால் எம்மை எப்படி மறக்க முடியும்?

எங்கள் பதியை என்றென்றும் மனத்தால் நினைப்பதும், துதிப்பதும்; வாயினால் அவன் புகழ் பாடிப் பரவுவதும், பேசுவதும்; மெய்யினால் பதிக்குத் தொண்டு செய்வதும், கைகூப்பித் தொழுவதும் நமது தார்மிகக் கடமையாகும். எந்தக் கருமத்தையோ செயலையோ

**பிரார்த்தனை செய்யும் மனம் எப்போதும் இளமையாய் இருக்கும்.**

முன்னெடுப்பதற்கு முன்னர் இறைவனை உசாவி, விசாரித்து ஒப்புதல் பெற்ற பின்னரே, அவற்றைச் செய்ய வேண்டும். அதுவே தர்மம் ஆகும். விளைவுகள் தனக்கும் பிறருக்கும், எக்காலத்திலும் நன்மை தருவனவாயும், தீமை பயக்காதனவாயும் அமையும். இறைவனின் ஒப்புதல் இன்றி, தன்னிச்சையாக ஆற்றப்படும் கருமங்கள், தமக்கும் பிறர்க்கும் தீமைகளையே விளைவிக்கும். அவை இறைவனால் விரும்பப் படாத பாவகாரியங்கள் ஆகிவிடுகின்றன.

கடவுளை விசாரித்தல் என்பது நாம் செய்ய விழையும் கருமம், கடவுளால் விரும் பப்படுவதா அல்லது விலக்கப்பட்டதா என் பதை ஆராய்ந்து தெளிதல். இதனையே விளைவறிந்து செயல்புரிதல் என்பர். குறித்த கருமம் அல்லது செயல் தர்மமா, அதர்மமா; நீதியானதா, அநீதியானதா; பின்விளைவுகள் எவ்வாறு அமையும் என்பவற்றை முன்கூட்டியே சுருதி, யுக்தி, நூல்கள், அனுபவம்மூலம் ஆராய்ந்து தெளிந்து, நல்லனவாயின் அக்கரு மங்களை ஆற்றுதல், அல்லனவாயின் அவற்றை ஆற்றாது விடுதல்; கடவுளை விசாரித்து, ஒப்புதல் பெற்று கருமமாற்றுதல் என்னும் செயன்முறையின் உள்ளடக்கம் ஆகும்.

சிவபெருமானால் அருளப்பட்ட வேத ஆகமங்கள் உள்ளன. மற்றும் உபநிடதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் என்பன அறம், நீதி உரைக்கின்றன. வேதசாரமாக, நாயன்மார் களால் பாடப்பெற்ற தேவார திருவாசகங்கள் மற்றும் திருமுறை நூல்கள், கடவுளால் விரும் பப்படுபவைகள் எவை என்பதையும், விலக்கப் பட்டவைகள் எவை என்பதையும் கூறுகின்றன. திருமந்திரம் தோத்திர சாத்திர நூலாக உள் ளது. திருக்குறள் நீதி உரைக்கின்றது. மெய் கண்ட சாத்திர நூல்கள் உள்ளன. இவற்றை ஆராய்ந்து இறைவனால் விதிக்கப்பட்டவை எவை, விலக்கப்பட்டவை எவை என்பதை அறிந்து கொள்ளலாம். கடவுளால் விதிக்கப் பட்டவை புண்ணியங்கள் என்றும் நல்வினை கள் என்றும்; விரும்பப்படாது விலக்கப்பட் டவை பாவங்கள் என்றும் தீவினைகள் என்றும் நூல்கள் கூறுகின்றன. நல்வினைகளைச் செய் பவர், இன்பத்தையும்; தீவினைகள் செய்பவர் துன்பத்தையும் அனுபவிப்பர். அதுவே இறை நீதியாகும்.

பெரியோர்கள், மூத்தோர்கள், குருமார் கள், ஆசிரியர்கள் மூலமாகவும் இறைவன் அறத்தை, நீதியை, விழுமியங்களை நமக்கு உணர்த்தி வருகிறார். "மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்", என்றும், "தந்தை சொல் மிக்க மந்திரமில்லை" என்றும் மகுட வாசகங் கள் உள்ளன. இவர்களுக்குக் கீழ்ப்படிந்து, அவர்கள் சொற்கேட்டு, வாழ்க்கையை நடத்தி வந்தால், எமக்கு ஒரு கேடும் நேராது; ஒரு பொல்லாப்புமில்லை. இந்நடைமுறையும் இறைவனை விசாரித்துக் கருமமாற்றுதல் ஆகும்.

"அன்பே சிவம்", என்பது திருமந்திரம் தரும் செய்தி. "அன்புக்குமுண்டோ அடைக் குந் தாழ்" என்கிறது வள்ளுவம். அன்பு வடிவமாக, அருட் பிழம்பாக, கருணைக்கட லாக சிவம் விளங்குகின்றது.

அன்பினைப் பேணுவது, ஆராதிப்பது என்பது சிவத்தை ஆராதிப்பது, வழிபாடு செய்வதாகும். "அன்பினில் விளைந்த ஆர முதே" என்று சிவபெருமானை விளிக்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள். உயிர்கள்மீது அன்பினைச் சொரிவது சிவபெருமானை மலர் கொண்டு அர்ச்சிப்பதாகும். சிவபூசை என்பது எப்படிச் செய்யலாம்? எல்லா உயிர்களுக்கும் வேற்றுமை காட்டாது, அன்பு செய்தல், சேவை செய்தல் சிவபெருமானால் உவந்து ஏற்கப் படும் சிவபூசை ஆகும். "மக்கள் சேவை, மகேஸ்வரன் சேவை" எனச் சைவம் கூறும் போது, சைவத்திற்குச் சமூக நோக்கு இல்லை என்று சிலர் கூறிவருவது, எத்துணை அபத்தம் என்பதைச் சிந்தித்து உணரவேண்டும். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பது அப்பர் திருவாக்கு. சேக்கிழார் பெரியபுராணத்தில்,

பெருமைப்படுத்தப்பட்டுள்ள, அறுபத்துமூன்று நாயன்மார்களும் தொண்டர்கள், திருத்தொண்டுகள் புரிந்து பெருமை பெற்றவர்கள். சாதி, மதம், குலம், கோத்திரம், பேதங்கள், ஏற்றத் தாழ்வுகள் பாராட்டாது ஆன்மநேய அடிப்படையில் சேவைகள், தொண்டுகள் புரிந்து சிவபெருமானின் திருவருளைப் பெற்றவர்கள். "தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே" என்பது ஔவை வாக்கு.

தூய அன்பிற்கு ஈடு இணையாக எதுவும் இல்லை. அன்பை ஆராதிப்பதான சிவபூசையை, தினமும் செய்து வருபவர்கள், உண்மைச் சைவர்கள். அவர்களின் சமயம், சனாதன சைவம். அதுவே மேன்மைகொள் சைவநீதி. சைவநீதி உலகெங்கும் பரவும் போதுதான், "வான்முகில் வழாது பெய்யும்; மலிவளஞ் சுரக்கும்; மன்னன் கோன்முறை அரசு செய்வான்; குறைவிலாது உயிர்கள் வாழும்; நான்மறை அறங்கள் ஓங்கும்; நற்றவம் வேள்வி மல்கும்" மற்றும் சாந்தி, அமைதி, சமாதானம் என்பன உலகில் மலர்ச்சி பெறும். உலகம் மனிதர்கள் வாழத் தகுந்த இடமாக விளங்கும் நிலைமை ஏற்படும் என்பது உறுதியாகி விடும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக
உலகமெலாம்"

## எல்லோரும் மன்னராக நீ வா

சித்திரைப் பெண்ணே, சித்திரப் பெண்ணே
சிரஞ்சீவியாக நீ வரந்தர வேண்டும்; இத்தரை
நித்திய நைமித்திய கிரியைகள் யாவுமே
நீடிய சுகம்தர ஆற்றிட வேண்டும் பெண்ணே!

அத்திபாரமாக இருந்த ஆன்மீக நம்பிக்கை
அவனியிலே ஏனோ நலிவடைகிறது! ஆம்
பத்தியமாக இதை சரிசெய்யா விட்டால்
பக்குவம், பண்பாடு கவலைக்கிடமாகிவிடும்

சித்திகரமாக இருந்த கல்விமுறை எல்லாம்
செழுமை தரு வாழ்வினைச் சோபிதமாக்கவில்லை,
உத்திகள் ஆயிரம் இங்கிருந்த போதும்,
உருப்படியாக எதை நாம் சாதித்தோம்?

வித்தியாசமாக வாழ விரும்புகிறார்கள் - அட
வீதியிலும் விதியோடு விளையாடுகிறார்கள்,
சத்தியம் சாகித்தியம் சாம்ராஜ்ஜியம் வென்றிட
சந்நிதிகள் தோறும் தவழ்ந்து வா சித்திரையே.

பத்திரமாகப் பிள்ளைகள் படித்திட நீ வா,
பச்சிளம் குழந்தைகள் பாதுகாப்போடு வாழ நீ வா,
எத்தினமும் எளிமையோடு விடிந்திட நீ வா,
ஏற்றமிகு 'ஜய' வருடத்தில் எல்லோரும் மன்னராக நீ வா.

-கே.எஸ். ராஜா -

ஒரு வினாடிப் பொறுமை பத்தாண்டு சுகத்தைக் கொடுக்கும்.



# போற்றித் திருவகவல்

(தொடர்ச்சி...

## சகத்தினுற்பத்தி

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## நிலைமண்டிலவாசிரியப்பா

மறைந்த

சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்

(யாழ்ப்பாணம் - காரைநகர்)



தெய்வ மென்பதோர் சித்தமுண் டாகி
முனிவி லாததோர் பொருளது கருதலும்
ஆறுகோடி மாயா சக்திகள்
வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின;
ஆத்த மானார் அயலவர் கூடி
நாத்திகம் பேசி நாத்தழும் பேறினர்;
சுற்ற மென்னுந் தொல்பசுக் குழாங்கள்
பற்றி யழைத்துப் பதறினர் பெருகவும்
விரத மேபர மாகவே தியருஞ்
சரத மாகவே சாத்திரங் காட்டினர்
சமய வாதிகள் தத்தம் மதங்களில்
அமைவ தாக வரற்றி மலைந்தனர்
மிண்டிய மாயா வாத மென்னுஞ்
சண்ட மாருதஞ் சுழித்தடித் தாஅர்த்
துலோகா யதனெனு மொண்டிறற் பாம்பின்
கலாபே தத்த கடுவிட மெய்தி
அதிற்பெரு மாயை யெனைப்பல சூழவும்

**பதவுரை:-**

தெய்வம் என்பது ஓர் சித்தம் உண்டாகி- கடவுள் என்று சிறப்பித்துச் சொல்லப்படுவதாகிய ஒருபொருள் உண்டு என்னும் எண்ணம் உளதாகி, முனிவு இலாதது ஓர் பொருள் அது கருதலும்- வெறுப்பில்லாததாகிய ஒப்பற்ற பொருளாகிய அதனை எண்ணப் புகுந்த அளவில், ஆறு மாயாகோடி சத்திகள்- உயிர்களின் உள்ளத்துள்ள உட்பகைகளாகிய விருப்பு வெகுளி ஈயாமை மயக்கம் செருக்கு பொறாமை என்னும் ஆறாகிய மாயையின் மிகப் பலவான ஆற்றல்கள், வேறு வேறு தம் மாயைகள் தொடங்கின- வேறு வேறாகத் தம் வஞ்சனைகளைச் செய்யத் தொடங்கின; ஆப்தமானார் அயலவர் கூடி- உண்மையைக் கூறும் நண்பர்களும் பிறரும் ஒன்றுசேர்ந்து, நாத்திகர் பேசி நா தழும்பு ஏறினர்- கடவுள் இல்லை என்று பொய் வழக்குப் பேசி அதனால் நாவும்

தழும்பேறப் பெற்றனர்; சுற்றம் என்னும் தொல் பசு குழாங்கள்- உறவினர் என்று சொல்லப் படும் பழமையான பசுக்கூட்டங்கள், பற்றி அழைத்து பெருகவும் பதறினர்- நம்மைப் பிடித்து அழைத்து மிகவும் பதறினர்; விரதமே பரம் ஆக வேதியரும் சரதம் ஆக சாத்திரம் காட்டினர்- விரதம் ஆற்றுதலே வீடுபேற்றினைத் தரும் மேலான சாத்திரமாகச் சொல்லி வேதம் உணர்ந்த பார்ப்பனரும் தமது கூற்றுக்கு உண்மையாம்படி நூல்களைக் காட்டினர்; சமய வாதிகள் தத்தம் மதங்களில்- சமயக் கணக் கர்கள் தங்கள் தங்கள் சமயங்களில், அமை வதாக அரற்றி மலைந்தனர்- வீடுபேற்றினைத் தரும் நெறி அமைந்திருப்பதாக வாய்விட்டுக் கதறி மாறுபட்டுக் கூறுவாராயினர்; மிண்டிய மாயவாதம் என்னும் சண்ட மாருதம்- நெருங் கிய மாயாவாதம் என்று சொல்லப்படும் சுழல் காற்றானது, சுழித்து அடித்து ஆர்த்து- சுழன்று வீசிப் பேராரவாரஞ் செய்யப்பெற்று, உலோ காயதன் என்னும் ஒள் திறல் பாம்பின்- உலோகாயதன் என்று சொல்லப்படும் ஒள்ளிய வலியினையுடைய பாம்பினது, கலா பேதத்த கடுவிடம் எய்தி- கலை வேறுபாடுகளையுடைய கொடிய நஞ்சு வந்து பொருந்தப்பெற்று, அகில் பெருமாயைகள் எனை பல சூழவும்- அந்நிலை யில் பெரிய வஞ்சனைகள் எவ்வளவோ பல நம்மை வந்து சுற்றவும்.

தெய்வம்- கடவுள். "தேயா விழுப் புகழ்த் தெய்வம் பரவுதும்" (கலி 103-76) என் புழிப்போல என்பது என்றது என்று சிறப்பித்துச் சொல்லப்படுவது எனப் பொருள்தந்து நின்றது. "வாய்மையெனப்படுவது" என்பதற்கு "வாய்மை யென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது" எனப் பரிமேலழகரும் (குறள் 291 உரை) "பேணின ரெனப்படுதல்" என்பதற்குப் "பேணினாரென்று நன்மக்கள் புகழ்ந்து கூறப்படுதல்" என நச்சினார்க்கினியரும் (கலி 47.21 உரை) உரைத்தமை காண்க. தெய்வம் என்பதோர் சித்தம் - கடவுள் என்று சிறப்பித்துச் சொல்லப் படுவதாகிய ஒருபொருள் உண்டு என்னும் சித்தம். சித்தம்- கருத்து. உலகியலில் நிக ழும் பேரிடர்களுக்கெல்லாம் தப்பித் தெய்வம் உண்டு என்பதொரு சித்தம் உண்டாதல் அரிதாகலின் "தெய்வமுண்டென்பதோர் சித்த முண்டாகி" என்றார். உண்டாகி என்னும் செய் தெனெச்சம் கருதலும் என்னும் தன்வினை முதல் வினையோடு முடிந்தது.

தனு கரண புவன போகங்களைத் தந்து உயிர்களை நன்னிலைக்கட் செலுத்தும் கடவுள் தன் அருட் செயலில் வெறுப்புச் சிறிது மின்மையின் "முனிவிலாதோர் பொருள்" எனக் கூறினார். முனிவிலாதது என வெறுப் பின்மை கூறப்படினும் விருப்பின்மையும் கொள் ளப்படும். அது பற்றிக் கடவுளை "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்றார் திருவள்ளு வரும். ஒரு சித்தம் ஒரு பொருள் என நிற்கப் பாலன செய்யுளாதலின் ஓர் சித்தம் ஓர் பொருள் எனத் திரிந்து நின்றன.

பொருளது- பொருளாகிய அதனை. தெய்வம் உண்டென்பதோர் சித்தமுண்டாகி அதனை ஆராய்வார்க்கு அதன்பொதுவியல் பன்றிச் சிறப்பியல்பு இனிது விளங்காமையின் அம்முதற் பொருள் "அது" என ஒரு குறிப்புப் பெயரளவாய் வைத்துச் சொல்லப்பட்டது. வேதத்துள்ளும் கடவுள் "அது" "அது" என வைத்துரைக்கப்படுதல் காண்க. இனி, அது என்பது பெயர்ப் பொருளை அசைத்து நின்ற அசைநிலை எனக் கொள்ளினுமமையும்.

ஆறு மாயாசத்திகள். கோடி மாயா சத்திகள் எனத் தனித்தனி இயைக்க. ஆறு மாயாசத்திகளாவன: உயிர்களின் உள்ளத் துள்ள உட்பகைகளாகிய விருப்பு, வெகுளி, ஈயாமை, மயக்கம், செருக்கு, பொறாமை என்பன. இவற்றின் ஆற்றலால் விரியும் வினை கள் எல்லையில்லாதனவாகப் பெருகி நிகழ் தலின் அவற்றை "ஆறுகோடி மாயாசத்திகள்" என்றார். கோடி என்பது ஈண்டு மிகப்பல என்னும் பொருளில் வந்தது. உட்பகை ஆறும் ஆணவத்தின் ஆற்றலால் அதன்வழி நிற்கும் உயிரின் உள்ளத்தின் கட்டோன்றுவனவாயினும்

**மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்.**

அவை தோன்றுவதற்குக் கருவியாய் அவ்வுயிரோடு உடன்நின்று உதவுவது மாயையேயாகலின் அவற்றை மாயையின் மேலேற்றி "மாயா சத்திகள்" என்றார். சக்தி, சத்தி என்னும் வட சொற்றிரிபு. மாயை- வஞ்சனை, "கூடம் புள்ளுவங் குத்திரங் கஞ்ச, மாயை தொடுப் பட்டிமை வஞ்சனையாகும்" என்பது பிங்கலந்தை (7:135)

ஆத்தம் என்பது ஆப்தம் என்னும் வடசொற்றிரிபு. ஆப்தமாவது உண்மை உரைத்தல். தாங்கண்ட உண்மையை மறையாது உரைப்பார் அன்பு மிக்க நண்பரேயாக

"ஏத்தேன் நாத்தழும்பேற" சத 13.
"கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்தி" பொற்சுண். 15.
"முல்லை, நாத்தழும்பேறப்பாடாதாயினும்" புற 200;9-10.

என வருவன காண்க.

சுற்றம். சுற்றத்தார். "பொலிந்த சுற்றமொடு, வளமனை மகளிர் குளநீரயர" (மதுரைக் 602-3) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. சுற்றத்தார் தாய் தந்தை முதலிய உறவுமுறையிலுள்ளவர்கள். பசு- பந்திக்கப்படுவது. பசுக்கள் கயிற்றால் கட்டப்படுவது போல உயிர்கள் ஆணவத்தினால் கட்டப்பட்டிருத்தலின் அவையும் பசு எனப்படும். சுற்றத்தவர்களாகிய உயர்திணைப் பொருள்களைப் பசுக்குழாங்கள் என அஃறிணையால் இழித்துக் கூறியது, தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி அதனைப் பற்றி ஆராயச் செல்வாரை அங்ஙனம் செல்லவொட்டாது தடுத்துத் தம்வழிப்படுத்தலாலுண்டாகிய வெகுளியினாலென்க. உயிர்கள் அநாதியே ஆணவத்தாற் பந்திக்கப்பட்டிருத்தலின் "தொல்பசு" என்றார். அன்றியும் மக்கட் பிறப்பு உண்டாய காலந் தொடங்கிச் சுற்றத் தொடர்பும் தொடர்ந்து உளதாகலின் "தொல்பசு" என்றார் எனினுமாம்.

கடவுள் நினைவுடையாரான இவர் அந்நினைவிலேயே அழுந்தி நம்மைப் பாதுகாத்தலை விட்டுப் பிரிவரே என்னும் வருத்தம் பெரிதுடையராய்ச் சுற்றத்தார் மிகப் பதைத்து அவரைத் தம்மாட்டு ஈர்த்தலின் "சுற்றமென்னும் தொல்பசுக் குழாங்கள் பற்றியழைத்துப் பதறினர் பெருகவும்" என்றார். பெருகவும் பதறினர் என மாற்றிக் கூட்டிப்பொருள் கொள்க.

வேதியர் என்றது ஆரிய வேதங்களை ஓதியுணர்ந்த மீமாஞ்சகரை. அவர்கள் வேள்வி முதலிய விரதங்களை அனுட்டித்தலே வீடுபேற்றினைத் தரும் என்றும், அதனின்றும் வேறாகக் கடவுள் என்பதொரு பொருள் வேண்டா எனவும், வேதம் நித்தியம் என்றும், அதில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலும் உறுதி பயக்கும் என்றும் கூறித் தம் கூற்றுக்கு அவ்வேதங்களையே சான்றாகக் காட்டுதலின் "விரதமே பரமாக வேதியருஞ், சரதமாகவே சாத்திரம் காட்டினர்" என்றருளிச் செய்தார். தெய்வம் உண்டெனபதோர் சித்தம் உண்டாகியமைக்கு இவர் கூற்று முரண்பாடாதல் காண்க.

விரதம்- நோன்பு. பரம் என்பது கடவுளை உணர்த்தும் வடசொல். சரதம்- உண்மை. "இதுவே வேத முடிவிது சரதமென்றான்" (கம்ப. இரணியன்வதை 122) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

லின் அவரை "ஆப்தமானார்" என்றார். அயலவர் என்றது தம்பாற் பகையும் நட்புமில்லாத நொதுமலரை. ஆப்தமானாரும் அயலவரும் என உம்மை விரிக்க. இவ்விரு திறத்தினரும் நாத்திகராதலின் "நாத்திகம் பேசி" என்றார். நாத்திகம் என்பது "நாஸ்திக்யம்" என்னும் வட சொற்றிரிபு. நாத்திகம் என்பதற்குக் கடவுள் உண்மையை மறுப்பது என்பது பொருள், நாத்தழும் பேறினர் என்றது மிக அழுத்திப் பல கால் உரைத்தலால் நாவில் தழும்பேறப் பெற்றனர் என்றவாறு.

"சரதமுடையர் மணிவாய் திறக்கிற் சலக்கென் பவே" (57) என்னும் திருக்கோவையார் உரையில் சரதம் என்பதற்கு மெய் எனப் பேராசிரியர் உரைத்தமையுங் காண்க. சாத்திரம்- சாஸ்திரம் என்னும் வட சொற்றிரிபு. நூல்கள் என்பது பொருள்.

சமயவாதிகள்- சைவமல்லாத ஏனைச் சமயத்தவர்கள். அவர்கள் சமயங்கள் உலோ காயதம் பௌத்தம் சாங்கியம் நையாயிகம் வைசேடிகம் மீமாஞ்சகம் என்பன. புறச்சமயத் தவர்களும் அகச்சமயத்தவர்களுமாகிய சமயக்கணக்கர்கள் தங்கள் தங்கள் சமயங் களிலே உறுதியாகிய பயனைத்தரும் நெறி அமைந்திருப்பதாக வாய்விட்டுக் கதறித் தம் முண் மாறுபட்டுக் கூறுதலின் "சமயவாதிகள் தத்தம் மதங்களில் அமைவதாக அரற்றி மலைந்தனர்" என்றருளிச் செய்தார்.

புறச்சமயங்கள் உலோகாயதம் புத்தம் சமணம் மீமாஞ்சகம் பஞ்சராத்திரம் பாட்டா சாரியம் என்பன. அகச்சமயங்கள் வைரவம், வாமம் காளாமுகம் மாவிரதம் சாதீதம் பாசுபதம் என்பன. இச்சமயங்களுள், "விரதமே பரமாக வேதியரும், சரதமாகவே சாத்திரம் காட்டினர்" என்பது மீமாஞ்சகமதத்தையும், பின்னர் கூறப்படும் மாயாவாதம் என்பது சங்கராசாரியர் மதத்தையும், உலோகாயதன் என்பது புறச்சமயங்களுள் ஒன்றாகிய உலோ கயதமதத்தையும் விதந்தெடுத்துக் கூறியன வாகும்.

தன் கொள்கையைத் திறம்பட எடுத் துரைக்கும் திட்பமுடைமையால் "மிண்டிய மாயாவாதம்" என்றார். மாயாவாதத்தின் கொள்கை கடவுள் என்னும் பொருள் ஒன்றன் றிப் பிறிதொரு பொருளும் இல்லை என்பது. நியாய நூல் அளவைகளினால் அத்தன்மை யாகத் தங்கொள்கையை எடுத்து இடித் துரைத்து ஆரவாரஞ் செய்யுந் தன்மைபற்றி "மாயாவாத மெனுஞ் சண்ட மாருதஞ் சுழித் தடித் தார்த்து" என்றார். ஆர்த்து என்னும் செய்தெனெச்சத்தை ஆரவாரிக்கப்பட்டு எனச் செயபாட்டெச்சமாக்குக.

உலோகாயதன்- உலோகாயதம். மகர னகரப் போலி. "அகனமர்ந்து செய்யா ளுறையும்" (குறள்84) என்புழிப்போல. உலோ காயதம் மாதரே தெய்வம்; போகமே மோட்சம் எனக் கூறுவது. உலோகாயத சமயக் கொள்கை பொதுவறிவுடையாரைப் பெரிதும் மயங்கச் செய்து கெடுத்து விடுமாதலின் "ஒண்டிறற் பாம்பின் கலாபேதத்த கடுவிடம் எய்தி என்றார். உலோகாயதம் மிக்க வலிமை படைத்த பாம்பாகவும் அதனது பல்வேறு வகைப்பட்ட கலைகள் பாம்பின் விடமாகவும் உருவரஞ் செய்யப்பட்டன.

(தொடரும்...

காடுமேடு மலையாவும் குடிகொண்டாய்
கையிலை நாதர் பெற்றெடுத்த குமரேசா
வீடும் நாமும் உன்துணையே வடிவேலா
வீரவேலைக் கைக்கொண்ட குருநாதா
பாடும்பணி யைப் பணியாய் அருள்வாய்
பதம் நாடித் தினம்தொழ வினையோட்டு
கூடும் பக்தரோடு சேர்ந்துன் புகழ்பாட
குவலயத்தில் நல்மனம் தந்து நிறைவாக்கு முருகா

-சின்னப்பு தனபாலசிங்கம்-

தர்மம் செய்து, யாரும் என்றும் ஏழையானதில்லை.

# ஆலயமும் சுகவாழ்வும்

– செல்வி பா. வேலுப்பிள்ளை அவர்கள் –

மனிதன் வாழுங்கால் உடல் வலிமையோடு (ஆரோக்கியம்) வாழ வேண்டும். உடல் ஆரோக்கியத்திற்கு போஷாக்கான உணவு, சுத்தநீர், தூய காற்று, உடற்பயிற்சி, அளவான தூக்கம், ஓய்வு இவையாவும் அவசியம். உள வலிமைக்கு ஆலய வழிபாடு, தினசரி தியானம், ஜெபம், யோகம், சத்சங்கம், கூட்டுப் பிரார்த்தனை அவசியம். உடல் நலம் கெடுமாயின் வைத்தியரை நாடவேண்டும். வைத்தியரால் மாற்றமுடியாத உடல் நோயையும் உள நோயையும் மாற்றக்கூடிய ஒரு சிறந்த வைத்திய நிபுணர் இருக்கின்றார். அவரை யாரும் கண்டதுமில்லை; நினைப்பதுமில்லை. அவர் அருவமும் உருவமுமானவர்.

இன்றைய அவசர உலகில் பணம் தேடுவதே வாஞ்சை. உடம்பைக் கவனிக்க; கடவுளை நினைக்க நேரமில்லை. அயலானிலும் பார்க்க செல்வம், செல்வாக்கு, பட்டம், பதவி, பொன்னாடை, மாலையை விரும்பி ஓடி ஓடி உழைப்பு. வேளாவேளைக்கு உணவு, உறக்கம் இல்லை. குறுக்கு வழியில் பணம் தேடுவதே நோக்கம். இவை யாவும் எத்தனை நாளுக்கு? “ஓடி மீள்க என ஆடல் பார்த்திருக்கும் ஒருவன்” மேலேயுள்ளான் அல்லவா? “அரன் தன் பாதம் மறந்து செய்யும் செயல் யாவும் அவம்” நாள் நாளாக உடல்நலம் குன்றி நோய் பீடிக்க கவலையால் வைத்தியனிடம் ஓடுகிறான். பல வைத்தியர்களைச் சந்தித்தும், தகாத வழியில் தேடிய பணத்தைக் கொட்டியும் பலன் இல்லை. இப்போதுதான் “பெருமானே! ஆண்டவா! முருகா! மாறா நோயால் வருந்தும் என் நோயைக் குணப்படுத்து” எனக் கடவுளை வேண்டுகிறான். கோயிலுக்குச் செல்கின்றான்.

ஆங்கு எழுந்தருளிய இறைவன் உளநோயோடு உடல் நோயையும் மாற்ற வல்ல சிறந்த வைத்தியன். இதனாற்றான் இறைவனுக்கு வைத்தியநாதன், வைத்தீஸ்வரன் என்ற பெயர்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே ஆலயத்தை சுகவாழ்வளிக்கும் வைத்தியசாலை எனலாம்.

நம் முன்னோர் வாழ்க்கையை நோக்குவோம். இயற்கையில் விளைந்த உணவுகள், தோட்ட வேலைகள், ஏர் உழல், நீர் இறைத்தல், வண்டிச் சவாரி, பெண்கள் அம்மி அரைத்தல், மா இடித்தல், தண்ணீர்க் குடத்துடன் கைவீசி நடத்தல் போன்ற உடற்பயிற்சிகளுடன் பாட்டி வைத்தியமே கைக்கொண்டனர். வைத்தியரை நாடவில்லை. ஆனால் இன்று? அப்படியில்லை. விஞ்ஞான உலகம் இயந்திர வாழ்க்கை, இரசாயனம் கலந்த துரித உணவுகள், அஞ்ஞான வாழ்க்கை, புதுப்புது வியாதிகள்; ஏற்றாற்போல் வகைக்கோர் வைத்தியரும் வைத்தியங்களும், ஆனாலும் வியாதியை இலகுவில் காண்பதில்லை.

நம் முன்னோர், “நடந்தகால் சீதேவி இருந்த கால் மூதேவி” என உணர்ந்தவர்கள். பிரயாண வசதிகள் இல்லாத அந்தக் காலத்தில் பல மைல்கள் தூரம் கால்நடையாகச் சென்று கருமங்களாற்றினர். கதிர்காமம், கதிரமலை, சிவனொளிபாதம் போன்ற தலங்கட்கு குன்றும் குழியும் நிறைந்த காடுகள் மேடுகள் கொடிய வன விலங்குகளை எதிர்கொண்டும் கடவுள் நம்பிக்கையோடு பசி தாகம் எனப் பாராது கடுநடை நடந்து தரிசனம் செய்தனர். படியேறிச் செல்லும் கோயில்களுமுள. ஏன் துரித வாகன வசதியுள்ள இக்காலத்தில் செல்வச்சந்நிதி, வற்றாப்பளை அம்மன் ஆலயங்களிலிருந்து தாந்தாமலை, உகந்தை யூடாக பாதயாத்திரை போவதை நாம்

அறிவோம். யாத்திரையின்போது காலை மாலை சூரிய ஒளி மேனியில் பட கைவீசி நடக்கும்போது கைகளும் கால்களும் உறுதி அடைகின்றன. சுத்த காற்றை (பிராணவாயு) சுவாசிப்பதால் இரத்தோட்டம் சீராக அமை கிறது. உடலில் உள்ள துர்நீர் வியர்வையாக வெளியேறுகிறது.

மலைமீதுள்ள கோவில்களுக்கு ஏறிச் செல்லும்போது பலவகையான மருத்துவ மூலிகைச் செடிகளின் வாசனை, செடிகளை மேவிப்பாயும் சுனைநீரை அருந்தும்போது மனதிலும் உடலிலும் உற்சாகம், புத்துணர்ச்சி ஏற்படுகிறது. உடலில் உள்ள நோய்கள் தீர கிறது போன்ற உணர்வு. மாணிக்க கங்கை யானது மலைகளிலிருந்து ஊற்றெடுத்து வருகையில் கருங்கல்லை மேவிப்பாயும்போது பல்வேறு வகையான மருத்துவக் குணமுள்ள மூலிகைச் செடிகளின் சாரத்தையும் இழுத்துக் கொண்டு வருகிறது. கதிர்காமம், கதிரமலை ஏறிய பயிற்சியையும் மாணிக்க கங்கையில் நீராடும்போது உண்டாகும் உணர்வுகளை அநுபவிப்பதாலுணரலாம். ஏன் கடலோடு சங்க மிக்கும் தொண்டைமானாறு உப்புநீராக இருப் பினும் ஒருமுறை நீரில் மூழ்கி எழுந்தாலே வாதநோய், உடல்நோவு, சொறி, சிரங்கு, கரப்பன், புண் முதலிய நோய்கள் நீங்கு கின்றன. இதனால் செல்வச்சந்நிதி ஆலயம் சென்று பயன் அடைந்தவர்கள்; பயன் அடை பவர்கள் பலர். கோணேஸ்வரம் மலைக்குச் சில படி ஏறிச் செல்கிறோம். சமுத்திரக்காற்று உடலில் படுகிறது; கேதீஸ்வரம் பாலாவி ஆற்றில் மூழ்கி எழுகிறோம். உடம்பில் உற் சாகம்; மனதில் புத்துணர்ச்சி.

கடவுள் வழிபாட்டிற்கு உகந்தநேரம் அதிகாலை. சூரிய உதயம், ஆலய மணி ஓசை, பறவைகளின் ஒலி இறை உணர்வு தோன்றும். குளித்து தோய்த்துலர்ந்த ஆடை அணியும்போது சுத்தம் சுகாதாரம் பேணப் படுகிறது. சிலர் ஆலயங்களுக்குச் சென்று அங்குள்ள கிணறு, குளம், கேணி, ஆறுகளில் நீராடி புத்துணர்ச்சி அடைகிறார்கள்.

இப்போ கோயிலை அண்மித்து விட் டோம். கோபுரம் தெரிகிறது. நம்மை அறியா மலே கைகள் கோபுரத்தை நோக்கி உயர் கின்றன. நம்மைக் காக்கும் கடவுள் மேலே இருக்கிறார் என்ற உணர்வு. கோவிலுட் செல்லு முன் ஒருமுறை வெளிவீதியைச் சுற்றி வரு வோம். கால்களுக்குப் பயிற்சி. கால்களைக் கழுவி உட்செல்வோம். மனம் லேசாகிறது. உள்வீதியையும் மூன்றுதரம் சுற்றி வருவோம். பூசைமணி ஒலிக்கிறது. பூசகர் பூசை முடிந்து கர்ப்பூர தீபம் காட்டுகிறார். மூலமூர்த்தியின் உருவம் மனதில் பதிகிறது. "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள அளப்பரும் கரணங்கள் நான்கும் சிந்தையேயாக குணமொரு மூன்றும் சாத்வீகமேயாகும்" நிலை. கருங்கல்லினாலான மூலமூர்த்தியை உற்றுப் பார்க்கிறோம். கீழே உள்ள பீடத்தில் குழி அமைத்து அதனுள் அஷ்டபந்தன மருந்து சாத்தி மூலவரை எழுந் தருளச் செய்யப்பட்டிருக்கும். எட்டு வகையான மருந்துப்பொருட்கள் சேர்த்து தயாரிக்கப் பட்டதே அஷ்டபந்தனம். இந்த மருந்துப் பொருட்கள் சகல ரோகங்களையும் போக்கும் மருத்துவக்குணம் கொண்டது. இந்தப் பொருட் கள் உருவச்சிலையை இறுக்கமாகப் பிடித்துக் கொள்ளும். பால், தயிர் முதலாய பஞ்சதிர வியங்கள், வீபூதி, சந்தனம், குங்குமம், இளநீர் முதலாய அபிஷேகத் திரவியங்களால் திரு வுருவுக்கு மந்திரநீராட்டு (அபிஷேகம்) செய் யும்போது மருத்துவக் குணங்களுடைய பொருட்களோடு பீடத்திற் சாத்தப்பட்டுள்ள அஷ்டபந்தன மருந்துகளின் சத்தும் கலந்து கோமுகையில் தீர்த்தமாக வெளிவருகின்றது. அது இறைவன் பெயரால் வரும் மருந்து, நோய் தீரும் என்ற நம்பிக்கை. பூசை முடிந்து கர்ப்பூரத்தட்டை எம்மிடம் நீட்டுகிறார். கர்ப்பூர வாசனையும் நோய் தீர்க்கும் மருந்தே. அர்ச்சகர் தரும் வீபூதிப் பிரசாதங்கள், தீர்த் தம், பஞ்சாமிர்தம் யாவையும் மருந்தென எண்ணி வாங்கி அருந்துகிறோம். நோய் தீரும்

**கோபம் உள்ள இடத்தில் குணமும் உண்டு.**

என்ற நம்பிக்கை. தீராத நோய் நீங்கும் என எண்ணி அர்ச்சகர் வீபூதி மந்திரித்து போடுவது நூல்கட்டுவதிலும் மக்களுக்கு நம்பிக்கை.

அடுத்து கோயில் வழிபாட்டில் சரியை வழிபாடு முக்கியமானது. கூட்டுதல், கழுவுதல், மெழுக்கிடல், பூந்தோட்டத்திற்கு நீர் வார்த்தல், சுவாமி காவுதல், குடை கொடி ஆலவட்டம் தீவட்டி பிடித்தல், தேர்வடம் இழுத்தல் இவை யாவும் கை, கால், தோள்களுக்கு நல்ல பயிற்சி யாகும். தவிர ஆண்கள் அட்டாங்க (எட்டு உறுப்புகள்) நமஸ்காரம், அங்கப்பிரதட்சணம், பெண்கள் பஞ்சாங்க (ஐந்து உறுப்புகள்) நமஸ் காரம் அடி அழித்தல் செய்கையில் கை, கால், தோள்கள், இடுப்பு, சிரசுக்கு சிறந்த பயிற்சிகளாகும்.

நேர்த்திக்கடனுக்காக ஆடும் காவடி, கரகாட்டம் யாவும் ஒரே நேரத்தில் உடலுறுப் புக்களுக்குப் பயிற்சியாகிறது. ஏன்? சூரன் ஆட்டமும் பயிற்சியே.

விரதமும் கோயில் வழிபாட்டில் அடங் கும். அது மனக்கட்டுப்பாடு, உணவைக் குறைத்தல், உண்ணாது உபவாசம் இருத்தல், வெள்ளி, ஞாயிறு, சனி, அமாவாசை, பௌர் ணமி தினங்களில் விரதம் அனுட்டிப்பர். மகா சிவராத்திரி, கந்தசஷ்டி விரதநாட்கள் உடல் நிலைக்கேற்ப, பால், பழம், இளநீர் அருந்தி உபவாசம் இருப்பதுண்டு. ஆலயங்களில் திரு விழா தொடங்கிவிட்டால் கோயிலுக்குப்போய் வந்துதான் பானமோ உணவோ உண்பது என விரதம் இருக்கும்போது சீரண உறுப்புகட்கு ஓய்வு கிடைக்கும்.

இப்பயிற்சிகள் ஒழுங்காக நடக்கு மாயின் நோய் இல்லை. வைத்தியரை நாட வேண்டியதில்லை. நோயினால் மனக்கவலை, மனக்கவலையால் நோய். இரண்டும் நீங்க வேண்டுமாயின் மனம் நிம்மதியடைய வேண்டு மாயின், இறைவன் சந்நிதிக்குப் போவோம். அங்கே கோபுரம் வா வா என அழைக்கும். சிற்பங்கள் கலை வடிவங்கள் கண்ணைக் கவரும்; பக்த அடியார்களின் பஜனைப் பாடல்கள், மணியோசை, சங்கொலி, முரசொலி, செவிக்கு உணவாகும். சாம்பிராணி, ஊதுபத்தி, சந்தன வாசனை மூக்கைத் துளைக்கும். மந்திர உச் சாடணத்துடன் அர்ச்சகர் பூசை முடித்து கர்ப் பூர தீபம் காட்டுவார். மூலமூர்த்தியின் அருட் பார்வை எம்மை நோக்கியதாக இருக்கும். ஆலயச் சூழலில் வீசும் காற்றும் மெய்சிலிர்க்க வைக்கும். ஐம்பொறிகள் புலன்கள் ஒன்றித்த நிலை. கவலையும் இல்லை; நோயும் இல்லை.

வாரா வியாதிகளையும் தீரா வினை களைத் தீர்க்கும் இறைவனை நின்றும் இருந்தும் நடந்தும் ஆலயங்கட்குச் சென்று வழிபட்டு உய்தியடைவோம்.

## குருபூஜை தினங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மே | 01 | சித்திரை | 18 | வியாழன் | மங்கையற்கரசியார் |
| யூன் | 02 | வைகாசி | 19 | திங்கள் | சேக்கிழார் |
| | | | | | நமிநந்தியடிகள் |
| யூன் | 13 | வைகாசி | 30 | வெள்ளி | திருஞானசம்பந்தர் |
| | | | | | திருநீலகண்ட யாழ்ப்பாணர் |

# அருணகிரிநாதர் அருளிய
# கந்தரநுபூதி

[தொடர்ச்சி...

– வாரியார் சுவாமிகள் –



38. ஆதாளியை ஒன்றறியேனை அறத்
தீதாளியை ஆண்டது செப்புமதோ
கூதாள கிராத குலிக்கிறைவா
வேதாள கணம் புகழ் வேலவனே

### பதவுரை

கூதாள- கூதாள மலரை யணிந்தவரே! கிராத குலிக்கு இறைவா- வேடவர் குலத்தில் வளர்ந்த வள்ளிநாயகிக்குத் தலைவரே! வேதாள கணம் புகழ்- பேய்க் கூட்டங்கள் புகழ்ந்து துதிக்கின்ற, வேலவனே- வேற்படையையுடைய வரே! ஆதாளியை- வீண் பேச்சுக்களைப் பேசுபவனும், ஒன்றும் அறியேனை- நன்மை ஒன்றும் அறியாதவனும், அற தீதாளியை- மிகவும் தீக்குணம் உடையவனும் ஆகிய அடியேனை, ஆண்டது செப்புமதோ- ஒரு பொருளாகக் கருதி நீ ஆட்கொண்ட அருள் திறத்தைச் சொல்லுந்தரமோ?

### பொழிப்புரை

கூதாள மலரைத் தரித்தவரே! வேடர் குலப்பாவையாம் வள்ளிக்கு நாயகரே! பேய்க்கூட்டங்கள் புகழ்ந்து துதி செய்கின்ற வேலாயுதரே! வீண் பேச்சு பேசுபவனும், நலம் ஒன்றும் அறியாதவனும், மிகவும் தீய குணம் உடையவனுமாகிய அடி யேனை ஆட்கொண்ட உமது கருணைத் திறத்தை இத்தன்மைய தென்று சொல்லும் தரத்ததோ?

### விரிவுரை

**ஆதாளி:-**

ஆதாளி- வீணான - பயன் இல்லாத வெறும் டம்ப வார்த்தைகள்.

“என் பாட்டனார் பல்லக்கில் சென்றார். என் பாட்டி பன்னீரில்த்தான் காலலம்புவார். என் பாட்டன் தங்கக் கட்டிலில்த்தான் படுப்பார்” என்பான். ஆனால் இவ்வாறு சொன்னவன் பழங்கஞ் சிக்குத் ததிங்கிணத்தோம் போடுவான்.

"அகதியை மறவனை ஆதாளி வாயனை"

-(அவகுண) திருப்புகழ்

**ஒன்றறியேனை:-**

நன்மை ஒன்றும் அறியாதவன். உம்மை- தொக்கி நின்றது. நன்மையறிந்தவனே தீமையை விலக்கி அதனின்றும் விடுபடுவான்.

**அற தீதாளியை:-**

அற- மிகவும்.

"அறவே துயர் செய்து"

-கந்தபுராணம் (காசிபன் புலம்பு- 15)

தீதை ஆளுகின்றவன்- தீதாளி. காமம், வெகுளி மயக்கம் முதலிய குற்றங்களை உடையவன்.

**ஆண்டது செப்புமதோ?:-**

நற்குணமில்லாததோடு, தீக்குணங்களும் பூண்டிருந்த சிறியேனைக் குருவடிவாக வந்து நீ ஆட்கொண்ட அருட் பெருங்கருணைத் திறத்தை இப்படிப்பட்டதென்று கூற வொண்ணுமோ! கூற முடியாது.

**கூதாள:-**

கூதாளம் என்பது ஒரு செடி. இங்கே அதன் மலரைக் குறிக்கின்றது.

"முருகவிழ் கூதாள மாலிகை
தழுவிய சீபாத தூளியன்" -(இருகுழை) திருப்புகழ்
"முடியிற் கொண்ட கூதளம்"

-(அலகிலவுணரை) திருப்புகழ்

**கிராதக் குலி கிறைவா:-**

கொலை புரிகின்ற வேடர்குலப் பாவைக்கும் வலியச் சென்று அருள் செய்த வள்ளல் ஆதலின், வாசனையில்லாத கூதாள மலரையும் தரித்துக் கொண்டவன் ஆதலின் ஒன்றுக்கும் பற்றாத அடியேனையும் முருகன் ஆட்கொண்டான் என்று குறிப்பினால் உணர்த்துகின்றார்.

**வேதாள கணம் புகழ் வேலவனே:-**

மேற்கூறிய கருத்தையே வற்புறுத்தி வழி மொழிவார்போல், பேய்க் கூட்டங்கள் புகழ்ந்து துதிசெய்தால் அதையும் வேத மந்திரங்களைக் கேட்கும் திருச்செவியால் கேட்டு "பேஷ்" "சபாஷ்" என்று மெச்சியருளுகின்ற அவ்யாஜ கருணையுடையவன் முருகன் என்கின்றார்.

"பாணிகள் கொட்டும் பேய்கள் பிதற்றும்
பாடலை மெச்சும் கதிர்வேலா"

-(காவியுடுத்தும்) திருப்புகழ்

இப்பாடல் அருணகிரிநாதரது சரிதத்தைக் குறிக்கும்.

முருகன் அளவற்ற கருணையுடையவன். தீயவை புரிந்தாரையும் தூயவராக்கி ஆட்கொண்டருளுபவன்.

தீயவை புரிந்தா ரேனும் குமரவேள்திருமுன் உற்றால்
தூயவ ராகி மேலைத் தொல்கதி அடைவர் என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ? அடுசமர்இந்நாள் செய்த
மாயையின் மகனு மன்றோ வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்.

-கந்தபுராணம்.

கருத்துரை

வேலவரே! குற்றம் நிறைந்த சிறியேனை ஆட்கொண்ட நின் பெருங் கருணை பேசுந் தரமோ!

(தொடரும்...

## சந்நிதிக் கந்தன்

## கழற்கோர் கவிமாலை - 50

## “மங்களம் யாவும் ஈவான்”

சந்நிதி நாடு வோர்கள் நொந்தழு வாதை மாற
வெண்திரு நீறும் நூலும் தருவோனே
சங்கட மீயு நோய்கள் வந்துடல் மூடி டாது
சண்முக னாகு நீயும் காவாயோ?
உன்திரு வீதி யாறில் பின்னுக டாவி லேறி
உய்யருள் வாரி போல அருள்வேலா
ஒண்பத நேசர் வாழ சிங்கம தேறி யேழில்
வந்தருள் வாரு தேவென் றுரைகோவே
பன்னிரண் டாகு நாளில் நன்திரு வார வேயுன்
இந்திரவி மான மூர்ந்து அருளீசா!
பந்தமி லாத நாயன் முன்வினை பாறி நாளும்
தண்ணடி நீழல் வாழப் பெறுவேனோ?
மன்றுளன் சூல மோடு செங்கணன் பாணஞ் சேர
மன்பதை காவ லாகு வேலாகி
மங்கலங் கூடு வாழ்வை மண்ணினிற் காணு மாறு
மங்களம் யாவு மீய்சந் நிதியானே!

-இராசையா குகதாசன்-

பணத்திற்கு அடிமையாகி பாவத்தைச் செய்யாதே.

# இறை வழிபாடு

– செல்வி செ. ஜடா அவர்கள் –

இறைவன் ஒருவன் உளன். அவனருளாலே நாம் இயங்குகின்றோமெனும் திடமான நம்பிக்கை அன்றாட வாழ்க்கையில் உறுதிபெற வேண்டும்.

நினைப்பு, மறப்பு, விழிப்பு, நித்திரை, பிறப்பு, இறப்பு இவ்வாறான முக்கிய காரியங்கள் எங்கள் வல்லமையைக் கடந்து நிகழ்கின்றன. இக்காரியங்களை நடத்திவைக்கும் பொருள் நமது வல்லமையைக் கடந்த பொருள்.

கடவுள் எல்லாம் கடந்து நிற்பவன். இறைவனை ஏன் வணங்கவேண்டும்? மனித வாழ்க்கையில் இறைவனை உணராமல் வாழ முடியாதா? நாம் வணங்காவிடில் இறைவனுக்கு என்ன நஷ்டம்? இவ்வாறான வினாக்கள் எழுவது இயல்பு.

விலங்குகளும் உண்ணுகின்றன. உலாவுகின்றன. வம்சத்தை வளர்க்கின்றன. மனிதர்களாகிய நாமும் உண்ணுகின்றோம், உறங்குகின்றோம், மக்களைப் பெறுகின்றோம். இவை விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் ஒன்றாகவே அமைந்திருக்கின்றன. ஆனாலும், மனிதன் சிந்திக்கும் ஆற்றல் உடையவன். சிந்தித்து நற்செயல்களை ஆற்றுபவன். மக்களில் உத்தமனாக வாழ முயற்சிப்பவன். தெய்வ உணர்ச்சி ஒன்றாலேயே மனிதன் உயர்ந்தவனாகக் காட்சியளிக்கின்றான்.

மனிதன் செய்கின்ற பாவங்களுக்கெல்லாம் விமோசனம் உண்டு. ஆனால், நன்றி கொன்ற பாவத்திற்கு மட்டும் விமோசனமில்லை.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

சிறந்த புண்ணியம் நன்றி மறவாமையாகும். இந்த உடம்பையும், உடம்பின் உறுப்புக்களையும், உள்ளுறை கருவி கரணங்களையும் தந்தவன் இறைவன். இறைவனுடைய கருணையினால் இடையறாது பேசுகின்ற நாவினால் அவனுடைய நாமங்களைச் சொல்லுதலும், திருமுறைகளை ஓதுதலும், நன்றி பாராட்டுதலாகும். அவன் கொடுத்த தலையினால் வணங்குதல் நன்றி செலுத்துதலாகும்.

"தலையே நீ வணங்காய்
தலை மாலை தலைக் கணிந்து
தலையாலே பலி தேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்"

இறைவன் நமக்குத் தலை முதலிய கருவிகளைத் தந்தான் என்று தெரிவித்து, அக் கருவிகளை நோக்கி இறைவழிபாடு செய்யுங்கள் என்று அப்பர் சுவாமிகள் அறிவுரை அருளியுள்ளார். கருணையே வடிவான இறைவன் எங்களுக்கு மானிடப் பிறவியை வழங்கினான். நாம் பெற்ற இப்பெரும்பேற்றைப் பேணுதல் இறைவழிபாடேயாகும்.

காலையும், மாலையும் கடவுளை வணங்குதல் சந்தியாவந்தனம் எனப்படும். சம்- செம்மையாக, தியா- தியானித்து, வந்தனம்- வணங்குவது சந்தியாவந்தனமாகும். ஆன்றோர் தமிழில் காலைக் கடன், மாலைக்கடன் என்று கூறினர். பெற்ற கடனை திரும்பக் கொடாதது எத்துணைப் பெரிய பாவமோ, அத்துணைப் பெரிய பாவமாகும் இறைவனைக் காலை மாலையிலாவது வணங்காதிருத்தல். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பது அப்பர் சுவாமிகளின் குறிக்கோள். மேலும்,

"வாழ்த்த வாயு நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்தச் சென்னியுந் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்த வாவினை யேன்நெடுங் காலமே" என்றார்.

ஆகவே மானிட உடம்பை எடுத்த நாம் இப்பிறப்பின் பயனெய்த இறைவனை வணங்க வேண்டும். அறிவின் பயன் இறைவனை அறிவதாகும். கல்வியின் பயன் கடவுளை வழிபடுதலாகும்.

"கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஆர் எனின்"

என்பது வள்ளுவரின் வாக்கு.

இறைவனை வணங்காத் தலை எவ்வாறானது என்பதை,

"கோள் இல் பொறியில் குணம் இலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

எனத் திருவள்ளுவர் விளக்கியுள்ளார்.

கண், செவி, வாய் இருந்தும் அவைகள் செயற்படும் தன்மையில்லையேல் பயன் அற்றவையாகும். அவ்வாறே இறைவனை வணங்காத் தலையுமாகும். தலையை வைத்து சிறப்புக் காட்டியுள்ளார். சிந்திக்கும் ஆற்றலுடைய மனிதனின் கடவுள் உணர்வு கலவாத வாழ்க்கை, நிரம்பா வாழ்க்கையாகும்.

ஆகவே மனிதப் பிறப்பு எடுத்த நாம், இறை வழிபாடு இன்றியமையாதது என உணர்ந்து காலை - மாலை நேரங்களிலாவது தவறாது இறைவனை வணங்கி எடுத்த பிறப்பின் பயனெய்துவோமாக.

"அந்தியுஞ் சந்தியும் அன்பினி லவனைச்
சிந்தையில் நினையச் சிறப்புடை யவராய்ப்
பந்தம் யாவும் பற்றாது ஒழிந்து
நந்தா வின்ப நாடடை வாரே" -நற்சிந்தனை.




# வட இந்திய தல யாத்திரை

(தொடர்ச்சி...

– செ. மோகனதாஸ் சுவாமிகள் –

ஒரு காலத்தில் காசிராஜாவின் சந்ததியினரால் பராமரிக்கப்பட்டு வந்த இவ் அரண்மனை இப்போது இந்திய அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் உள் நுழைவதற்குரிய கட்டணத்தைச் செலுத்தி உள் நுழைந்தோம்.




உண்மையில் பார்க்கவேண்டிய ஒன்று. காசி ராஜாக்கள் பயன்படுத்திய அத்தனை பொருட்களும் பார்வையாளர்களைக் கவரும் வகையில் வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் அணிந்த உடைகள், அவர்களால் பாவிக்கப்பட்ட பலரக ஆயுத வகைகள், பிரயாணம் செய்த பல்லக்கு, சாரட் வண்டி, குதிரைவண்டி விதம்விதமான மோட்டார்கார் முதலியன அந்தந்த இடங்களில் பார்வைக்கு வைக்கப்பட்டு அதன் குறிப்புகளும் வைக்கப்பட்டுள்ளது. இத்தனைக்கும் பொருட்கள் உள்ள இடங்களுக்கு பாதுகாவலர்களும் கடமையாற்றி, வரும் பார்வையாளர்களை வழிப்படுத்துகின்றார்கள். அரண்மனையை யொட்டி கங்கை நதி பாய்ந்து செல்கின்றது. அரண்மனை மேல்மாடத்தில் இருந்து பார்க்கும் பொழுது காசி மாநகரம் முழுவதையும் பார்க்கக்கூடியதாக இருந்தது.

காசிராஜாவினால் வழங்கப்பட்ட 1300 ஏக்கர் நிலப்பரப்பில் பனாரஸ் இந்து பல்கலைக் கழகம் அமைந்துள்ளது. இந்த மிகப்பெரிய பல்கலைக்கழகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கான வளாகங்கள் தனித்தனியாக அமைந்துள்ளன. வளாகத்தினுள் காணப்படும் பெரிய கட்டிடங்களின் அமைப்பும் அதன் அழகும் எம்மைப் பிரமிக்க வைத்தது. அவ்வளாகத்தில் முற்றுமுழுதாக சலவைக்கற்களினால் கட்டப்பெற்ற விஸ்வநாதர் ஆலயத்தை வணங்கியபின் எமது குழுவினர் நாம் தங்கிய விடுதியை அடைந்து அன்று இரவு கங்கைக் கரையில் நடைபெறும் கங்கா பூசையில் வழிபாடு செய்வதற்குரிய ஒழுங்குகளை மேற்கொண்டோம். முதல்நாள் மழை காரணமாக போகமுடியாத அனைவரும் இன்று கங்கை பூசை காணுவதற்கு ஆவலோடு புறப்பட்டார்கள். நாம் இருக்கும் விடுதியில் இருந்து 1கி.மீ தூரத்தில் இருக்கும் கங்கைக் கரைக்கு அனைவரும் காலாற நடந்து சென்றார்கள். கங்கைக் கரையில் இடம்பெறும் பூசைவழிபாடுகளைக் காணும் நோக்கம் இருந்தபோதும், பூசை முடிந்து வரும்போது வீதியின் இரு மருங்கும் உள்ள வர்த்தக நிலையங்களில் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் வாங்குவதும் முக்கியமானதாக இருந்தது. அதன் பிரகாரம் ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு

**சேமிக்கக் கற்றுக்கொள் சிக்கனம் தானாக அமையும்.**


செய்து தத்தம் பயணப் பொதிகளின் சுமையைக் கூட்டினார்கள். இச் செயற்பாட்டினை அவதானித்த நான் அடுத்த நாள் மதியம் இடம்பெறும் புகைவண்டி பிரயாணத்தில் எம் குழுவினர் தாங்கள் வாங்கிய பொருட்கள்மூலம் அடையப்போகும் சிரமத்தை எண்ணி மனதிற்குள் சிரித்துக்கொண்டேன். அன்றைய தினம் பல இடங்களைச் சுற்றிப் பார்த்ததோடு இரவு கங்கைப் பூசையில் பங்குபற்றிய மனநிறைவுடன் பொழுது கழிந்தது.



**காலம்: 20.06.2013 வியாழக்கிழமை**

பிற்பகல் 2.30 மணிக்கு அகமதாபாத் நோக்கி எமது பிரயாணம் ஆரம்பமாக உள்ளதால் எமது குழுவினர் அனைவரும் விடுதியில் இருந்தனர். நானும், கார்த்திகேசனும், ஆறுமுகானந்தனும் காலையில் மீண்டும் கங்கைக் கரைக்குச் சென்று கங்கையில் நீராடி காசி விஸ்வநாதர் ஆலயம் சென்று தரிசனம் செய்தோம். அத்துடன் எமது யாத்திரை ஒருவித இடைஞ்சல் இல்லாத வகையில் இடம்பெறுவதையிட்டும் இனிமேலும் தொடரும் யாத்திரையும் சுகமாக முடியவேண்டும் என்று வேண்டிக்கொண்டும் எமது விடுதியை அடைந்து தொடரப்போகும் பிரயாணத்தை எண்ணி நாமும் போவதற்குரிய ஒழுங்குகளை மேற் கொண்டோம்.

சரியாக இரண்டு மணி அளவில் நாம் அனைவரும் புகையிரத நிலையத்தை அடைந்தோம். அங்கே போய்ப் பார்த்தபோது இந்தப் பிரயாணம் எமது குழுவினருக்கு மிகுந்த சிரமத்தைக் கொடுக்கும் என்ற நினைவுடன் நான் நின்றபொழுது நாம் போகவேண்டிய புகையிரதம் வந்து நின்றது. எமக்குரிய இருக்கைகள் முன்பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும்



அவரவர் இருக்கைகளில் இருப்பதற்கு மிகவும் பிரயாசைப்பட வேண்டியிருந்தது. மிகுந்த சனக்கூட்டம். அத்தோடு எம்மோடு வந்த பெண்களையும் பயணப் பொதிகளையும் பாதுகாப்பாக புகையிரதத்தில் ஏற்றி அவர்களது இருக்கைகளில் இருக்க வைக்க ஆண்களாகிய நாம் மிகுந்த சிரமப்பட்டோம். ஒருவழியாக நாம் எல்லோரும் புகையிரதத்தில் ஏறியபின்புதான் எம்மோடுவந்த மட்டக்களப்பைச் சேர்ந்த இராசகோபால் என்பவரது பணப்பை திருட்டுப்போன விடயம் தெரியவந்தது. அதுவும் எம்மோடு வந்த பெண்களின் பிரயாணப் பைகளை ஏற்றும் சமயம்தான் இச்சம்பவம் இடம்பெற்றது. ஆனாலும் எம்மால் ஒன்றும் செய்ய முடியாதநிலை.

இந்த இடத்தில் நான் ஒன்றைக்கூற வேண்டி உள்ளது. காசியிலிருந்து குஜராத் மாநிலத்தில் உள்ள அகமதாபாத்தை அடைவதற்கு 1800 கி.மீ நாம் பிரயாணம் செய்ய வேண்டும். காசியிலிருந்து வாரத்தில் மூன்று நாட்கள்தான் அகமதாபாத் புகையிரத சேவை. இதனடிப்படையில்தான் புகையிரத நிலையம் சனக்கூட்டத்தால் நிரம்பி வழிந்தது. இதை விடுத்து நாம் அகமதாபாத் போவதாக இருந்தால் காசியிலிருந்து டில்லி போய் பின்

அங்கிருந்து அகமதாபாத் போகவேண்டும். அதுவும் ஒரு நீண்ட பயணம். இதன் காரணமாகத்தான் காசியிலிருந்து அகமதாபாத் போகும் புகையிரதத்தில் நாம் போவதற்குரிய ஒழுங்கினை எமது முகவர் மூலம் வழிகாட்டியாக வந்த முத்துக்குமார் செயற்படுத்தி இருந்தார். காசி அகமதாபாத் பிரயாணம் நம் எல்லோருக்கும் புதிது. இதற்கு முன் நாம் ஒருவரும் வராத பாதை. அத்தோடு எமது குழுவினருக்கு ஒதுக்கப்பட்ட ஆசனங்கள் இடம்விட்டு இடம்மாறி பல இடங்களிலும் இருந்தமையாலும் சங்கடப்பட்டோம்.

எமக்குரிய உணவு வகைகளை ஓடும் புகையிரதத்தில் பகிர்ந்தளித்தபோது முத்துக்குமாரும் அவரோடு வந்த உணவு தயாரிப்பவர்களும் எம்மிலும் பார்க்கக் கூடிய சிரமத்தை எதிர்நோக்கினர். ஏனெனில் நாம் அனைவரும் ஒரே இடத்தில் இருந்தால் உணவு தருவது அவர்களுக்கு இலகு. ஆனால் நாம் போகும் புகைவண்டியில் எல்லோரும் வெவ்வேறு பெட்டிகளில் இருந்தது ஒரு காரணம். அதைவிட புகையிரதம் சனக்கூட்டத்தால் நிரம்பி வழிந்தது மறு காரணம். அதற்குள் உணவுப் பாத்திரங்களோடு நாங்கள் இருக்கும் இடங்களை நாடிவந்து உணவு தருவது என்பது லேசான காரியமல்ல. ஓர் அர்ப்பணிப்புடன்தான் இச்செயற்பாடு அங்கே இடம்பெற்றது. திரு ஸ்ரீரெங்கநாதனின் இச்செயற்பாட்டைக் கண்டு எம் குழுவினர் வியந்தனர். அதே சமயம் இவ்வளவு சனக்கூட்டத்தின் மத்தியில் தமது பருத்த உடம்போடு அவரும் புகைவண்டியில் பிரயாணம் செய்தது இதுவரை அவர் சந்தித்திராத அனுபவம் என்றே கூறவேண்டும். பகல் பிரயாணம் ஓரளவு சமாளிக்கக் கூடியதாக இருந்தது. ஆனால் இரவில் புகைவண்டியில் கால்வைக்க இடமில்லாத வகையில் சனக்கூட்டம். இதன் மத்தியில் எம் பிரயாணப்பை முதலியவற்றைப் பாதுகாப்பாகக் கொண்டுபோக வேண்டும் என்ற முனைப்பு. அதனடிப்படையில் எம் குழுவினர் கூடுமான வரையில் அவதானமாகவே மாறி மாறி காவல் இருந்தனர். ஒரு வழியாக, 20ஆம் திகதி பிற்பகல் தொடங்கிய அகமதாபாத் பிரயாணம் 22ஆம் திகதி அதிகாலை 4மணி அளவில் நிறைவு பெற்றது. நான் கடந்த காலங்களில் வட இந்திய யாத்திரையின் நிமித்தம் பல புகைவண்டியில் பிரயாணம் செய்திருக்கின்றேன். ஆனால் காசி அகமதாபாத் புகைவண்டிப் பிரயாணத்தில் நான் அடைந்த அனுபவம் முற்றிலும் வித்தியாசமானது. பலரக மக்கள் கூட்டத்தினருடன் நாங்களும் பிரயாணம் செய்தது ஒரு புது அனுபவம்.



இத்தனை சிரமங்களை அனுபவிக்காமல் இலகுவான முறையில் விமானம் மூலம் பல இடங்களுக்கும் போகலாம். ஆனால் யாத்திரை என்பது பலவித சிரமங்களின் மத்தியில் அந்தந்த இடங்களுக்குச் சென்று இறைவனைத் தொழவேண்டும். இவ்வகைச் செயற்பாட்டின்

மூலம்தான் யாத்திரையின் பலன் எமக்குக் கிடைக்கும். இது ஒரு சுகமான அனுபவம். இதை அனுபவித்தவர்களால் மட்டுமே உணரமுடியும். இது முற்றிலும் உண்மை.

**காலம்: 22.06.2013 சனிக்கிழமை**

அதிகாலை எமது நீண்ட புகையிரத பயணம் அகமதாபாத்தை அடைந்தவுடன் நமது குழுவினர் எல்லோரும் புகைவண்டியில் பெற்றுக்கொண்ட அனுபவங்களோடு கீழிறங்கி தத்தம் பயணப் பொதிகளை ஒன்றுசேர்க்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அதனைத் தொடர்ந்து எமது குழுவினர் அனைவரும் எமக்கென ஒழுங்கு செய்யப்பட்ட பேருந்தில் நாம் தங்குவதற்குரிய சத்திரத்தை அடைந்து பிரயாணத்தின்மூலம் அடைந்த சோர்வைப் போக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டோம். ஆனால் எனக்கு மட்டும் இது பெரிதாகத் தெரியவில்லை. ஏனெனில் பஞ்சலிங்க தரிசனம் செய்யப்போவதைப் பற்றிய சிந்தனைதான் என் மனதில் மேலோங்கி இருந்தது. முற்பகல் 10 மணிவரை சத்திரத்தில் தங்கி இருந்து காலை உணவை முடித்துக்கொண்டு ஒழுங்கு செய்திருந்த பேருந்தில் எமது குழுவினர் அனைவரும் பத்ரா கோட்டையிலுள்ள ஆஞ்சநேயரைத் தரிசிப்பதற்காகச் சென்றோம். இந்த ஆஞ்சநேயர் ஆலயம் அகமதாபாத்தில் மிகவும் பிரசித்தம் பெற்று விளங்குகின்றது. நாம் எமது அடுத்த தொடரில் இவ் ஆஞ்சநேயர் ஆலயம் பற்றி அறிவோம்.

அதற்கு முன்பாக இந் நகரில் உள்ள வீதிகளின் அமைப்பு எம்மை மிகவும் கவரக் கூடிய வகையில் அமைந்திருந்தது. வீதியின் நடுவில் பலவித மலர்ச் செடிகளை அமைத்து அதனைப் பராமரித்து வருகின்றார்கள். அத்தோடு வீதியின் இரு மருங்கும் 100மீற்றர் அகலத்திற்கு பெரிய மரங்களை நாட்டி அதனைப் பராமரித்து வருகின்றார்கள். அதனை அடுத்துத்தான் வர்த்தக நிலையங்களோ வீடுகளோ காணப்படுகின்றது. இவ்வகையான செயற்பாடுகள்மூலம் மரங்களுக்குக்கீழே பலரும் இருக்கக்கூடிய வகையில் ஆசனங்களை அமைத்துள்ள முறை எம்மைக் கவர்ந்தது. இத்தகைய முறையில் இயற்கையைப் பேணுவதன்மூலம் அந்த இடங்கள் செழிப்புற்று விளங்குகின்றது. ஆனால் எமது பிரதேசத்திலோ மரங்களைத் தறித்து அழிக்கும் செயற்பாட்டை முன்னெடுப்பதனால் நாம் அடையும் இன்னல்கள் பல. இயற்கையை அங்கே பேணுவதற்கும், இங்கே பேணுவதற்கும் எவ்வளவோ வேறுபாடுகள். இச்சிந்தனையோடு எமது பயணம் தொடர்ந்தது.

(தொடரும்...

## சிவபுராணம் கூறும் வில்வ மகிமை

வில்வ இலை ரொம்பவே உயர்வானது. வில்வத்தின் பெருமைகளைப் பற்றி சிவபுராணம் விரிவாகச் சொல்லி உள்ளது. வில்வமரத்தில் லட்சுமி வாசம் செய்கிறாள். ஒரு வில்வ மலரானது ஒரு லட்சம் தங்க புஷ்பங்களுக்கு இணையானது என்று சொல்லியிருக்கிறார்கள்.

அப்படி என்றால் அதன் சிறப்பு உங்களுக்குப் புரியுமே. அதைத்தவிர ஒரு வில்வமரத்தை வீட்டில் வளர்த்தால் அஸ்வமேத யாகம் செய்த பலனும், ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த பலனும், கங்கை முதலான புண்ணிய நதிகளில் நீராடிய பலனும் உலகில் உள்ள அத்தனை சிவாலயங்களைத் தரிசித்த பலனும் கிடைக்கும்.

அதைத்தவிர வில்வத்துக்கு மட்டுமே உள்ள தனிச்சிறப்பு அதற்கு நிர்மால்ய தோஷம் கிடையாது. அதைப் பறித்து எத்தனை நாட்கள் ஆனாலும் உலர்ந்து போனாலும்கூட பூஜைக்குப் பயன்படுத்தலாம். மற்ற மலர்களையோ, இலைகளையோ அந்த மாதிரிப் பயன்படுத்தக்கூடாது. இது வில்வத்துக்கு மட்டுமே உள்ள தனிச்சிறப்பு.

-தினமுரசு-

**புத்திசாலி ஒவ்வொரு நாளையும் நல்ல நாளாக ஆக்கிக்கொள்வான்.**

# ஔவையாருக்கு நெல்லிக்கனி ஈந்த அதியமான்

– திரு நா. நல்லதம்பி அவர்கள் –

நம் தமிழகத்திலே கற்றறிந்த புலவர்கள் சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்தார்கள். நக்கீரர் என்ற புலவர் தலைவராகவிருந்து மதுரைத் தமிழ்ச் சங்கத்தை வழிநடாத்திப் புகழ் பெற்றிருக்கின்றார். அதனால் தமிழ்மொழி வளர்ச்சியுற்றது; புதிய புதிய இலக்கியப் படைப்புகள் தோன்றின. இதற்கு முடியுடை மூவேந்தரும் உறுதுணையாக இருந்தார்கள். முத்தமிழ் நூல்கள் பல தோன்றுவதற்குச் சங்கப்புலவர் மாத்திரமன்றி, பாணர், விறலியர்களிடையே தோன்றிய புலமையாளரும் காரண கர்த்தாக்களாக இருந்துள்ளனர்.

இந்தப் புலவர் வரிசையிலே, ஔவையார் என்ற பெண்பாற் புலவர் மிகவும் புகழ்பெற்றவராவார். இவர் அதியமான் நெடுமானஞ்சியிடம் நெல்லிக்கனி பெற்று நீண்ட ஆயுள் பெற்று வாழ்ந்துள்ளார். தமிழ் தந்த முருகனிடம் நாவற்பழம் பெற்றவரும் இவரே!

ஒருமுறை, ஔவையார் நெடுமானஞ்சியிடம் பாடிப் பரிசில் பெறச் சென்றுள்ளார். அந்த வேளையில், அரசனது கைக்கு நெல்லிக்கனி ஒன்று கிடைத்திருந்தது. அது பெறுதற்கரிய பொருள்; காவலர் பலர் தேடிக்கொணர்ந்து கொடுத்தகனி. ஔவையார் வந்த செய்தியறிந்த அதியமான் சிந்தனையில்,

விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்து எனினும் வேண்டற்பாற் றன்று (குறள் 82)

என்னும் தெய்வப்புலவர் குறள் முன்னின்றது. நெல்லிக்கனியை ஔவையார் கையில் கொடுத்து உண்ணச் செய்து மகிழ்ந்தான் அதியமான்! இந்த நெல்லிக்கனியை உண்டு, தான் நீண்டகாலம் வாழ எண்ணாமல், நான் சாகாமல் இருக்க எமக்கு அதனை ஈந்தனனே எனப் பாடி மகிழ்ந்தாள் ஔவையார்.

“............... தொன்னிலைப்
பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது,
ஆதல் நின்னகத்து அடக்கிச்
சாதல் நீங்க, எமக்கு ஈந்தனையே!”

என வாழ்த்தி மேலும்,

வளம் படு வாய்வாள் ஏந்தி, ஒன்னார்
களம்படக் கடந்த கழல் தொடி தடக்கை
.........................................
பால் புரை பிறைநுதல் பொலிந்த சென்னி
நீல மணி மிடற்று ஒருவன் போல
மன்னுக பெரும நீயே!”

“பெரு மலைகளுக்கிடையில் அடர்ந்த காட்டில் அரிதாகப் பெற்ற சிறிய இலை மரத்துக் கனியைத் தான் உண்டு நீண்ட ஆயுள் பெற்று வாழக் கருதாமல், எமக்கு ஈந்து என்னை நெடுங்காலம் வாழச் செய்தனை! வாள் ஏந்திப் பகைவரைக் களத்தில் தோல்வியுறச் செய்யும் அரசனே! பால்போலும் பிறையணிந்த சென்னியும் நீல கண்டமும் உடைய சிவபெருமான்போல நீடுழிகாலம் வாழ்க மன்னா!” என வாழ்த்தியதோடு, பரிசிலும் பெற்றுச் சென்றார் ஔவையார்.

இவ்வாறு, பலகாலம் அதியமான் நெடுமானஞ்சியுடன் பழகியதால், "பயில் தொறும் நூல் நயம்போல" இவர்களது பண்பட்ட தொடர்பு வளர்ந்து வந்தது.

ஒருமுறை அதியமானின் அரண்மனைக்குச் சென்றவர்,

"களம்புகல் ஓம்புமின் தெவ்வீர்! போர் எதிர்ந்து,
எம்முளும் உளன் ஒரு பொருநன்; வைகல்
எண்தேர் செய்யும் தச்சன்
திங்கள் வலித்த கால் அன் னோனே!"

பகைவர்களே! நீ எப்படிப்பட்டவராயினும், எமது அரசனுடன் போர் புரியும் எண்ணத்தை விட்டு விடுங்கள். அவன் தினம் எட்டுத் தேர் செய்யும் தச்சன், ஒரு மாதத்தில் செய்த தேர்களின் கால்கள் போன்ற வலிமையுள்ளவனாக எம் முன் இருக்கிறான்" என்று தானும் அரசனும் நட்பால் ஒருவர் என்பதைக் காட்டிப் பாடுகிறார்.

"போர் முரசு காற்றில் அசைந்து ஒலி எழுப்பினாலும், அது போருக்காக, களத்தில் கேட்கிறது எனத் துள்ளியெழுந்து போர்க்களம் போனான் ஒருநாள்! அவனுடைய வேகம்! அடிக்குந் தடிக்கு அஞ்சாமல் துள்ளிவிழும் பாம்பு போன்ற மறவீரர் அவனுக்குப் பக்கபலமாக நிற்பார்கள்" என்றார் ஒருநாள்.

இன்னொரு முறை சென்று, "ஆற்றல் மிகுந்த நெடுமான் அஞ்சியே! சூரியன் உதித்தால் உலகை மூடிய இருள் அகல்வதுபோல், புலிக் கூட்டத்தைக் கண்டு மானினம் ஓடுவதுபோல், பகைவர் ஓடுவார்; நின் கால் வரை நீண்ட கைகள் இருக்கும்போது யார் நின்னை வெற்றி கொள்ள முடியும்; கண்டதும் ஓடிவிடுவார்கள்" என்கிறார் ஔவையார்.

இன்னொரு முறை சென்ற ஔவையார் அரசனைப் புகழ்ந்து பாடிவிட்டு, "மன்னா! பெற்றோர் தம் குழந்தைகளின் மழலைமொழி விளங்காவிட்டாலும் அதனைக் கேட்டு மகிழ்ச்சி கொள்கிறார்கள்; "குழல் இனிது, யாழ் இனிது என்பர், தம் மக்கள், மழலைச் சொல் கேளாதவர்" எனத் திருவள்ளுவரும் கூறியிருக்கிறார். அதுபோல, எனது மழலைப் பாடல் களுக்கு பரிசில் தருகின்றாயே" எனப் புகழ்ந்து சென்றார்.

வேறு ஒருநாள், "சிறு பிள்ளைகள் யானைகளைக் குளிப்பாட்டும்போது, அவர்களோடு யானை இதமாக நடந்து கொள்வதுபோல எம்மோடு இன்பமாகப் பேசிப் பழகுகிறாய்; ஆனால் போர்க்களத்திலே பகைவர்க்கு இன்னாதவனாகவே நடந்துகொள்கிறாய்" என நெடுமானஞ்சியைப் புகழ்கின்றார்.

"பகைவர்களே! உங்கள் ஊர் உங்களுக்கு வேண்டுமாயின், எமது அரசனுக்குத் திறை செலுத்தி அரசாளுங்கள்; இல்லையேல், நும் மனைவியர்கள் நுங்களை இழப்பர்; எதையும் ஆராய்ந்து செய்யுங்கள்" என அதியமான் முன்னின்று பாடுவார்.

"இதுவரை ஏழு பகையரசர்களை வெற்றி கொண்டுவிட்டாய். பாடிவரும் புலவர்கள் நின்னைப் புகழ்ந்துகொண்டேயிருக்கின்றனர். நீ கோவலூரில் பெற்ற வெற்றியைப் பற்றிப் பரணர் கூடப் புகழ்ந்து பாடினாரே! நீ பல்லாண்டு வாழ்க" என்றார் ஔவையார் ஒருநாள்.

"இப்படிப் பலநாள் போர் புரிந்தாலும் உன் சினம் இன்னும் தணியவில்லையே; நின்னைச் சினப்பித்தவர் பிழைத்திருக்க மாட்டாரே!" "ஒருநாள் இருநாள் அல்ல; பல நாட்கள் தொடர்ந்து நின்னிடம் வந்தாலும் முதல்நாள் போலவே பரிசில் வழங்குவாய்" எனப் பாடுவார்.

"விறலியே! எனக்கு இடுவார் யாரென்று கவலைப்பட வேண்டாம்; இன்னும் சிறிது தூரந்தான், அதியமானின் அரண்மனை வந்துவிடும்; அவன் பரிசில் தருவான். என்று நான் உறுதி யாகச் சொல்லி உன்னிடம் அனுப்பலாம்; மன்னா! நீ நீடூழி வாழ்க" என்பது ஔவையார் கூற்று.

"வாயிலோயே! பரிசிலர்க்கு அடையா வாயிலோனின் வாயிலோயே! யாம் எத்திசைச் செலினும் எமக்குச் சோறு அங்கு கிடைக்கும்" என்று புகழ்ந்தார் ஒருநாள்.

இவ்வாறெல்லாம் நட்புரிமையோடு ஔவையாராற் புகழப்பெற்ற அதியமான் நெடுமானஞ்சி இறந்தபொழுது, ஔவையார் மனங் கலங்கிப் போனார்.

எரிபுனக் குறவன் குறையல் அன்ன
கரிபுற விறகின் ஈம ஒள் அழல்,
குறுகினும் குறுகுக; குறுகாது சென்று,
விசும்பு உற நீளினும் நீள்க; பசுங்கதிர்த்
திங்கள் அன்ன வெண்குடை
ஒண்ஞாயிறு அன்னோன் புகழ் மாயலவே!

என்று உருகிப் பாடுகிறார்.

"எரிசுட்ட தினைக் கொல்லையிலே குறவன் தறித்த விறகு, அடுக்கிய ஈமத்தீயிலே அஞ்சியின் உடல் உள்ளது. ஈமத்தீ உடலைச் சிதையாமல் குறுகினாலும் நீண்டு எரிந்தாலும், சந்திர வட்ட வெண் கொற்றக் குடையுடைய சூரியன் போன்ற நெடுமானஞ்சியின் புகழ் என்றும் அழியாது" என்று கண்ணீர் மல்கிக் கதறினார்.

அவனது நடுகல்லுக்கு மாலை அணிந்து, மதுவும் ஊற்றிப் படைக்கின்றீர்களோ? இனிமேல் காலையும் மாலையும் இல்லையென்றாகும்; என் வாழ்நாளும் இனி இல்லாது போகும்! என மனமுருகிப் பாடுகிறார்.

இல்லாகியரோ, காலை மாலை!
அல்லா கியர், யான் வாழும் நாளே!
நடுகல் பீலிசூட்டி, நார் அரி
சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ - இதனை

அவன் ஏற்றுக் கொள்வானோ? என்பது பாடல்.

வீட்டுக் கூரையிலே சொருகப்பட்ட தீக்கடை கோல்போல அமைதியாயிருக்கும் நெடுமானஞ்சி, போர் என்றதும் நெருப்பாயிருக்கும் நெடுமானஞ்சியிடம் ஔவையார் போன பொழுது- பாசிபடர்ந்த அவரது உடையினை மாற்றிப் பூப்போன்ற புத்தாடை அணிவித்து, ஊன் சுவையோடு அடிசில் பரிமாறியதுமன்றிச், சுற்றத்தவர்க்கும் பசிதீரச் செந்நெல்லும் தந்து அனுப்பினான் என்பதையும் ஔவையார் தம் வாழ்நாளெல்லாம் நினைவிற் கொண்டு வாழ்ந்துள்ளார்.

## ஆற்றல்

**புறத்தாக்குதல்களை பயமின்றி எதிர்நோக்கும் ஆற்றலை விரைவாய்ப் பெற்றிடு என் மனமே**

**கசப்பான ஏதோ ஒன்று நடக்கும்போது பிறர் சொல்லோ செயலோ உன்னைத் தாக்கும் போது பதிலுக்குப் பதில் அதே வன்முறையைச் செய்வதைவிட அமைதியுடன் அசைக்க முடியாதபடியிருப்பது கோடி மடங்கு கடினமானது. அப்படி இருப்பது கோடி மடங்கு ஆற்றல் வாய்ந்ததாகும். ஓங்கி அடிப்பது எளிது. ஆனால் அடிக்காமல் அடங்கி இருப்பது மிகக் கடினமானது. இறைவா உம்மிடமே தஞ்சம் அடைகிறேன் என்று கூறிவிட்டு அவன் செயலை எதிர்பார்த்து காத்திருப்பது அதைவிடக் கடினமானது.**

**-சுவாமி விவேகானந்தர்-**

**நீண்ட கால விரோதியை நம்பாதே.**


(தொடர்ச்சி...

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

## 12. அழகன் ரமணன்

பகவான் விருபாக்ஷ குகையில் இருந்த காலத்தில் நடந்த சில விஷயங்களை குஞ்சு ஸ்வாமி மலைமேல் நிகழ்ந்த எங்கள் சத்சங்கம் ஒன்றில் சொன்னார்.

"தென் இந்தியாவில் ஒரு சாது இருந்தார். தினமும் பச்சை மிளகாயை அரைத்துத் தன் உடல் முழுவதும் பூசிக் கொள்வார். அதனால் அவருக்கு 'மிளகாய் சித்தர்' என்றே பெயராகிவிட்டது. பச்சைமிளகாய் விழுதை விரலால் தொட்டாலே எரிச்சல் இருக்கும். அரைத்த கை வெகுநேரம் எரியும். உடம்பு முழுவதும் அதைப் பூசிக்கொண்டு நின்றால்! ஆகவே அவருக்குப் புகழ் பெருகியது. அந்த சாதுவின் சிஷ்யரொருவர் ஒருநாள் விருபாக்ஷ குகைக்கு வந்தார். அந்தச் சமயம் பழனிஸ்வாமியும், பெருமாள் ஸ்வாமியும் கீழே ஊருக்குள் ஏதோ காரியமாகப் போயிருந்தனர். பகவான் தனியே இருந்தது. மிளகாய் சித்தரின் சீடர் தன் குரு அனேக தடவை பச்சைமிளகாய்க் குளியல் செய்வதால், பகவானுக்கும் அதைச் செய்விக்கத் தான் விரும்புவதாகத் தெரிவித்தார். பகவான் மௌனமாக இருந்தது. சரி என்றோ, வேண்டாம் என்றோ ஒன்றுமே சொல்லவில்லை.



பகவானின் மௌனத்தைச் சம்மதமாக எடுத்துக்கொண்ட அந்தப் பொல்லாத பாவி, ஏராளமாக பச்சை மிளகாயை நன்றாக அரைத்து பகவான் உடம்பு முழுவதும் நன்றாகப் பூசி விட்டார். அந்த அனுபவத்தை பகவானே வருணிப்பதைக் கேளுங்கள்:

'என்ன செய்வது! அவரோ படு குஷியாக மிளகாய் விழுதை என் உடல் முழுவதும் பூசிக்கொண்டே இருந்தார். முதலில் சில நிமிடங்கள் தாங்கொணா எரிச்சலாகத்தான் இருந்தது. ஆனால் சிறிது நேரத்தில் உடல் முழுவதும் குளிர்ச்சியாகத் தோன்றிற்று. எனக்குப் பிடித்தது என்றுகூடச் சொல்லலாம். அப்போதும் சரி; பிறகும் கூட பின்விளைவுகள் எதுவும் ஏற்படவில்லை' (கண்டத்தில் ஆலகாலத்தை வைத்திருப்பவனுக்கு பச்சை மிளகாய் எம்மாத்திரம்)

மற்றொருநாள், அன்றும் பழனிஸ்வாமியும், பெருமாள் ஸ்வாமியும் ஊருக்குள் போயிருந்தனர். பகவான் தனியே இருந்தது. கொடூரத் தோற்றத்துடன் சில பைராகிகள் விருபாக்ஷ குகைக்கு வந்தனர். பகவான் தனியே இருப்பதைப் பார்த்து, அருகில் வந்து, 'நாங்கள் விந்திய மலையிலிருந்து வருகிறோம். அங்கு ஒரு மகா சித்தரைக் கண்டோம். உங்களைக் கூட்டி வரும்படி அவர் எங்களுக்கு ஆணையிட்டார். ஆகையால் அந்த மகாசித்தர் சொற்படி உங்களை எங்களுடன் விந்திய மலைக்கு அழைத்துச் செல்கிறோம்' என்றனர். பகவான் வழக்கம்போல் மௌனம் சாதித்தது. பைராகிகளும் அவர்கள் சுபாவப்படி ஏகமாகக் கூச்சலிட்டுக்கொண்டிருந்தனர். இந்த நாடகத்தைக் கவனித்த சில விறகு வெட்டிகள் கீழே போய் பெருமாள் ஸ்வாமியிடம் பைராகிகளின் விஷயத்தைத் தெரிவித்தனர். பெருமாள் ஸ்வாமி மேலே வந்து பைராகிகளைப் பார்த்துவிட்டு மறுபடி கீழே போய், ஒரு பெரிய தவலை, நிறைய டின்களில் எண்ணெய் முதலியன வாங்கிக்கொண்டு மேலே வந்து, பைராகிகளின்

பதற்றம் பலவீனத்திற்கு அறிகுறி.

முன் அவற்றை வைத்துவிட்டு விறகு சேகரிக்க ஆரம்பித்தார். அவரது செய்கைகளைப் பார்த்து, முரடர்களுக்கு (ஏன் பகவானுக்குக் கூட) ஒன்றும் விளங்கவில்லை. அவர்களுக்குப் பெருமாள் ஸ்வாமியைத் தெரியாது. அதனால் 'அவர் யார்? என்ன செய்கிறார்? என்று அவரைக் கேட்டார்கள். 'அடுத்த கிராமத்தைச் சேர்ந்தவன் நான். நேற்று விந்திய பர்வதத்தின் மகாசித்தர் ஒருவர் என்முன் தோன்றி, 'விருபாக்ஷ குகைக்குப் போ! அங்கு சில பைராகிகள் இருப்பார்கள். மிக சக்தி வாய்ந்த அவர்களும் சித்தர்களே! அவர்கள் மேல் எண்ணெயைக் கொதிக்க வைத்து ஊற்று. அது அவர்களை ஒன்றும் செய்யாது உயிரோடிருப்பார்கள்' என்றார். என்ன ஆச்சரியம்! சித்தர் சொன்னபடியே நீங்கள் இங்கு இருக்கிறீர்கள். எவ்வளவு மடையன் நான்? அந்தச் சித்தர் வாக்கைச் சந்தேகப்பட்டேனே! உடனே ஓடிப் போய் எண்ணெய் முதலியன வாங்கி வந்து விட்டேன். சித்தர் ஆணையை மீறினால் சாபம் பெற மாட்டேனா?' என்றார் பெருமாள்ஸ்வாமி. அவர் துணிகளை வைக்க குகைக்குள் நுழைந்த சமயம் பார்த்து பைராகிகள் மறைந்து விட்டனர். பகவான் சிரித்தது. பெருமாள் ஸ்வாமியும் அதில் கலந்து கொண்டார்."

"பகவான் விருபாக்ஷ குகையில் இருந்த காலத்தில், ஜடைஸ்வாமிக்குப் பக்கத்தில் பாகவதர் சுவாமி என்றொரு சாது வசித்து வந்தார். அவர் சேஷ்டைகளுக்குப் பெயர் போனவர். வசீகரமான உருவம் படைத்தவர். அவர் வட இந்தியாவுக்கு அடிக்கடி போய், தன்னை 'ரமண மகரிஷி' என்று சொல்லிக் கொண்டு பணம் திரட்டுவது வழக்கம். ஒரு சமயம் நெடுநாள் அண்ணாமலையில் இல்லாமல் இருந்துவிட்டு, திடீரென்று நீண்ட தாடியும் புதுவிதமான உடையுமாக பகவான் முன் தோன்றினார். பகவானைப் பார்த்து, கம்பீர பாவத்துடன் 'நான் நேரே இமாலயத்திலிருந்து வருகிறேன். என் கனவில் கடவுள் தோன்றினார். நீ நேரே அருணாசலத்துக்குப் போ! அங்கே என் குழந்தை ரமணன் ஒரு சாதனையும் செய்யாமல் சும்மா இருக்கிறான். அவனுக்குச் சில ஆன்மீகப் பயிற்சிகளைக் கற்பிக்க வேண்டும். முதலில் இந்த மந்திரத்தை அவனுக்கு உபதேசம் செய்' என்று சொல்லி ஒரு மந்திரத்தை மிக ரகசியமாக எனக்குத் தந்தார். நான் நாளை வந்து உனக்கு உபதேசம் செய்கிறேன்' என்று கோஷமிட்டார். வழக்கம்போல் பகவான் தன் மொழியில் (மௌனம்) பதிலளிக்கவே, அவர் அதைச் சம்மதமாகக் கொண்டு போய்விட்டார். மறுநாள் பாகவதசுவாமி கோலாகலமாக சீடர் புடைசூழ மந்திரோபதேசத்துக்கான சாமக்கிரியைகளுடன் வந்து சேர்ந்தார். (பின்னே மகரிஷிக்கு உபதேசம் செய்தேன் என்று சொல்லிக் கொள்ளும் பெருமை கிடைப்பது என்றால் எளிதா?) அன்றும் பகவான் தனியாக இருந்தது. உடனே பாகவத ஸ்வாமி சடங்குகளை ஆரம்பித்து விட்டு, பகவானை மந்திரோபதேசம் பெற்றுக் கொள்ள அழைத்தார். பகவானுக்கு இதெல்லாம் வினோதமாக இருந்தது. அமைதியாகப் பகவான் பாகவத சுவாமியைப் பார்த்து 'உங்களுக்கு கனவில் கடவுள் தோன்றி எனக்கு மந்திரோபதேசம் செய்யும்படி சொன்னார் என்கிறீர்கள்; சரி, அதே கடவுள் என் கனவிலும் தோன்றி என்னை உங்களிடம் மந்திரோபதேசம் பெற்றுக்கொள்ளும்படி ஆணையிடட்டும், பிறகு பார்க்கலாம்' என்றது. அதனிடமிருந்து இத்தகைய உறுதியான பதிலை எதிர்பார்க்காத பாகவத சுவாமிகள், 'நான் பகவானை எவ்வளவு குறைவாக மதிப்பிட்டு விட்டேன்' என்றெண்ணி வெட்கினார்.

குஞ்சு ஸ்வாமி மேலும் சொன்னார்: கந்தாசிரமத்தில் ஒரு விறகுவெட்டி தினம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வந்து, கந்தாச்ரமத்தின் முன் நிற்பான். பகவான் அவனுக்கு நாள் தவறாமல் கற்கண்டு வழங்கும். எங்களுக்கெல்லாம் அவன் தினந்தோறும் வந்து நிற்பது உபத்திரவமாகப் பட்டது. நாங்கள் முணுமுணுப்பதை அறிந்த பகவான் எங்களை

சமாதானம் செய்தது. 'பாவம்! அவன் தொண்டை, தாகத்தால் வறண்டு விடுகிறது. அதிகாலை தன் ஆடுகளுடன் மலையேறு கிறான். நாள் முழுவதும் அவனுக்கு உணவோ நீரோ கிடைக்காது. முலைப்பால் தீர்த்தத்தில் கூட அவன் நீர் பருக அனுமதிக் கப்படமாட்டான். இந்தக் கற்கண்டு உலர்ந்த அவன் தொண்டைக்கு இதமளிக்கும். நாம் தினம் அனேக தடவை உணவு உட்கொள் கிறோம். நம்மிடம் கற்கண்டு இருப்பில் இருக்கிறது. பாவம், அவன் தாகத்தைத் தணிக்க நாம் உதவ வேண்டாமா? பகவான் வார்த்தைகள் அனுதாபத்தால், இரக்கத்தால் அடைபட்ட தொண்டையிலிருந்து, அன்பில் நனைந்து பிறந்தன. இந்த ஆச்ரமத்துக்கு வந்த பின்பும் அந்த விறகு வெட்டி வருவ துண்டு. பகவான் அதே தயவு, இரக்கம், கவனத்துடன் அவனை வரவேற்கும்.

(தொடரும்...

## பாதுகை

ராமர், வனவாசம் செய்தபோது, பரதனும், சத்ருகனும் அவரது பாதுகையை 14 ஆண்டுகாலம் பூஜித்தனர். இதற்கு ஒரு காரணம் உண்டு. வைகுண்டத்தில் ஒருநாள், திருமால் வழக்கத்துக்கு மாறாகப் பாதுகையைப் பள்ளியறைக்குள் விடுத்துப் பாம்பணையில் படுத்தார்.

பெருமானுடைய திருமுடிக்குச் சீற்றம் உண்டாயிற்று. முடி, "ஏ, பாதுகையே! உனக்கு அறிவிருக்கின்றதா? கண்ட இடமெல்லாம் மிதிக்கின்ற நீ, படுக்கையறைக்குள் வரலாமா? போ, வெளியே" என்றது. பாதுகை, "முடியே! நானே வரவில்லை. பகவானுடைய திருவடிகள் என்னை உள்ளே விட்டது. வீணாக என்மீது ஏன் கோபிக்கின்றாய்" என்றது. "பாதுகையே! அதிகம் பேசாதே. நான் பெருமானுடைய தலைக்குமேல் இருக்கும் தகுதியுடையவன். என்னுடன் பேசவும் உனக்கு யோக்கியதை கிடையாது. ஆதலினால் சீக்கிரம் போ, போ" என்றது. "முடியே! ஏன் வீண் பெருமை பேசுகின்றாய்? ஐயன் பாதத்தை நம்பினோர் நலம் பெறுவர். அடியார்கள் அனைவரும் அடியைத்தானே விரும்புகின்றார்கள். எனவே என்னை இகழாதே!" சங்கும் சக்கரமும் திருமுடியின் பக்கம் சேர்ந்து, "ஏ செருப்பே! உனக்கென்ன அதிகம் வாய்? உன்னை நசுக்கி எறிவோம்... வாயை மூடிக்கொண்டு வெளியே போ" என்றன.

பாதுகை நாராயணனைப் பார்த்து, "கருணைக்கடலே! நீ என்னை உள்ளே விடுத்து இவர்களைக்கொண்டு இகழச் செய்வது முறையா" என்று முறையிட்டது. திருமால், பாதுகையே! நீ வருந்தற்க" என்று கூறிவிட்டுப் பின்னர் முடியைப் பார்த்து, "முடியே! நீ தற்பெருமை பேசிப் பாதுகையை நிந்தித்தபடியால், அடுத்து வரும் ராமாவதாரத்தில் பதினான்கு வருடங்கள் இப்பாதுகையின்மீது இருக்கக் கடவது; சங்கே! சக்கரமே! நீவிர் பாதுகையை இகழ்ந்தபடியால், ராமாவதாரத்தில் பரதனாகவும், சத்ருகனனாகவும் பிறந்து இப்பாதுகையைப் பதினான்கு ஆண்டுகள் வழிபடக்கடவது" என்றார். அப்படியே நிகழ்ந்தது.

எளியாரை எள்ளாமை வேண்டும்.

-ஸ்ரீ ராமகிருஷ்ணர்-

# மனிதன் மனிதனாக வாழ வேண்டும்

– திரு இராசையா ஸ்ரீதரன் அவர்கள் –

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்கிறார் ஔவையார். புனிதப் பிறவி யாகிய மனிதப்பிறவி எடுத்திருக்கும் ஒவ் வொருவரும் பாக்கியசாலிகளே. இந்த அரிய பெரிய புனிதப் பிறவியின் மகத்துவத்தை அறிந்து செயற்பட வேண்டும். மனிதன் முத லில் மனிதனாக வாழவேண்டும். மனித உரு வில் இருந்து கொண்டு மிருகமாக வாழக் கூடாது.

ஆறாம் அறிவாகிய பகுத்தறிவைக் கொண்ட மனிதன் தனது செயற்பாட்டைப் புனிதமாகக் கருத வேண்டும். இறைவனின் படைப்பில் நாம் ஒற்றுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். ஓர் உணவு கிடைத்தால் காகம் தனியே உண்ணமாட்டாது. உடனே "கா கா" என்று கரைந்து தன்னினத்தை அழைத்துச் சேர்ந்தே உண்ணும். ஆனால் மனிதனைப் பாருங்கள். எவ்வளவு பக்குவமாக மறைத்துக் கொண்டு சென்று வீட்டினுள்ளே கதவைப் பூட்டிவிட்டல்லவா சாப்பிடுகிறான். ஏன் இந்தக் குணம் வந்தது?

சரி. எறும்புக் கூட்டத்தைப் பாருங்கள். எவ்வளவு ஒற்றுமையாக ஒன்றிணைந்து வரிசைக்கிரமமாக ஊர்ந்து செல்கின்றன. ஒன்றன்பின் ஒன்றாக அழகாக அவை செல் லும் அழகே தனி. இந்த மனிதனைப் பாருங் கள். எங்கே தான் முந்திப்போகலாம் என்று சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து வரிசையைக் குழப்பிக்கொண்டு முன்னே போய்விடுவான். ஏன் இந்தக் குணம் வந்தது?

இவற்றுக்கெல்லாம் மூல காரணம் கல்வியும் ஒழுக்கமும்தான். நன்கு ஆழமாகக் கல்வி கற்றவன் ஒருபோதும் பிழைவிட மாட் டான். நல்ல பண்பும் அனுபவ அறிவும் பெற்றுள்ள மனிதன் ஒருவனே உலகில் மனிதனாக வாழ்வான். மேலும் தான் படித்தபடி நடக்க வேண்டும் என்ற உணர்வு முதலில் வரவேண்டும். எவ்வளவு கற்றிருந்தாலும் அதன்படி ஒழுகாதவன் மனிதனே அல்லன். தெய்வப் புலவர் திருவள்ளுவர் தமது குறளிலே, "கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்று மிக அழகாகக் கூறி வைத்திருக்கிறார். இதை மனிதன் முதலில் உணரவேண்டும். "இது சரி இது பிழை" என்று பிரித்தறிந்து வாழ்க்கையைச் செவ்வனே கொண்டு நடத்தல் வேண்டும். எமது சைவ நாயன்மார்கள் இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்ந்து காட்டிப் போயிருக்கின்றார்கள். அவர்களது வழிநடத்தலைக் கைக்கொண்டு நாமும் எமது வாழ்க்கை வண்டியை ஓட்டுதல் வேண்டும்.

குடும்பம் என்ற வாழ்க்கை வண்டியில் கணவன் மனைவி என்று இரண்டு மாடுகள் பூட்டப்பட்டிருக்கின்றன. இரண்டும் ஒற்றுமை யாக இழுத்தால்த்தான் வண்டி ஓடும். இன்பம் துன்பம் என்ற மேடு பள்ளம் வரும்போது மிகக் கவனமாக இருக்க வேண்டும். இதை எப்படிக் கொண்டு நடத்துவது? அதற்கு உண்மையான நம்பிக்கை இருத்தல் வேண் டும். நமது கைகளில் எதுவுமே இல்லை. எல்லாம் அவன் செயல். அவனை முன்னிறுத்தி நாம் பின் செல்ல வேண்டும். அதுதான் ஆகும் வழி.

"இறைவனே எம்மை ஆட்கொண்டு வழிநடத்துகின்றான்" என்ற முழுநம்பிக்கை யுடன் சகலதையும் அவனிடம் முற்றாக ஒப் படைத்துவிடவேண்டும். அந்தப் பக்குவநிலை வந்துவிட்டால் மனிதன் மனிதனாக வாழத் துவங்கி விடுவான்; எள்ளளவும் சந்தேகமில்லை.

திரைமறைவில் இருக்கும் பொம்மலாட் டக்காரன் தன்னுடைய கையிலிருக்கும் கயிறு மூலமாகப் பொம்மைகளை ஆட்டுகின்றான்.

கயிறு அறுந்துவிட்டால் பொம்மை கீழே விழுந்துவிடும். அதேபோலத்தான் மனித வாழ்க்கையும். இறைவன் நம்மை வாழ வைக்கிறான்; நாம் வாழுகின்றோம். இதை உணர்ந்து விட்டால் "நான்", "எனது" என்ற அகங்கார மமகாரம் அற்றுப்போய் விடும். அப்போது உண்மை, நேர்மை, நீதி, நியாயம் என்பன விளங்கும். உலக வாழ்வில் உடம்பு நிலையில்லாதது என்பதும் நினைவுக்கு வரும். அந்த நிலை வந்ததும் பட்டினத்தார் ஞானம் பெற்றதுபோல், "ஊருஞ் சதமல்ல, உற்றார் சதமல்ல, பெண்டிர் சதமல்ல, பிள்ளை சதமல்ல" என்பதும் நன்கு புலப்படும்; வாழ்க்கையில் ஒரு பிடிப்பு ஏற்படும்.

"புண்ணியமாம் பாவம் போம் போன நாட் செய்த அவை மண்ணிற் பிறந்தார்க்கு வைத்த பொருள்" என்பதற்கிணங்க மனிதன் எப்போது வாழத்துவங்குகிறானோ அப்போது தான் உலகம் உய்யும். "ஆனமுதலில் அதிகம் செலவானால் மானம் அழிந்து மதியும் கெட்டுப் போகும்" என்ற வகையில் மனிதன் தன்னைத் தானே முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும். இறைவனது தொண்டின்மூலமே நிம்மதி கிடைக்கும் என்று உணர்ந்துதான் செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்துக்கு அநேகம் பேர் வருகிறார்கள். "ஆற்றங்கரையானே கதி" என்று கோயில் வீதிகளிலே விழுந்து கிடக்கின்றார்கள். செல்வச்சந்நிதி கோயிலுக்கு வருவதற்கும் முருகனின் அருள் வேண்டும். அவனுடைய அருளில்லாமல் அங்கே காலடி எடுத்து வைக்க முடியாது. "நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்" என்பார்கள். "முருகா" என்று கூறி முழு நம்பிக்கையோடு நினைத்தாலேயே அவன் ஆலயத்துக்கு வரமுடியும்.

எத்தனையோ பேர் இங்கு வரமுடியாமல் காலங்கழிக்கின்றார்கள். அவர்களின் செய்தீவினை விடாது; முன் செய்த பாவம் விடாது. செல்வச்சந்நிதி கோயிலுக்கு வருவதும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் சாப்பிடுவதும் இலேசான காரியமல்ல. மனிதனாகப் பிறந்து மனிதனாக வாழ்கின்ற பக்குவநிலை வந்தவனே இங்கு வரமுடியும்; ஆச்சிரமத்தில் சாப்பிடவும் முடியும். வணக்கத்துக்குரிய ஆச்சிரம சுவாமிகள் மோகனதாஸ் அடிக்கடி கூறுவார், "நாம் கொடுக்கின்ற சாப்பாடு மருந்து" என்று. அது முற்றிலும் உண்மை. ஆற்றங்கரையானின் அருளினால் ஆச்சிரமத்தில் வழங்கப்பெறும் அன்னம் நோய் தீர்க்கும் அருமருந்து. எல்லா நோயும் மாறி சுகம் கிடைக்கும். இதனை முற்றாக உணர்ந்தவன் முருகன் திருவருள் பெற்றவனாவான்.

மனிதப் பிறவியின் மாண்பினை உணர்ந்து தாம் மாத்திரம் வாழ்ந்தால் போதாது; "மற்றவர்களும் வாழவேண்டும்" என்ற பரிபக்குவநிலை பெற்றவனே மனிதன். "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று பரந்த நோக்குடன் வாழவேண்டும். குறுகிய மனப்பான்மை கூடவே கூடாது. ஒருவன் நல்லவனாகவும் நல்ல பண்புடையவனாகவும் இருந்தால்த் தான் சமூகத்தில் நன்கு மதிக்கப்படுவான். அவ்வாறு வாழ்க்கை நடத்துவதற்கு ஆழ்ந்த அறிவாற்றலும் முற்றிய அனுபவமும் அவசியம்.

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்" என்பார்கள். எவ்வளவு தூரம் நூல்களை வாசிக்கும் பழக்கமுடையவனாக ஒருவன் இருக்கிறானோ அவனே நல்லறிவும் பண்பும் உள்ளவனாகின்றான். ஒரு வீட்டில் ஒருவன் பசித்திருக்க மற்றவர்கள் சாப்பிடுவது முறையன்று. "எள்ளானாலும் ஏழாய்ப் பிரித்து உண்" என்பது ஆன்றோர் வாக்கு. என்னதான் கோபதாபம் இருந்தாலும் ஒருவர் பட்டினி கிடக்க நாம் சாப்பிடக்கூடாது. அவருக்கும் சிறிதளவேனும் கொடுத்துத்தான் நாமும் சாப்பிட வேண்டும். விண்ணைத் தொடும் அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட இன்றைய கால கட்டத்தில் போட்டி, பொறாமை, எரிச்சல், ஏமாற்று கூடவே கூடாது. ஒரு மனிதனைப் பார்த்து, "அட அவன் நல்லாயிருக்கிறானே!"

என்று பொறாமைப்படக் கூடாது. நாமும் அவனைப்போல் வர முயற்சிக்க வேண்டும். நன்றாக நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உழைக்க வேண்டும். அந்த உழைப்பில் நிம் மதி கிடைக்க வேண்டுமாயின் உண்மையும் நேர்மையும் நீதியும் நியாயமும் சேர்ந்த வழி யிலேயே பணஞ் சம்பாதிக்க வேண்டும்.

மற்றவர்களை ஏமாற்றியோ அல்லது மனக்கசப்பை உண்டாக்கியோ தீய வழியில் பொருள் சேர்க்கக்கூடாது. நேர் வழியில் சேர்த்த பொருள்தான் நின்று நிலைக்கும். "எப்படியும் உழைக்கலாம்" என்று மற்றவர் மனம் நோகும்படி அவர்களை ஏமாற்றிப் பணம் சேகரிக்கலாகாது. நாம் விடுகின்ற ஒவ்வொரு மூச்சும் தூய்மையாக இருக்க வேண்டும்.

மனிதன் என்ற பெயருடையவன் பொய் பேசக்கூடாது; தாயை மதிக்க வேண்டும்; தந்தையைப் போற்ற வேண்டும்; மற்றவர் மனம் புண்படும்படி பேசக்கூடாது; எப்போதும் இன் சொல் பேச வேண்டும். நெற்றி நிறைய நீறணிந்து உண்மையான சிவபக்தனாக சைவ உணவு உண்பவனாக வாழுதல் வேண்டும். மறந்தும் மச்சம் மாமிசம் உண்ணக்கூடாது. கோயில் திருவிழா நடக்கிறது என்று பத்து நாள் சைவ உணவு உண்டுவிட்டு விழா முடிந்த பதினோராம் நாள் மாமிச உணவை நாடி ஓடக்கூடாது.

முதலில் தன்னை உணர்ந்து நடக்க வேண்டும். அவன்தான் மனிதன். தன்னிலே பிழையை வைத்துக்கொண்டு தெய்வத்திலே குற்றம் சொல்லக்கூடாது. "நீ சரியாக நடந்தா யானால் உலகம் தானாகவே திருந்திவிடும்" என்பது இராம கிருஷ்ண பரமஹம்சரின் திரு வாக்கு. ஆகவே, இதுவரை காலமும் போனது போகட்டும். இன்றுமுதல் நாம் மனிதனாக வாழத் துவங்குவோம் என்று உறுதி எடுத்துச் சங்கற்பம் செய்துகொள்ள வேண்டும். எத் தனை பேர் இதற்குத் தயார்?

# ஆசையோ தீரவில்லையே முருகா



**என்னதான் இருந்தாலும் உன்ன மறந்திட**
**என்னால் முடியவில்லையே முருகா!**
**முன்னைநாள் பலமுறை உன்னிடம் வந்தபோதும்**
**இன்னமும் ஆசையோ தீரவில்லையே முருகா!!**

**சிறியதாய் இருக்கவே வீடொன்று கேட்டிட**
**பென்னம் பெரியதாய் தந்துவிட்டாய் முருகா!!**
**அன்னமும் ஆயுளும் எனக்குத் தந்துவிட்டால் என்றும்**
**உன்னையே பாடி இங்கு உயிர்உள்ளவரை வாழ்ந்திடுவேன்**

**காத்திடுவாய் சந்நிதி வேலா பக்தியால் உன்னைப் போற்றுகின்றேன்**
**பாவாலே தினமும் உனை வாழ்த்துகின்றேன்**
**சித்திநலம் தருவாய் சந்நிதிமுருகா**
**தினமும் எனைக் காப்பாய் சந்நிதிவேலா**

-திருமதி நாகேஸ்வரி கந்தசாமி-

நல்ல மனச்சாட்சி மென்மையான தலையணை.





## நிறத்தை மாற்றும் மந்திரம்

"பச்சோந்தி" ஒன்று அந்தப் பகுதிக்கு புதிதாக வந்தது. அது அந்தப் பகுதியில் இருந்த ஒரு காட்டு மரத்தில் உட்கார்ந்திருந்தது. சற்று நேரத்தில் அது பக்கத்திலிருந்த ஒரு மரத்திற்குத் தாவியது. உடனே அதன் உடல் அந்த மரத்தின் நிறத்திற்கு மாறியது.

சற்று தொலைவிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தது ஓர் ஓணான். அதன் பெயர் ஓகி. ஓகிக்கு பச்சோந்தியைப் பற்றி எதுவும் தெரியாது.

தான் இருக்கும் இடத்திற்கு ஏற்றவாறு தன் உடல் நிறத்தை மாற்றிக்கொள்ளும் ஆற்றல் பெற்றவை பச்சோந்திகள். இயற்கை இந்த அரிய ஆற்றலை பச்சோந்திகளுக்கு அளித்திருந்தது. எதிரிகள் வந்தால் தன் உடல் நிறத்தை மாற்றி மறைத்துக்கொண்டு எதிரிகளிடமிருந்து தன்னைக் காத்துக்கொள்ளும். இந்த விஷயம் ஓகிக்குத் தெரியாது.



அந்தப் பகுதிக்கு வந்திருந்த பச்சோந்தியின் பெயர் ரோ. ஓகி ஓணான், பச்சோந்தி ரோவிடம் சென்றது.

"நீ யாரு? உன் பேரு என்ன? எப்படி உன்னோட உடல் நிறத்தை நீ மாத்திக்கிறே?" பச்சோந்தி இதற்கு உடனே பதில் சொல்லவில்லை. அது பலமாக யோசித்தது.

"என் பேரு 'ரோ'. அது ஓர் அபூர்வ சக்தி. அதை ஒருத்தர்கிட்டேயிருந்து ஒரு மந்திரம் மூலமா கத்துக்கிட்டேன். அந்த மந்திரத்தைச் சொன்னா உடல் நிறம் தானாகவே நாம நினைத்தபடி மாறும்." "அந்த மந்திரத்தை எனக்கும் கத்துக்கொடேன் ரோ".

"ஓ, அதுக்கென்ன. தாராளமா நான் உனக்கு அந்த மந்திரத்தைக் கத்துத் தர்ரேன். ஆனா நான் சொல்றபடியெல்லாம் நீ கேட்கணும். அதுக்கு நீ சம்மதிச்சா அந்த மந்திரத்தை நான் உனக்குக் கத்துத் தர்ரேன்."

"நான் என்ன செய்யணும்னு சொல்லு. அந்த மந்திரத்தைக் கத்துக்க நான் எது வேணாலும் செய்ய தயாராக இருக்கேன்."

"அது ஒண்ணும் பெரிய விஷயமில்லை. உனக்கு கிடைக்கிற உணவிலே பாதியை நீ தினமும் கொண்டு வந்து எனக்கு தரணும். நீ தருகிற உணவிலே என்னோட பசி அடங்கணும். அப்படித் தந்தா உனக்கு நான் அந்த மந்திரத்தைக் கத்துத் தர்றேன்." ஓகி யோசித்தது. "எவ்வளவு நாளைக்கு நான் உனக்கு உணவு தரணும் ரோ." "நான் சொல்றவரைக்கும் நீ எனக்கு உணவு தரணும்". நிறம் மாறும் மந்திரத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் ஓகி இதற்குச் சம்மதித்தது.


அடுத்த நாளிலிருந்து பச்சோந்தி ரோ அங்கேயே வசிக்க ஆரம்பித்தது. ஓணான் ஓகி உணவைத்தேடி கிடைக்கும் உணவில் பாதியைக் கொண்டு வந்து ரோவிடம் கொடுக்க ஆரம்பித்தது. ரோவும் எந்தக் கவலையும் அலைச்சலும் இன்றி ஓகியின் தயவால் உணவைச் சாப்பிட்டு சந்தோஷமாக வாழ ஆரம்பித்தது.

ஒருநாள் ஓகி ரோவிற்கு உணவைத் தரும்போது மரத்தில் உட்கார்ந்திருந்த காகம் பிளாக்கி அதைக் கவனித்தது.

உணவைத் தந்த ஓகி, ரோவிடம் "அந்த மந்திரத்தை எப்போது கற்றுத் தருவீர்கள்" என்று ஒரு சிஷ்யன் குருவிடம் கேட்பதுபோல பணிவாகக் கேட்டது. அதற்கு ரோ, விரைவில் அந்த மந்திரத்தை கற்றுத் தருவதாகச் சொன்னது. ஓணான் ஓகியும் அதை நம்பியது.

ரோ அங்கிருந்து சென்றதும் ஓகியிடம் பிளாக்கி மந்திரத்தைப் பற்றி விசாரித்தது. "அந்த பச்சோந்தி ரோ அதிசயமான ஒரு மந்திரத்தை தெரிஞ்சு வெச்சிருக்கு. அது அந்த மந்திரத்தைச் சொன்னதும் அதோட உடல் நிறம் மாறுது."

இதைக் கேட்ட பிளாக்கி சிரித்தது. "எதுக்கு சிரிக்கிறே?" "மந்திரமுமில்லே, மாயமுமில்லே. அதுக்கு இயற்கையாகவே அப்படி ஓர் ஆற்றல் அமைஞ்சிருக்கு. அதோட இனத்தைச் சேர்ந்த எல்லாருக்குமே இந்த அதிசய சக்தி இருக்கு. அந்த ரோ கஷ்டப்படாம சாப்பிட, மந்திரம் இருக்குதுன்னு உன்கிட்டே பொய் சொல்லி உன்னை ஏமாத்திக்கிட்டிருக்கு." ஆனால், ஓகி இதை நம்பவில்லை.



"அந்த மந்திரத்தை எங்கே நான் கத்துக்கப் போறேன்னு உனக்குப் பொறாமை. அதான் இப்படி அநியாயமா ஒரு பொய்யைச் சொல்றே."

பிளாக்கி எவ்வளவு எடுத்துச் சொல்லியும் கடைசிவரை ஓகி நம்பவேயில்லை. தினமும் தான் கஷ்டப்பட்டு தேடும் உணவில் பாதியை ரோவிற்குக் கொடுத்து வந்தது.

பிளாக்கி வசித்துவந்த மரத்தில் அணோ எனும் ஒரு பெரிய அணில் வசித்து வந்தது. அதுவும் பிளாக்கியும் நண்பர்கள்.

ஒரு சமயம் பிளாக்கி அணில் அணோவிடம் பேசிக்கொண்டிருந்தது. அப்போது அது ஓகியை ரோ ஏமாற்றிக்கொண்டிருப்பதைப் பற்றிச் சொன்னது. இதைக் கேட்ட அணோ மிகவும் வருத்தப்பட்டது.

சில நாட்கள் சென்றன. ரோ ஒரு மரத்தில் அன்று அமர்ந்திருந்தது. அப்போது

அணில் அணோ, தான் வசித்துவந்த மரத்தின் உச்சியிலிருந்து குதித்தது. இதைப் பார்த்த ரோவிற்கு வியப்பாக இருந்தது. இந்த அணோவால் மட்டும் எப்படி அவ்வளவு உயரத்தில் இருந்து காயம் படாமல் சுலபமாக குதிக்க முடிகிறது என்று ஆச்சரியப்பட்டது.

இயற்கையிலேயே அணில்களுக்கு இந்த ஆற்றல் இருக்கிறது என்பது ரோவிற்கு தெரியாது. நீண்ட அடர்த்தியான வால் அணில்கள் குதிக்கும்போது அவற்றின் உடலை சமநிலைப்படுத்தி அவை காயம் படாமல் பூமியில் இறங்க உதவுகின்றன.

ரோவிற்கு அடிபடாமல் மரத்திலிருந்து குதிக்க கற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஆசை பிறந்தது. அணோவிடமிருந்து அதைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று நினைத்தது.

ரோ உடனே ஓடிச்சென்று அணோவிடம் இதைப்பற்றி விசாரித்தது. அணோவிற்கு தன் நண்பன் பிளாக்கி சொன்ன விஷயம் ஞாபகத்திற்கு வந்தது. அணோ யோசித்து பதில் சொன்னது.

"அதுக்கு ஒரு விஷேச பயிற்சி இருக்கு. அதெல்லாம் உன்னால செய்ய முடியாது." இதைக் கேட்ட ரோவிற்கு ரோசம் அதிகமானது. "அதென்ன விஷேச பயிற்சி. அதைச் சொல்" என்றது.



ஒரு சின்ன மந்திரம் இருக்கு. அதை சொல்லிக்கிட்டே இந்த மரத்தை நூற்றி எட்டு தடவை ஏறி இறங்கணும். அப்படிச் செய்தா உனக்கு அந்த சக்தி வந்துடும். எவ்வளவு உயரத்திலே இருந்து குதிச்சாலும் உனக்குக் காயம் படாது."

"அந்த மந்திரத்தை எனக்குச் சொல்லித் தாயேன்." ரோ அணோவிடம் கெஞ்சியது. அணோவும் வாய்க்கு வந்த ஏதோ ஒன்றை மந்திரம் என்று ரோவிற்குச் சொன்னது. அதை நம்பிய ரோவும் அதை சொல்லிக்கொண்டே மரத்தில் ஏறத் தயாரானது.

"ரோ ஒரு முக்கியமான விஷயம். மந்திரத்தை சரியா சொல்லிக்கிட்டே ஒரே சமயத்தில் நூற்றிஎட்டு தடவை நீ ஏறி இறங்கணும். பாதியிலே விட்டுட்டா முதல்லே இருந்து தொடங்கி மந்திரத்தைச் சொல்லி முடிக்கணும். அப்பதான் அந்த மந்திரம் பலிக்கும்."

அணோ சொன்னதை உண்மை என்று நம்பிய ரோ அந்த போலியான மந்திர வார்த்தைகளைச் சொல்லிக் கொண்டே மரத்தில் ஏறி இறங்கத் தொடங்கியது.

அப்பாவி ஓணான் ஓகியை ஏமாற்றிய ரோவிற்கு சரியான தண்டனை கிடைத்துவிட்டது.

**நல்லவருக்கும் தங்கத்திற்கும் சோதனை அதிகம்.**

(தொடர்ச்சி...

# சைவத் திருக்கோயிற் கிரியைநெறி

– உயர்திரு கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் –

**விநாயகர்:**

சக்திக்கு அடுத்தாற்போல் விநாயகர் சைவ வழிபாட்டில் பெரும் இடம் வகிப்பதைக் காண்கிறோம். இந்தியச் சமயங்களனைத்திலும் கணபதிக்கு முக்கிய இடமுண்டு. விநாயகருக்குத் தமிழ்நாட்டில் பிள்ளையாரெனும் பெயருண்டு. இதைவிட விக்கினேசுவரர், கணேசர் என்னும் பெயர்களும் வழங்குகின்றன. இறைவனுக்கு ஏவலாளர்கள் பலர் கூட்டங் கூட்டமாக விளங்குவர். இவர்கள் சிவகணங்கள் எனப் பெயர் பெறுவர். பிரதம கணங்கள் என்னும் பெயரும் இவர்க்கு உண்டு. இவர்க்குத் தலைவராகக் கணபதியைத் தேவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். பிரமதேவன் கணபதியைக் கணங்களின் தலைவனாக அபிடேகித்த வைபவத்தைப் புராணங்கள் வருணிக்கின்றன. இக்கணங்களுக்கு நந்தியைத் தலைவனாகக் கூறும் பகுதிகளும் புராணங்களில் உள.

விநாயகன் என்னும் சிறப்புப் பெயர் கணபதிக்கு உண்டு. எங்கணும் முதலிடம் வகிப்பதால் இவன் தலைவன் அற்றவன் என்னும் கருத்தை இப்பெயர் உணர்த்துகிறது. விக்கினங்கள் நிகழவொட்டாது தடுப்பதில் இவன் திறமை மிக்கவன். திரிபுரதகனம் நிகழும் வேளை தேரிற் புறப்பட்ட இறைவன் தடை நிகழக்கண்டு, தன் மைந்தன் விக்கினேசுவரனை நினையாது புறப்பட்டதை உணர்ந்து, அக்குறையை நீக்க ஆவன செய்த தாகப் புராண வரலாறு கூறும்.

கஜாசுரன், திரைபுரன் முதலிய அரக்கர்களை அழித்து அடியவர்க்கருள் செய்வதில் இம்மைந்தன் தந்தையை நிகர்த்தவன். கணேசனை அறிவுக்கு அதி தெய்வமாகக் கருதும் மரபும் உண்டு. கல்வி கற்கத் தொடங்கும் வேளை விநாயகரை விசேடமாக ஆராதிக்கும் வழக்கம் பாரதமெங்கனும் கடைப்பிடிக்கப்படுகிறது.

சிவாலயங்களில் கணேசனுக்குத் தனி இடம் அளிக்கப்பட்டுள்ளது. இவன் சிவனது பரிவாரத் தெய்வங்களுள் ஒருவன். சிவபூசையில் இவனுக்கு முதலிடம் உண்டு. இவனை வழிபட்ட பின்னரே சிவனது வழிபாடு நிகழும்.

விநாயகனின் வாகனம் மூஷிகம். இவனுக்குத் தொந்தி வயிறும் ஆனைமுகமும் உண்டு. விநாயகனுக்குத் தனிக் கோவிலெடுத்து வழிபடும் மரபு மஹாராஷ்டிரத்திலும், தென்னிந்தியாவிலும் உண்டு. சித்தி, புத்தி என்னுமிருவரும் விநாயகனின் இரு சக்திகளாகக் கூறப்படினும் இவர்களின்றித் தனியனாகவே இவன் தென்னாட்டுக் கோவில்களில் இடம்பெற்றுள்ளான். மேற்கொள்ளுங் காரியங்களில் வெற்றியையும், அறிவையும் கொடுப்பதனால் இவை இரண்டும் சித்தி, புத்திகளாகவும் இவன் சக்திகளாகவும் கூறப்படும் எனச் சிலர் இதற்கு விளக்கங் கூறுவர்.

கணேசனின் உருவத்தில் சிறப்பாக உரிய அம்சங்களைப் புராணங்கள் கூறுகின்றன. இவை யானைத்தலை, நான்கு கரங்கள் அவற்றில் உள்ள பாசம், அங்குசம், ஒடிந்த கொம்பு, மோதகம் என்பனவாகும். விநாயகர் உருவம் அமையவேண்டும் முறையினை ஆகமங்கள் கூறியுள்ளன. விநாயகரது உடல் மனித உடல் போன்றது. தலையும் காதும் யானையின் தலையையும் காதையும் நிகர்ப்பன. வயிறு பெரிதாகவும், உடம்பு பருத்ததாகவும், ஒடிக்கப்பட்ட கொம்பு ஒரு கரத்ததாகவும், கண்கள் பயம் விளைவிப்பனவாகவும், உதடு தொங்கும் நிலையினதாகவும் அமையும். பாம்புகள் முப்புரி நூலாக விளங்கும். கரண்ட மகிடம் தலையினையும் பலவகை

அறிவும், ஒழுக்கமும் வண்டியின் இரு சக்கரங்கள் மாதிரி.

ஆபரணங்கள் உடலினையும் அழகு செய்யும். அங்குசம், நாகம், பாசம், மோதகம் என்னும் நான்கும் கைகளில் விளங்கும். கையில் ஏந்திய மோதகத்தினை தும்பிக்கை தொட்டவாறு அமைவது முறை. இவ்விலக்கணங்களுக்கமைய சிற்பி உரிய அளவைப் பிரமாணங்களுடன் விநாயகனின் திருவுருவஞ் சமைத்தற்குரியன.

சிவனின் மைந்தனான கணேசனிடம் தந்தையிடம் காணப்படும் இயல்புகள் சில காணப்படுவன. கணேசனின் பலவகைத் திருவுருவங்களிலொன்று ஐந்து முகங்களுடனும் பத்துக் கரங்களுடனும் விளங்கும் உருவம். ஒவ்வொரு முகத்திற்கும் இரு கண்கள் உண்டு. மேனி செந்நிறம் வாய்ந்தது. பாம்பு பூணூலாக விளங்கும். தலையைக் கரண்ட மகுடம் அழகு செய்யும். இடது கால் தொங்கியபடி இருக்கும். வலது கால் ஆசனத்தில் மடிக்கப்பட்டிருக்கும். இத்திருவுருவம் பத்மாசனத்தில் அமர்ந்தவாறமையும். தந்தம், குடாரம், பாசம், சக்கிரம், முசலம், அூபம், டங்கம், சூலம், துவஜம் முதலியன திருக் கரங்களிற் காணப்படுவன.

கணேசனின் இன்னொரு வகையுருவம் ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது. இது ஒரு முகமும் பதினாறு கரங்களுங்கொண்டமைவது. பாசம், அங்குசம், குடாரம், பீஜம், தண்டம், குசலம், கண்டா, பிண்டி, பாலம், நாகம் ஆகியவை இக்கரங்களில் விளங்கும் ஆயுதங்கள். ஒரு கையால் மடியில் அமர்ந்திருக்கும் சக்தியை அணைத்தவாறு இவ்விக்கிரகம் உருவாக்கப்படும்.

மூர்த்திகளுள் பெருவழக்கில் நாம் காணும் மூர்த்தி பாசம், அங்குசம், தந்தம், மோதகம் ஆகியவற்றை நான்கு கரங்களில் ஏந்தி யானைமுகத்துடன் விளங்குவதாகும். எனினும் இம்மூர்த்தியின் இலக்கணங்கூறும் ஆகமம் மோதகத்திற்குப் பதிலாக மாம்பழம் குறிப்பிடப்படுகின்றது.

வீட்டில் நிகழுங் கிரியைகளனைத்திலும் தொடங்கப்போகுங் காரியம் இடையூறின்றி இனிது நிறைவேறக் கணேசனை வழிபடுதல் இன்றியமையா வழக்காக இன்றுவரை நிலவி வருகின்றது. இக்கிரியைகளில் விக்கிநேசுவரரை ஆவாகித்துப் பூசித்ததும் தொடங்கிய கருமம் நிறைவுற வேண்டிப் பிரார்த்தித்து இன்ன கருமம் நிகழ்த்தப் போகிறேன் எனக் கூறி, விக்கிநேசுவரன் முன் சங்கற்பித்த பின் அங்கிருந்து போய் வருமாறு வேண்டுவது வழக்கம்.

விநாயகர் சிவாலயங்களில் இருப்பவராயினும், கோவில் கொண்டெழுந்தருளி இருப்பவராயினும், அவரை ஆகமங்கள் கூறும் முறையினுக்கமைய வழிபடும் மரபே தென்னாட்டில் காணப்படுகிறது. இவ்வழிபாட்டில் ஆவாகனம், அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், தீபாராதனை முதலியன முக்கிய அம்சங்கள். ஆகம முறையினுக்கமைய கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம் பிராயச்சித்தம் முதலிய கிரியைகளால் விநாயக வழிபாடு அமையும்.

(தொடரும்...

பள்ளத்தைநோக்கி பாய்வது தண்ணீரின் இயல்பு. ஆனால் சூரியனின் கிரணங்கள் நீரை ஆவியாக்கி அதை வானத்திற்கு எடுத்துச் செல்கின்றது. அதைப்போல தாழ்ந்த பொருள்களைப் பற்றியும், களியாட்டத்திற்கு உரிய பொருட்களைப் பற்றியும் நினைப்பது மனதின் இயல்பு. ஆனால் இறைவனின் கருணை, மனதை உணர்த்தி மேலான சிந்தனைக்குத் திருப்புகிறது.

-ஸ்ரீ இராமகிருஸ்ண விஜயம்-

கற்பிக்கத் துணிந்தவன் கற்றலை நிறுத்தக்கூடாது.

# திருநாவுக்கரசு நாயனாரைத் திருவருள் காத்தமைக்கு அகச் சான்று:

– திரு சிவ சண்முகவடிவேல் அவர்கள் –

திருநாவுக்கரசு நாயனார் சூலை நோயினால் பட்ட துயரம் சொல்லும் தரமன்று. சமணர்கள் செய்த தந்திர மந்திர உபாயங்கள் எல்லாம் தவிடு பொடியாயின. அந்தச் சமண துறவிகளே நாயனார் அருகாகச் செல்ல அஞ்சித் தூரத்தே விலகிப் போனார்கள் என்றால் சூலை நோயின் கோலத்தை என் என்பது.

திருநாவுக்கரசு நாயனார் திருஅதிகை வீரட்டானப் பெருமானுடைய சந்நிதானத்தில் நின்று தமக்கு ஏற்பட்ட சூலைநோயின் கொடூரத்தைப் பதிகப் பாட்டுப் பத்திலும் எடுத்துக் காட்டி முறையிடுகின்றார். அவ்வளவு கொடூரம் மிக்கது சூலைநோய். ஒவ்வொரு தேவாரத்திலும் எடுத்து இயம்புவதிலிருந்து சூலைநோயின் உக்கிரத்தை உணர்ந்து கொள்ளலாம்.

நாயனார் பின்வருமாறு தனக்கு நோய் செய்யும் நலிவை நன்கு எடுத்துக் காட்டு கின்றார்.:.

".... தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத் துறை அம்மானே.
"வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்.....
"சுடுகின்றது சூலை தவிர்த் தருளீர்"
"....தன்னையடைந் தார்வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர் தங்கட னாவது தான்
".....வயிற்றோடு துடக்கி முடக்கியிட
"உலந்தார் தலையில் பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருள்வாய்
அலந்தேன் அடியேன்....
".....வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றி னகம்படியே
பறித்துப்புரட் டியறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேன்....
"கலித்தேயென் வயிற்றி னகம்படியே
கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்துதின்ன
அலுத்தேன் அடியேன்.....
"அடியார் படுவ திதுவேயாகில்
அன்பே அமையும்....
"வேர்த்தும் புரண்டும் விழுந்தும்
எழுந்தாலென் வேதனை யான விலக்கியிடாய்...."

திருநாவுக்கரசு நாயனார் இவ்வாறு துன்பே கவலை பிணி என்றிவற்றை நணுகாமல் துரந்து கரந்து விடும்படி விண்ணப்பித்து வேண்டுதல் செய்கின்றார்.

அடியாருடைய அல்லலைத் தீர்த்து வையாமல் விடுவாரா ஆதிபரம் பொருளாயினார்.

சேக்கிழார் பெருமான் திருநாவுக்கரசு நாயனார் புராணத்தில் வயிற்றில் வருத்திய கொடிய சூலைநோய் நீங்கியது என்று எடுத்துக் காட்டுகின்றார்.

"மன்னும்பதி கம்மது பாடியபின்
வயிறுற்றடு சூலை மறப்பிணிதான்
அந்நின்ற நிலைக்க ணகன்றிடலும் (71)

என்று விளக்குகிறாரன்றித் திருநாவுக்கரசு நாயனார் அச்செய்தியை விளம்பினாரல்லர். ஏன் திருநாவுக்கரசு நாயனார் தமது சூலைநோய் மாறினமையை திருவதிகைப் பெருமான் மாற்றியருளினமையைத் தமது நல்வாக்கினால் நவிலாது விட்டார் என்று ஆராய்கின்ற போதில்..... எத்தனையோ ஆண்டுகளுக்குப் பின் பாடுகின்ற திருத்தாண்டகப் பதிகப் பாடலில் அச்செய்தியை உலகத்தவர்க்குத் தெட்டத் தெளிவாக உரைத்தருளுகின்றார். தனித் திருத்தாண்டகப் பதிகத்தில் மூன்றாவது தேவாரத்தில் அகச் சான்றாகத் தமது வாக்காகத் தருகின்றார்.

"சூலை தீர்த்தடியேனை யாட்கொண்டாரே-

அதைக் கண்ட பின்புதான், "அப்பாடி" என்று நீண்ட மூச்சு நிம்மதியாக வருகின்றது.

சூலைநோய் தீர்த்ததோடு அமையாது சமணர் உறவிலிருந்து விடுவித்த செய்தியினையும் ஐந்தாவது திருத்தாண்டகத்தில் அமைத்துப் பாடுகின்றார்.

"....சமண் தீர்த்தென் றன்னையாட் கொண்டார் தாமே. மீண்டும் பதினோராவது திருத்தாண்டகத்தில் சூலைநோய் நீக்கிய செய்தியினை மொத்தமாக மொழிகின்றார்.

"...இடருறுநோய் தீர்த்தென்னை யாட் கொண்டாரே- அதனைப் போலச் சமண்கையர் நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்பித்த செய்தியினையும் ஒரு தேவாரத்தில் நினைவூட்டுகின்றார்.

பாடலிபுரத்தில் சமணர்கள் நஞ்சு கலந்த உண்பித்த பாற்சோற்றுச் செய்தியினைத் திருநனி பள்ளித் திருநேரிசைப் பதிகத்தில் ஐந்தாம் தேவாரத்தில் உலகவர்க்கு உணர்த்துகின்றார்.

"துஞ்சிருள் காலை மாலை
தொடர்ச்சியை மறந்தி ராதே
அஞ்செழுத் தோதின் நாளும்
அரனடிக் கன்ப தாகும்
வஞ்சனைப் பாற்சோ றாக்கி
வழக்கிலா அமணர் தந்த
நஞ்சமு தாக்கு வித்தார்
நனிபள்ளி அடிக ளாரே"


அதேபோலக் கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சிய சம்பவத்தையும் திருநீலக் குடித் திருக்குறுந்தொகைப் பதிகத்தில் ஏழாம் திருப்பாட்டில் ஆழமாக அழுத்துகின்றார்.

கல்லி னோடெனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கஎன் வாக்கினால்
நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்
நல்ல நாமம் நவிற்றியுய்ந் தேனன்றே


இச்சம்பவங்கள் அனைத்தும் வாய்மை திறம்பா வாகீச முனிவருடைய வாக்கில் வருவதனால் அகச் சான்றுகள் என உறுதியாக உரைக்கப்பெறும்.

**உனக்கு நேரமிருந்தால் காலத்திற்காகக் காத்திருக்காதே.**


# படங்கள் தரும் பதிவுகள்




ஞானச்சுடர் சிறப்புப்பிரதி வழங்கல்...




மாற்றம் என்பது இயற்கையின் நியதி.



ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...




சமயம் வேறு வாழ்க்கை வேறு அல்ல.



ஞானச்சுடர் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



அறிவுத்தேடல் விடியலைத் தரும்.




வாராந்த நிகழ்வின்போது...




உண்மைக்காக எதையும் தியாகம் செய்யலாம்.

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

தொடர்ச்சி

| | | | |
|---|---|---|---|
| சூரியகுமார் அருண்மொழி | U.K | (துன்னாலை) | 2000. 00 |
| மு. தம்பிஜயா | | அவுஸ்திரேலியா (துன்னாலை) | 5000. 00 |
| Dr S. அனோஜன் | | தெகிவளை | 10000. 00 |
| திரு மோகனமூர்த்தி | | சங்கானை | 5000. 00 |
| N. டினோஜன் | | கைதடி | 2000. 00 |
| சிவகணேஸ் அஸ்வா | | மானிப்பாய் | 10000. 00 |
| குமார் ரங்கநாதன் | | சிறுப்பிட்டி | 6000. 00 |
| ந. கீர்த்திகா | | மட்டுவில் | 2000. 00 |
| ம. வாகீசன் | | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| சந்திரலிங்கம் ஜென்ஷா | | பிரான்ஸ் | 1000. 00 |
| M. திவாகரன் | | சங்கரத்தை | 3000. 00 |
| ப. தன்ஷிகா | | கிளிநொச்சி | 1000. 00 |
| நல்லையா சுப்பிரமணியம் | | இணுவில் | 6000. 00 |
| க. சின்னத்தம்பி | | இடைக்காடு | 10000. 00 |
| சி. செல்லையா | | கரவெட்டி | 500. 00 |
| பா. செல்வராணி | | கரவெட்டி | 500. 00 |
| செ. சின்னத்துரை ஆசிரியர் | | நெல்லியடி | 1000. 00 |
| திருமதி பொ. இரத்தினசோதி | | தம்பசிட்டி | 5000. 00 |
| லலிதா சண்முகலிங்கம் | | அரியாலை | 2000. 00 |
| அமரர் சிவானந்தஜயர் நினைவு | | கெருடாவில் | 2000. 00 |
| க. கிரிவேல் | | மட்டுவில் | 1000. 00 |
| K.V. துரைசாமி நினைவு | | மயிலிட்டி | 1000. 00 |
| S. பிரியா | | கொழும்பு | 1000. 00 |
| M. தோகேஷன் | | வல்வெட்டித்துறை (கொழும்பு) | 5000. 00 |
| S. கிருஷ்ணபிள்ளை | | ஆவரங்கால் | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடர்ஸ் | | யாழ்ப்பாணம் | 2புட்டி பருப்பு |
| திருமதி S. நேசரட்ணம் | | லண்டன் | 10000. 00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் | | பத்தமேனி | 2000. 00 |
| முத்து கணேஸ் | | இணுவில் | 1மூடை அரிசி |
| பாபு வெதுப்பகம் | | புன்னாலைக்கட்டுவன் | 2மூடை அரிசி |
| J. சந்திரப்பிரகாஷ் குடும்பம் | | பருத்தித்துறை | 2000. 00 |
| கு. சிவபாலராஜா | நல்லூர் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| K. வர்ணநாதன் | விநாயகர்மில் | இருபாலை | 1மூடை அரிசி 500. 00 |
| ம. சத்தியபாலன் | மயிலணி | சுண்ணாகம் | 5000. 00 |
| ச. பிரேம்குமார் | | அராலி | 2000. 00 |

உணவுக்கு உப்பைப்போல செல்வத்திற்கு ஈகை.

| | | | |
|---|---|---|---|
| சந்திரப்பிரகாசம் கபிஷேசன் | பருத்தித்துறை (கல்விப்பணி) | | 3000. 00 |
| நாதன் பிறதேர்ஸ் பிரதானவீதி | இணுவில் | 1மூடை அரிசி | |
| வி தயாளன் மூலம் அ. மகாலிங்கம் நினைவு | | | 2000. 00 |
| S. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | | 2000. 00 |
| K. அகல்யா K. லவண்யா | லண்டன் | | 5000. 00 |
| M. திலகநாதன் | சுவிஸ் | | 10000. 00 |
| செல்வநாயகம் மதனாகரன் | ஊரெழு கிழக்கு | | 1000. 00 |
| S. லிதுஷன் | ஊரெழு கிழக்கு | | 1000. 00 |
| V. அருணாசலம் | கொழும்பு-6 | | 2500. 00 |
| திருமதி சத்தியவாணி நந்தகுமார் நவாலி | மானிப்பாய் | 1மூடை அரிசி | 3000. 00 |
| மா. கணேசதாசன் | கொக்குவில் | | 500. 00 |
| ஐயம்பிள்ளை வேலாயுதர் | கோப்பாய் தெற்கு | | 2500. 00 |
| பாக்கியராசாமூலம் க. பிரியதர்சினி, தட்ஷயா | திருகோணமலை | | 1000. 00 |
| திருமதி K. சிவராசா | கொழும்பு | | 5000. 00 |
| தெ. மயூரன் | இணுவில் | | 3000. 00 |
| இ. இலங்கரட்ணம் | தாவடி | | 5000. 00 |
| ஏரம்பு சிவஞானம் | பொன்னாலை | | 2000. 00 |
| மகிந்தன் குடும்பம் | அவுஸ்திரேலியா | | 10000. 00 |
| R. சந்திரகோபன் குடும்பம் | கந்தர்மடம் | | 10000. 00 |
| வெ. செந்தூரன் | தம்பாலை | | 1000. 00 |
| பிரதீபன் சந்திரசேகரம் | இடைக்காடு | | 9000. 00 |
| திரு மணிமாறன் | ஆனைக்கோட்டை | | 3000. 00 |
| உமாகாந்தன் ராசமலர் | | | 3000. 00 |
| அனுபா இரத்தினசிங்கம் | | | 3000. 00 |
| பிரணவன் சம்புநாதன் | | | 3000. 00 |
| இ. தங்கவேல் லக்ஷி தொ. தொ.நி | அச்சுவேலி | 2புட்டி அரிசி | |
| நாகலிங்கம் நடேசபிள்ளை குமரகுருபரன் | புங்குடுதீவு | 1மூடை அரிசி | |
| K. குணரட்ணம் | கோப்பாய் | | 500. 00 |
| சி. சுதர்சன் | சங்கானை | | 1000. 00 |
| ஆ. ஜெகநாதன் (இளை. அதிபர்) | ஆத்தியடி | | 2000. 00 |
| திருமதி R. மாலினிதேவி | யாழ்ப்பாணம் | | 10000. 00 |
| ம. செபதீபன் | அச்செழு | | 2000. 00 |
| திரு கஜகுமார் | சிறுப்பிட்டி | 1மூடை அரிசி, 1புட்டி கிழங்கு | |
| குலசிங்கம் சந்திரபுஷ்பம் நினைவு | துன்னாலை மத்தி | | 2000. 00 |
| ச. வாகீசன் | கொக்குவில் | | 1000. 00 |
| சி. புஷ்பராஜா | அராலி மத்தி | | 500. 00 |
| M. சிவசுந்தரம் | கொழும்பு-5 | | 1000. 00 |
| ஸ்ரீ மீரா மூலம் இ. அமிர்தலிங்கம் நினைவு | கதிரிப்பாய் | | 5000. 00 |
| A. சண்முகராசா | லண்டன் | | 5000. 00 |

(தொடரும்...)

**உனது கௌரவம் உனது நாக்கின் நுனியில் இருக்கிறது.**

# அந்த வாக்கும் பொய்த்துப் போமோ?

**– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –**

"நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனாலே
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்;
செல்லாதே வெறுங்கையாய், செல்லப்பன்
வாழ்ந்த நாடு, தேங்காயுடன் பழம்
கொண்டு நீ செல்லு"

என்று நாட்டுக்கு உயிரும், உணர்வும் தந்த சற்குரு, தவத்திரு யோகர் சுவாமிகளின் குருபூஜை இம்மாத ஆயிலிய நட்சத்திரத்தன்று நடைபெற்றது. அவரது வாயால் அருளப்பட்ட ஒவ்வொரு வாக்கும் என்றென்றும் வரமாக எமக்கு உதவுபனவாக மிளிர்கின்றன. அவரும், அவரது ஞான குருவாக அமைந்த செல்லப்பா சுவாமிகளும் உலாவிய இந்த மண்ணிலே, தேடி உங்களை யார்மூடினாலும், செல்லப்பன் பாதம் சிந்தித்தால் ஓடியோடிப் போமே என்று தனது குருவை பிரார்த்திக்கும் விதம் என்றும் பேறுடையது.

நற்சிந்தனை நூலிலிருந்து தேனான பாடலிது.

இராகம்: சிந்துபைரவி தாளம்: ஆதி

பல்லவி

நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனாலே
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும் (நல்லூரை)

அநுபல்லவி

செல்லாதே வெறுங்கையாய்
செல்லப்பன் வாழ்ந்த நாடு
தேங்காயுடன் பழம் கொண்டு நீ செல்லு (நல்லூரை)

சரணம்

வாடி உன்மனம் ஓடினாலும்
வருத்தங்கள் கோடி?
கோடியாகக் கூடினாலும்
குறைகள் வந்து,
தேடி உன்னை மூடினாலும்
செல்லப்பன் பாதம்
சிந்தித்தால் ஓடிஓடிப் போமே (நல்லூரை)
பெண்டு பிள்ளைகளென்று
பேதைமை கொண்டுநீ
கண்டகண்ட இடம் கலங்கி
நீ திரியாதே (நல்லூரை)

மேலும் சுவாமிகள், ஒவ்வொரு மனிதனையும் பக்குவப்படுத்தவல்ல பற்பல ஆன்மிக கைங்கரியங்களை அவ்வப்போது உபதேசம் செய்து, நம் நாட்டை மட்டுமல்ல கடல் கடந்த நாட்டு மக்களையும் ஆன்ம ஈடேற்றம் செய்துள்ளார் சிறப்பாக, "நீ உடம்பன்று, மனமன்று, புத்தியன்று, சித்தமன்று, நீ ஆத்மா, ஆத்மா ஒரு நாளும் அழியாது, இது

**கடன் வாங்குதல் ஏழ்மைக்குப் பிறக்கும் முதல் குழந்தை.**

மகான்களுடைய சித்தாந்தம், இந்த உண்மை உனது உள்ளத்தில் நன்றாய்ப் பதியக் கடவது, ஆனால் கவனிக்க வேண்டியது ஒன்றுண்டு, அதாவது தரும நெறியில் பிசகாதே, எவ்வுயிரும் பெருமான் திருமுன்னிலை என்று சாதனை செய், கடவுள் உள்ளும், புறம்பும் உள்ளவர் என்று அவனே நானாக நற்சிந்தனையில் அவரது கைப்பட எழுதியுள்ளார்.

எல்லாம் அவனேயாம், எல்லாம் அவன் செயலே
கல்லாய் மனிதா கவலையேன்? - நில்லாயோ
நீள நினையாய் நினைந்து நினைந்துருகி
வாழ நினையாய் மதி.

பயம் உனக்கு வேண்டாம். என்னதான் குறையிருந்தாலும் சூரியன் உதிக்காமல் மறந்ததேயில்லை. உன் செயல்யாவும் அவன் செயலாக அமையட்டும். அதிலே சுகமிருப்பதை உணர்வாய். அது அவ்வாறு இருப்பதனால், சுகதுக்கம் ஒன்றும் உனக்கு இல்லை. ஆதலால் உனக்கு மரணம் என்பது இனியில்லை. புறத்தில் அலையாதே! போனவற்றையெண்ணி அறத்தை மறவாதே. எப்போதாயினும் ஈசனை மறந்தால் தொல்லை வந்தே தீரும் - என்பது சுவாமிகளது திருவாக்கு. நாங்கள் சிவனடியார்கள் எங்களுக்கு ஒரு குறைவுமில்லை. சிவதொண்டு செய்வதே எங்கள் தொழில். அதற்காகவே நாங்கள் பூமியில் வாழ்கின்றோம். அனைத்தும் சிவன் செயல். சந்திரன்கூட சிவத்தொண்டாற்றுகின்றது. தேவர்கள், அசுரர்கள், கின்னரர், கிம்புருடர், வித்தியாதரர் எல்லோருமே சிவனுக்காய் தொண்டாற்றி வருகின்றார்கள். நமக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவருமில்லை. மண்ணாதி ஆசையில்லை. மனமான பேய் இல்லை. நாம் அனைத்துக்கும் சாட்சியாய் விளங்குகின்றோம். சரியை, கிரியை, யோகம், ஞானம் இவை மந்திரம். இவை எமக்கு மருந்து. இவற்றில் திளைத்தலே நிஷ்டை. இந்த நிஷ்டை உடையோர்க்கு தவமில்லை. விரதம் இல்லை. ஆச்சிரமச் செயலில்லை. இத்தகு பேறுடையவர்கள், மண்ணில் நல்ல வண்ணம் வாழ்கிறார்கள். கற்கண்டின் அருமை, கற்கண்டின் இனிமை அதை உமிபவர்க்கே தெரியும். காலத்தின் அருமை ஞாலத்தவர்களுக்கே வரமாகும். நாம் காலத்தைக் கடத்துகிறமேயொழிய, காலத்தின் பெறுமதியை இன்னுமே உணர்ந்ததாகத் தெரியவில்லை.

கன்னலொடு செந்நெல் கதலி கமுகு பலா
மன்னுமிலங்கையில் வாழ் மாந்தர்காள் - இன்னும்
சிவதொண்டன் தொண்டில் மனஞ்செல்லா - திருந்தால்,
அவனை ஓம்புவரார்? சொல்!

என்றிவ்வாறு சுவாமிகளின் கனிந்த மொழிக்கு நிகரேது?

1) ஒரு பொல்லாப்புமில்லை;
2) எப்பவோ முடிந்த காரியம்;
3) நாமறியோம்;
4) முழுதும் உண்மை.

இந்த நான்கு அருள்வாக்குகளும் எண்ணியெண்ணி அனுபவிக்கத்தக்கவையாகும். ஒளிவு மறைவின்றி வெளிப்படையாக எக்கருமமும் ஆற்றுவோமாக இருந்தால் ஆன்மா பிரகாசிக்கும். வெளிப்படைத் தன்மையானது எங்கு பிசகுகின்றதோ அங்கு நாம் தோற்றுப்போகின்றோம். போலிகளைக் கண்டு ஏமாறுகின்றோம். பொது நீதிக்குத் தலைவணங்க நாம் தயங்குகின்றோம். மரியாதை என்ற சொல்லுக்கு மதிப்பளிக்கத் தவறிவிட்டோம். மாதா, பிதா, குரு, தெய்வ நிந்தனையில் வசப்படலானோம். காலத்தின் கோலம் இதுவாக இருந்தாலும், கவனமாக

உணரவேண்டிய காலத்தினை சுவாமிகள் நற்சிந்தனையில் முதலாவதாகக் குறிப்பிடுகின்றார்.

அப்பனும் அம்மையும் சிவமே,
அரிய சகோதரரும் சிவமே,
ஒப்பில் மனைவியும் சிவமே,
ஓதரும் மைந்தரும் சிவமே,
செப்பில் அரசரும் சிவமே,
தேவாதி தேவரும் சிவமே,
இப்புவியெல்லாம் சிவமே,
என்னை யாண்டதும் சிவமே.

ஐயனெனை ஆண்டுகொண்ட பேறதனால், என்னை அறிந்தேன். எனதுள் மறைந்துள்ள இச்சையெல்லாம், சிவத்தை எண்ண இச்சையெல்லாம் பறந்து போய்ச்சுதடி. பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசையால் சிக்குண்ட மனிதரெல்லாம் சின்னா பின்னமானாரடி கிளியே சிவத்தியானம் செய்திட வாருங்கள் என்றவாறு நற்சிந்தனையில் அருளுகின்றார். மேலும் அவரது ஒவ்வொரு பாடல்களும்,

முழுவதும் உண்மையென்று மோனமுனி சொன்னான் - அன்று,
பழுதொன்றுமில்லையென்று பண்ணுவாய் - சிவத்தொண்டு,
ஒழிந்து போகும் பிறவி, அழிந்துபோம் பழி - பாவம்,
எழுந்திரு விழித்துக் கொள் எல்லாமுனக்கு - வெற்றி,
தளர்ந்து போகாதே குரு சாற்றிய ஞானமொழி,
தெளிந்து கொண்டாற் சீவன் சிவனெனக் காணலாம்,
சொல்லித் துதிக்கும் யோக சுவாமியைத் தினம் காக்கும்,
செல்வன் திருப்பாதமே அல்லும் பகலும் - துணை
(முழுவதும் உண்மையென்று மோனமுனி சொன்னான்)

கும்பிட்டேன் குருநாதா! என்ன கொடுமை?
கூத்தாடுதே என்மனம்! தீர்த்தங்கள் ஆடினேன்,
யாத்திரை செய்தேன். சித்தந் தெளியவில்லையே!
யான் என்ன செய்வேன், குருநாதா நான்
உன் அடிமை என்றவாறு வரங்கேட்கும் பாடலிதுவாகும்.

**பல்லவி**

கூத்தாடுதே மனமென்ன கொடுமை
கும்பிட்டேன் குருநாதா உன் அடிமை

**அநுபல்லவி**

தீர்த்தங்களாடினேன், யாத்திரை செய்தேன்
சித்தந் தெளியவில்லை என்ன நான் செய்வேன்?

**சரணம்**

பார்த்த இடமெங்கும் நீயல்லாத தில்லை,
பாராமலே நானும், பட்டேனே தொல்லை,
காத்தென்னை ஆள்வதுவேதான் உந்தன் கடமை,
கருணைக் கடலே ஐயா நானுந்தன் அடிமை.

பக்திசெய் யோக சுவாமியின் பாடல்களை,
பாடிப்படிப்பவர் யாவரும் பல்லூழிகாலம் - வாழ்வர்
உத்தமராகவே உலகினில் வாழ்பவர்,
வித்தகன் சேவடியை விரவி நிற்பாரே!

“இறப்பும், பிறப்பும்”, “இரவும் பகலும்”, “சுகமும் துக்கமும்”, “ஆதியும் அந்தமும்”, எங்களுக்கில்லை - என்னுந் திருமந்திரத்தை எவனொருவன் மறவாமல் தியானஞ் செய்கிறானோ அவனுக்கு ஒரு குறையும் வராது. எதை நீ பாவனை செய்கிறாயோ அது நீயாவாய். இதற்கெல்லாம் விடாமுயற்சி அதாவது சலியாமை வேண்டும். பாடுபட அஞ்சுபவனுக்கு ஒரு பிரயோசனமும் உண்டாகாது. பாடின்றி பட்டம் கிடையாது. நீ ஏன் ஓயாமல் அல்லாதவற்றைச் சிந்திக்கின்றாய்! அதிலிருந்து விடுபட்டுக்கொள். யாவும் உனக்கு வெற்றியாகும். ஒழுங்காக வாழ உன்னைத் தயார்ப்படுத்திக்கொள். கைவிளக்கை ஒருவன் கொண்டு செல்வானானால் இராக் காலத்தில் அவன் மனங்கலங்குவானா? கலங்கான். அப்படியே சிவத்தியானத்தை செய்து வருவாயானால், ஒரு பொல்லாப்புமில்லை. ஓ நண்பனே! உன்னை யார்தான் பாவியென்று சொன்னது? ஏன்? நீ சிவத்தின் அம்சமல்லவா! மறந்து போனாயோ! “ஓம் தத் சத் ஓம்” என்று ஓயாமற் சொல்லுவாயாக. உன்னை முழுமனதோடு இறைவனுக்கு ஒப்புக்கொடு. சிவத்தியானத்தை அசட்டை செய்யாதே! ஈற்றில் யாவுமே நன்மையாய் முடியும். அதிகம் பேசாதே! உன்னை நீ அடையாளப்படுத்தாதே. பதவிகளுக்கு அடிமையாகிவிடாதே. பதவிகள் தோன்றி மறைவன என்பதை நீயுணர்க.

ஆன்மா சிவமயமானது. அழிவில்லாதது. நித்தியமானது

பல்லவி

அந்தவாக்கும் பொய்த்துப் போமோ
ஆசான் நல்லூர் வீதியிலருளிய
இந்த ஆன்மா நித்தியமென்ற
அந்த வாக்கும் பொய்த்துப் போமோ


சரணங்கள்

மங்கையராடவர் மைந்தர்கள் கூடி
மகிழ்ந்தும் புகழ்ந்தும் வரதனைத் தேடி,
வந்தனை புரிய வருவார் கோடி
செந்தமிழ் நாவலன் செல்லப்பன் சொன்ன

தேங்காய் இளநீர் தீங்கனி கொண்டு,
திருவடித் தொண்டு செய்வதைக் கண்டு,
ஐம்புலனடங்கி நின்றவருண்டு
ஆறறிவாரென ஆசான் சொன்ன
கௌரிமனோகரி ஆனந்தாச்சி
கமல ஆச்சி செல்லாச்சி ஐவரும்
உவந்து சேவடி கும்பிடும் உத்தமன்
தவத்தைச் செய்திடத் தந்திடும் அருளே!
“ஓம் தத் சத் ஓம்”

(தொடர்ச்சி...)

# உமாபதி சிவம் அருளிய திருவருட்பயன்



[விரிவான பொருளுரையும் தெளிவுரையும்]

முனைவர் ஆ. ஆனந்தராசன்

## 2. சக்தியோடு கூடியவன்

தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சக்தி
பின்னமிலான் எங்கள் பிரான்.

**பொருள்:**

ஒருவனாகிய எம் இறைவன் பிறப்பு இறப்பிற் படாமல் என்றும் ஒரு தன்மையனாய் உள்ளவன். அந்த நிலைமையைப் பலவாகிய உயிர்களும் பெறும்படியாகச் செய்யும் தனது சத்தியோடு அவன் வேறின்றி நிற்கிறான்.

**சொற்பொருள்:**

எங்கள் பிரான்- எம் இறைவன், தன் நிலைமை- பிறப்பு இறப்புக்கள் இன்றி, என்றும் ஒரு தன்மையனாய் இருக்கின்ற தனக்குள்ள அந்த நிலைமையை, மன் உயிர்கள்- தன்னைப்போல நிலை பெற்றனவாகிய எல்லாவுயிர்களும், சார- அடையும்படியாக, தரும்- உதவி செய்கின்ற, சத்தி- தனது சத்தியோடு, பின்னம் இலான்- வேற்றுமையின்றி நிற்கின்றான்.

**விளக்கம்:**

**தன்னிலைமை:**

அறியாமையைச் செய்யும் ஆணவ மலமும், பிறவித் துன்பத்தைத் தரும் கன்ம மலமும், அசுத்தமாகிய மாயா மலமும் ஆகிய மும்மலங்களின் தொடர்பை உடையன உயிர்கள். இம்மலத் தொடர்பினாலேயே அவை பிறப்புட்படுகின்றன. இறைவன் மலத்தோடு சிறிதும் தொடர்பில்லாதவன். அது பற்றியே 'நின்மலன்' எனப்படுகின்றான். மல சம்பந்தம் இன்மையால் அவனுக்குப் பிறப்பில்லை என்பது அறியப்படும்.

மாற்றம் என்பது பிற பொருளின் வயப்படுவதால் வருவது. இறைவன் மலங்களின் வயப்படாமல் தன்வயத்தனாய் நிற்பவன். ஆகவே அவன் மாற்றமடையாமல் என்றும் ஒரு தன்மையனாய் நிற்பான் என்பது அறியப்படும்.

இவ்வாறு பிறப்பிற் படாது என்றும் யாதொரு மாற்றமும் இன்றி நிற்பதே இறைவனின் நிலைமையாகும்.

உயிர்கள் மலங்களின் வசப்பட்டு, நிலையில்லாத உலகச் சார்பை எய்தி, மாறிவரும் பிறவிச் சுழற்சியிற் பட்டுத் திரிகின்றன. இச்சுழற்சியிலிருந்து விடுபட்டு உயிரானது ஒரு

அறியாமையின் குழந்தைதான் தப்பான அபிப்பிராயம்.

நிலைப்பட்ட தன்மையை எய்தவேண்டுமாயின் என்றும் ஒரு தன்மையனாய் உள்ள இறைவனைச் சார்தல் வேண்டும். மலச்சார்பை விட்டு இறைவனைச் சார்ந்தால் அவ்விறைவனது தன்மையை உயிர்களும் பெறலாம். அவ்வாறு தன்னிலைமையை மன்னுயிர்கள் அடையும்படி செய்வது இறைவனது சத்தியேயாகும். சத்தி என்பது யாது, அதன் செயற்பாடுகள் யாவை என்பதை இங்குச் சுருக்கமாகக் காண்போம்.

**சிவமும் சத்தியும்:**

ஒருவனாகிய இறைவன் தானும் தன் சத்தியும் என இரு தன்மைப்பட்டு நிற்பன. இதனை எளிதில் விளங்கிக் கொள்வதற்கு இரண்டு எடுத்துக் காட்டுக்கள் உள்ளன. ஒன்று சூரியனும் அதன் ஒளியும். மற்றொன்று நெருப்பும் அதன் சூடும். சூரியன் பொருள். ஒளி அதன் குணம். நெருப்பு பொருள். சூடு அதன் குணம். இவ்வாறு பொருளும் குணமும் என இரண்டாய்ச் சொல்லும்படி நின்றாலும் உண்மையில் அவையிரண்டும் ஒன்றேயாம். பொருளையின்றிக் குணம் இல்லை. குணம் இன்றிப் பொருள் இல்லை. அதுபோலச் சிவம் என்பது பொருள். சத்தி அதன் குணம். சிவமும் சத்தியும் என இரண்டாய்ச் சொல்லும்படி நின்றாலும் அவை வேறு பொருள்கள் அல்ல. உண்மையில் அவையிரண்டும் ஒன்றேயாம். தானும் சத்தியும் ஒரு பொருளே என்பதை உணர்த்தவே சிவபெருமான் ஓருடம்பிலே ஆண் பெண் என இரு திறத்தனாய்க் காட்சியளிக்கிறான்.

சத்தி எனினும் ஆற்றல் எனினும் ஒன்றே. இறைவனது சத்தியாய் - ஆற்றலாய் நிற்பது அவனது பேரறிவேயாகும். 'சத்தி தன் வடிவேது என்னில் தடையிலா ஞானமாகும்' என்பர். சிவத்தினது சத்தி பிறிதொன்றால் தடுக்கப்படுதல் இல்லாத பேரறிவே எனக் கூறியிருத்தலைக் காணலாம்.

சூரியன் தானும் தன் ஒளிக்கதிரும் என இயைந்து நிற்கும். சேய்மையில் உள்ள தன்னிலையில் அது சூரியன் எனப்படும். அதன் ஒளிக்கதிர் உலகத்தில் பரவி உலகப் பொருள்களோடு தொடர்புகொண்ட நிலையில் அது ஒளி எனப்படும். அதுபோல இறைவன் எவற்றுக்கும் மேலாம் நிலையில் தன்னளவில் நிற்கையில் சிவம் எனப்படுவான். அவனது நுண்ணிய பேரறிவாகிய சத்தி எல்லாப் பொருள்களிலும் அவற்றின் உள்ளும் புறம்புமாய் நீக்கமற நிறைந்து நிற்க, இவ்வாறு அவன் உலகு உயிர்களோடு தொடர்பு கொண்ட நிலையில் சத்தி எனப்படுவான். ஒருவனாகிய இறைவன் எல்லாப் பொருள்களிலும் இவ்வாறு இரண்டறக் கலந்து நிற்றல் அவனது சத்தியினாலே என்பது இதனால் விளங்கும். இக்கருத்தே முதற்செய்யுளில் அகர வுயிராகிய உவமையில் வைத்து உணர்த்தப்பட்டது.

இறைவன் உலகுயிர்களோடு கலந்து நின்று இயக்குகிறான் என்றும் கூறலாம்; அவனது சத்தி அவ்வாறு கலந்து நின்று இயக்குகிறது என்றும் கூறலாம். இரண்டிற்கும் கருத்து ஒன்றுதான். ஓர் ஓவியர் இந்த ஓவியத்தை எழுதினார் என்று கூறுவதற்குப் பதிலாக அவரது கை இந்த ஓவியத்தை உருவாக்கியது என்று கூறலாம் தானே. ஓவியரும் அவரது கையும்போல இறைவனும் அவனது சத்தியும் என்று ஒரு வகையில் கொள்ளலாம்.

நங்கையினால் நாம் அனைத்தையும் செய்கிறோம்! அதுபோல நங்கையினால் இறைவன் அனைத்தையும் செய்கிறான்.

முதலில் உள்ள நங்கை நம் கை எனப் பிரிந்து பொருள் தரும். அடுத்து வரும் நங்கை பெண் எனப் பொருள்பட்டு இறைவனது சத்தியைக் குறிக்கும்.

சிவனே செயலைச் செய்பவனாக, சத்தி அவனுக்குத் துணையாதல் பற்றிச் சத்தியை அவனுக்குத் துணைவியாக வைத்துப் போற்றும் நிலை உண்டாயிற்று. சிவனே தலைமைப் பொருள் என்பதும், சத்தி அவன் வழிப்பட்டு நிற்பது என்பதும் இதனால் அறியப்படும். "எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்".

இறைவன் சிவமும் சத்தியுமாய் நிற்றலை விளக்குவதற்கு நெருப்பும் அதன் சூடும் என்ற மற்றொரு உவமையை முன்னே குறிப்பிட்டோம்.

உணவுப் பொருள்களைச் சுவையாக உண்பதற்கு ஏற்ற வகையில் பக்குவப்படுத்து தலைப் "பாகம் செய்தல்" என்பர். பாகத்தொழிலில் வறுத்தல், பொரித்தல், அவித்தல் முதலிய பலவகைச் செயல்கள் உண்டு. பல வகைப்பட்ட இச் செயல்களையெல்லாம் நெருப்பினது சூடு ஒன்றே செய்கிறது. அதுபோல இறைவனது சத்தி ஒன்றே படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய பல செயல்களைச் செய்கிறது.

இறைவனது சத்தி ஒன்றேயாயினும் அதனால் நிகழ்த்தப்படும் செயல்கள் பலவாதல் பற்றிப் பல சத்திகளாகச் சொல்லப்படும். உயிர்களின் அறிவை மும்மலங்களின் வழியே செலுத்தி, அவ்வுயிர்கள் இறைவனை நோக்காது உலகத்தையே நோக்கி நிற்கும்படி செய்யும் சத்தி திரோதான சத்தி எனப்படும். இப்பெயர் அது செய்யும் மறைத்தல் தொழில் பற்றி வந்ததாகும். திரோதானம்- மறைத்தல். இத்தொழிலால் பக்குவம் பெற்ற உயிர்களுக்கு ஞானத்தைக் கொடுத்து இறைவனைக் காட்டி இன்புறும்படி செய்யும் சத்தி அருட்சத்தி எனப்படும்.

இவ்வாறு இறைவனது சத்தி கட்டு நிலையில் உயிர்க்குயிராய் உடன் நின்று உயிர்கள் பக்குவம் பெறும்படி உதவும்; முத்திநிலையில் அவ்வாறு உடன் நின்று தன்னிலைமையை மன்னுயிர்கள் பெறும்படி உதவும். அச் சத்தியோடு பிரிப்பின்றி நிற்கின்றான் எங்கள் பெருமான் என்பது இச்செய்யுளில் உணர்த்தப்பட்டது. (தொடரும்...

## மன நிம்மதி இருந்தால் உடல் சுகம் அடையுமா?

மனித மனதில் சமாதானம் இருந்தால் உடலுக்கும் சுகமே என்பது முதியோர்கள் அடிக்கடி கூறுவது உண்டு. இதன் பொருளாவது, நோய்கள் வராமல் இருக்க மனதை சீர்செய்து நிறுத்தவேண்டும். மனதை நிம்மதியின் பாதைக்கு செலுத்தினால் அது உடலை நிம்மதியின் பாதைக்குச் செலுத்தும்.

மனிதனைப் பாதிக்கும் பல நோய்களுக்கும் காரணம் நிம்மதியின்மையே என்று விஞ்ஞானம் உறுதி செய்துள்ளது. நிம்மதி இழந்து மனப்பாரம் அதிகரிப்பதனால் உடலைப் பாதுகாக்கும் ஒரு நோயான "அல்ஷர்" குறித்து மருத்துவத்துறை கண்டறிந்த உண்மைகள் பிரசித்தியானவை. ''டென்ஷன்'' அதிகரிக்கும்போது உடலில் "ஹைட்ரொக்லாரிக் ஆசிட்" உற்பத்தியும் அதிகரிக்கின்றது. இந்த அமிலம் சிறுகுடலின் ''ம்யூகஸ்'' கவசத்தில் பாதிப்புண்டாக்கி குடல் தசைகளில் இரணங்களை உருவாக்குகின்றது. இரணங்கள் வளர்ந்து "அல்ஷர்" ஆகவும் சிலநேரம் "கான்ஷர்" ஆகவும் மாற்றமடைகின்றன. இவ்வாறு மனிதனை பாதிக்கும் நோய்களை "சைகோசமாடிக்" நோய்கள் என்று அழைக்கப்படும் மனதிலுள்ள பாதிப்பு வளர்ந்து உடலில் நோயாக உருவெடுக்கும் சூழ்நிலையே இது.

-ஓலைச்சுவடி-

**நேர்மையான முறையில் வெற்றிக்கு முயற்சித்தால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்.**

நாவலர் பக்கம்: (தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

– ஆறுமுகநாவலர் –

271. போசனம் முடிவடைந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?

எழுந்து, வீட்டுக்குப் புறத்தே போய்க் கை கழுவிவிட்டுச் சலம் வாயிற்கொண்டு, பதினாறு தரம் இடப்புறத்திலே கொப்பளித்து, வாயையும், கைகளையும் கால்களையும் கழுவி, ஆசமனம் பண்ணி, விபூதி தரித்தல் வேண்டும். அன்னமல்லாத பண்டங்கள் புசிக்கின், எட்டு தரம் கொப்பளித்து, ஆசமனம் பண்ணல் வேண்டும்.

272. உச்சிட்டத்தை எப்படி அகற்றல் வேண்டும்?

இலையை எடுத்து எறிந்துவிட்டுக் கை கழுவிக்கொண்டு உச்சிட்டத் தானத்தைக் கோமயஞ் சேர்ந்த சலம் தெளித்து, இடையிலே கையையெடாமலும், முன்பு தீண்டிய இடத்தைப் பின்பு தீண்டாமலும், புள்ளியில்லாமலும் மெழுகி, புறத்தே போய்க் கை கழுவிவிட்டுப் பின்னும் அந்தத் தானத்திலே சலம் தெளித்து விடல் வேண்டும்.

273. போசனஞ் செய்தபின் வாக்குச் சுத்தியின் பொருட்டு யாது செய்தல் வேண்டும்?

இல்வாழ்வார் தாம்பூலம் ஒரு தரம் மாத்திரம் புசிக்கலாம். துறவிகள் கிராம்பு, ஏலம், கடுக்காய், சுக்கு, வால்மிளகு என்பவைகளுள் இயன்றதொன்றைப் புசித்தல் வேண்டும்.

274. இராத்திரியில் எத்தனை நாழிகையினுள்ளே புசித்தல் வேண்டும்?

எட்டு நாழிகையினுள்ளே புசித்தல் உத்தமம். பதினொரு நாழிகை அளவேல் அதமம்; அதன்மேற் புசிக்கலாகாது.

275. போசன காலத்தில் விளக்கவியின் யாது செய்தல் வேண்டும்?

போசனம் பண்ணாது, அவ்வன்னத்தை வலக்கையினாலே மூடி, விளக்கேற்றி வருமளவும் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை மானசமாகச் செபித்துக்கொண்டிருந்து, விளக்கேற்றியபின், பானையில் அன்னத்தை இடுவித்துக் கொள்ளாது, அவ்வன்னத்தையே புசித்துக்கொண்டு எழல் வேண்டும்.

## சயனம்

276. எப்படிச் சயனித்தல் வேண்டும்?

கிழக்கேயாயினும் மேற்கேயாயினும் தெற்கேயாயினும் தலைவைத்துச், சிவபெருமானைச் சிந்தித்துக் கொண்டு வலக்கை மேலாகச் சயனித்தல் வேண்டும். வடக்கே தலைவைக்கலாகாது. வைகறையில் நித்திரை விட்டெழுந்து விடல்வேண்டும். சந்தியா காலத்தில் நித்திரை செய்தவன் அசுத்தன்; அவன் ஒரு கருமத்துக்கும் யோக்கியனாகான்; அவன் தான் செய்த புண்ணியத்தை இழப்பான்; அவன் வீடு சுடுகாட்டுக்குச் சமம்.

**உழைப்பும் நம்பிக்கையும் ஒன்றுசேருமிடத்தில் ஏழ்மையிராது.**

**277. இரவிலே காலம்பெறச் சயனித்து வைகறையில் விழித்தெழுந்து விடுதலினாற் பயன் என்ன?**

சூரியன் உதிக்க ஐந்து நாழிகை உண்டென்னும் காலம் பிராமீமுகூர்த்தம் எனப் பெயர் பெறும். சிவத்தியானத்துக்கு மனம் தெளிவது அக்காலத்தேயாம்; அன்றியும், அக்காலத்தில் விழிக்கின் நோய்கள் அணுகாவாம். இரா நித்திரைப் பங்கமும், வைகறை நித்திரையும், பகல் நித்திரையும் பற்பல வியாதிகளுக்குக் காரணம்.

மந்திரக் கிரியைகளோடு எழுதப்பட்ட ஸ்நானவிதி, சந்தியாவந்தனவிதி, பூசாவிதி, போசனவிதி என்னும் நான்கும் குருமுகமாகப் பெற்றுக்கொள்க.

## II. சிவாலய கைங்கரியவியல்

**278. சிவாலயத்தின் பொருட்டுச் செயற்பாலனவாகிய திருத்தொண்டுகள் யாவை?**

திருவலகிடுதல், திருமெழுக்குச் சாத்துதல், திரு நந்தவனம் வைத்தல், பத்திர புஷ்பமெடுத்தல், திருமாலை கட்டுதல், சுகந்ததூபமிடுதல், திருவிளக்கேற்றுதல், தோத்திரம் பாடல், ஆனந்தக் கூத்தாடல், பூசைத் திரவியங்கள் கொடுத்தல் என்பவைகளாம்.

### திருவலகிடுதல்

**279. திருவலகு எப்படி இடுதல் வேண்டும்?**

சூரியன் உதிக்குமுன் ஸ்நானஞ்செய்து, சந்தியா வந்தனம் முடித்துக்கொண்டு, திருக்கோயிலினுள்ளே புகுந்து மெல்லிய துடைப்பத்தினாலே, கிருமிகள் சாகாமல் மேற்பட அலகிட்டுக் குப்பையை வாரித் தூரத்தே கொண்டுபோய்க் குழியிலே கொட்டிவிடல் வேண்டும்.

### திருமெழுக்குச் சாத்துதல்

**280. திருமெழுக்கு எப்படிச் சாத்தல் வேண்டும்?**

ஈன்றணியதும் நோயையுடையதும் அல்லாத பசுவினது சாணியைப் பூமியில் விழுமுன், இலையில் ஏந்தியாயினும் ஏந்தல் கூடாதபோது, சுத்த நிலத்தில் விழுந்த சாணியை மேல் கீழ் தள்ளி நடுப்பட எடுத்தாயினும், வாவி நதி முதலியவற்றில் வடித்தெடுத்து வந்த சலத்துடனே கூட்டிச் செங்கற் படுத்த நிலத்தையும் சுண்ணாம்பு படுத்த நிலத்தையும் மண்படுத்த நிலத்தையும் மெழுகல் வேண்டும். கருங்கற் படுத்த நிலத்தை சலத்தினாலே கழுவி விடல் வேண்டும்; கருங்கல்லிலே சாணி படலாகாது.

### திரு நந்தவனம் வைத்தல்

**281. திருநந்தவனம் வைக்கற்பாலதாகிய தானம் யாது?**

சண்டாள பூமிக்கும் சுடுகாட்டுக்கும் மலசல மோசன பூமிக்கும் சமீபத்தினல்லாததாய், நான்கு பக்கத்தும் சுவரினாலேனும் வேலியினாலேனுஞ் சூழப்பட்டதாய்க் கீழே ஆழமாக வெட்டி எலும்பு முதலிய குற்றங்கள் அறப் பரிசோதிக்கப்பட்டதாய்ப் பசு நிரை கட்டப்பெற்றுக் கோசல, கோமயத்தினாலே சுத்தியடைந்ததாய் உள்ள நிலமேயாம்.

(தொடரும்...

(தொடர்ச்சி...

# கண்டோம் கதிர்காமம்

– திரு கவிமணி அன்னைதாசன் அவர்கள் –

ஐயா, இங்கு இந்த மலையைத் தரிசிக்க வருபவர்கள் வள்ளியும் முருகனும் விளையாடிய இந்த இடத்தில் தங்கள் நேர்த்திக்காக ஒரு கல்லை தமது கரங்களினாலே வைத்து வழிபட்டார்களேயானால் முருகனின் கிருபையால் அந்நேர்த்தி நிறைவேறும் என்பது ஐதீகம். இதன்பொருட்டு இங்கு வரும் அடியார்களினால் அவர்களின் நேர்த்திக்காக வைக்கப் பட்ட கற்களே இங்கு குவிந்துள்ளன என்றார்கள். எனவே நானும் ஓர் நேர்த்தி வைத்து ஓர் கல்லை மிகவும் பயபக்தி யுடன் அழகனை வேண்டி வைத்து வந் தேன். அந்த நேர்த்தியும் மிக அழகாக நிறைவேறியுள்ளது என்பதை வாசகர் களுடன் பகிர்ந்துகொள்ள ஆசைப்படு கிறேன். ஆக அன்றோடு முருகன் நின்றுவிடவில்லை. நம்பினோர் கெடு வதில்லை இது நான்கு மறைத் தீர்ப்பு. நம்பிக்கையைத் தளரவிடாது நம் மதம் காட்டும் வழியில் நடந்தால் நிச்சயம் எமக்கு நன்மையளிக்கும்.



நிச்சயமாக இங்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டும். இது எம்முடன் கூட வந்த பலருக்குத் தெரியாது. காரணம் இரு குழுக்களாகச் சென்றதால் மற்றைய குழுவினர் இதனைச் செய்யும் வாய்ப்பை இழந்திருந்தனர். அதுமட்டுமல்ல எம் குழுவில் இருந்த எல்லோரும் இதனைச் செய்ததுமில்லை. ஆக அதுவும் அந்த அழகனின் அருட்கடாட்சமே. அருளும் அருளாளர்களுக்கே என்பது ஆன்மீகக் கருத்தல்லவா.

மஞ்சள் அரைத்துக் குளித்த காட்சியைக் கண்ட நாம் சற்று அப்பால் செல்ல அங்கே முருகனும் வள்ளியும் கயிறு இழுத்து விளையாடிய ஓர் மலைத் திடலைக் காட்டினார்கள். ஆம் சமதரை போன்ற பாறைத்திடல். வெண்மை கலந்த கருமை நிலப்பரப்பு. அங்கே ஏறக்குறைய 4 - 5 மீற்றர் நீளத்திற்கு ஒரு நீளத்தடம் கயிறு போன்று படிந்துள்ளது. அதுமட்டுமல்ல அதன் ஒரு புறத்தில் குருதி சிந்தியது போன்று சிவந்த பாறைப் படிவுகள் நிரந்தரமாக உள. அதற்கும் அச்சாமிமார்கள் விளக்கம் தரவே செய்தனர். அது.....

வாசகர்களே இங்கே ஓர் குறிப்பை அடியேன் விளக்க ஆசைப்படுகிறேன். இங்கே சாமிமார்கள் என்றதும் சிலருக்கு இது பெரும் ஐயப்பாட்டைக் கொடுத்துவிடுகின்றது. இவரைச் சாமியார் எனக்குறிப்பிடலாமா? இவருக்கு இத்தகுதி இருக்கா? என்பது அகப்பேய்ச் சித்தர் தொடக்கம் அருணகிரியார் வரை............ ஆண்டவன் அருள் பெற்றவர்கள் என்பதை அறியாதவர் இலர். நதிமூலத்தையும், ரிஷி மூலத்தையும் ஆராயாதீர் என்பதும் எம்வழக்கு. பிணங்களின் குவியலைத் தாண்டி, தாங்கித்தான் கங்கை இப்பால் வர புனித தீர்த்தமாகி புண்ணிய தீர்த்தமாகி விடுகிறது என்பது இன்றும் கண்கூடு. பிரச்சினை என்னவென்றால் நாம் குறிப்பிடும் சாமிமார்களை நம்மோடு பழகி அவர்களின் பலம் பலவீனங்களைப்

பார்க்கும் சந்தர்ப்பங்கள் கிடைப்பதனால் அவர்கள் சாமிகளா ஆசாமிகளா என எடைபோட மனம் தூண்டுகிறது. இதனை ஏற்கனவே இத்தொடரில் விளக்கியிருந்தேன். அங்கு அப்படி வருபவர்கள் அனைவரையும் சாமி என அழைப்பது மரபு அவ்வளவுதான். இது எங்கள் ஐயப்ப அடியார்களிலும் நடைமுறையில் உள்ளதை நோக்குவீர்களாக. அதற்காக எவரையும் இச்சாமிகளிடம் சென்று ஆசிபெறுங்கள் எனக் கோருவதாகத் தயவுசெய்து கருதிவிடாதீர்கள்.

இத்தகு காட்சியைக் கண்டு பரவசப்பட்ட நாம் பிரயாணத்தைத் தொடர்ந்தபொழுது அங்கே இரு பாதைகள் தென்பட்டன. ஒன்று கட்டுமர வடிவிலும் மற்றொன்று படகு வடிவிலும் அருகருகே காணப்பட்டன. இவற்றில்தானாம் முருகனும் அவனது பரிவாரங்களும் வள்ளியைத் தேடி வனராசனிடம் வந்ததாகவும் அறிய முடிந்தது. நிலத்தை ஐந்தாகப் பிரித்த முன்னோர் கடலும் கடல்சார்ந்த இடத்தையும் நெய்தல் என்றனர். மலையும் மலை சார்ந்த இடத்தையும் குறிஞ்சி என்றனர். எமது காங்கேசன்துறை தொடக்கம் தொண்டைமானாறு வல்வெட்டித்துறை வல்லிபுரக்கோவில் எல்லாம் அசல் நெய்தல் நிலங்கள். ஆனால் இதுவோ நெய்தலுடன் கூடிய குறிஞ்சி நிலமாக அமைந்துள்ளது. உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் உன்னத இடமாக மிளிர்கிறது. ஆம் மலை அடிவாரத்தையும் சமதரையாக மிக நீண்ட ஆழமற்ற கரையோரத்தையும் வெள்ளைவெளேரென்ற மணற்றரையையும் கொண்டுள்ளதால் Boating செய்வதற்கும் நீச்சலடிப்பதற்கும் உகந்த இடமாகின்றது. ஆங்கிலப் படங்களில் வருவதுபோல நீச்சலுடையிலும் நீச்சல் உபகரணங்களைச் சுமந்தவாறும் வெளிநாட்டு இளம் சோடிகள் ஆணும் பெண்ணுமாக நீச்சலடித்துக்கொண்டிருந்தார்கள்.



இங்கும் எமது நல்லூரானுக்குப் பாடியது போன்று பொழுது போக்காக வந்தவரும் தொழுது வணங்கச் செய்கிறான் என்பதுபோல இங்கு வந்த இளஞ்சிட்டுக்களையும் ஒருமுறை தன்பாலீத்து வழிபட வைப்பவனாக உகந்தைமலையான் உறைந்துள்ளதைக் குறிப்பிட்டேயாக

வேண்டும். அதுமட்டுமல்ல அவர்களில் ஒரு சோடி எம்மிடம் வந்து தமக்கேயுரிய பாணியில் where murugan played with valli's hill என எம்மிடம் விசாரித்தது வியக்கவைத்தது. கந்தனின் திருவிளையாடலில் நாம் அறியா ஒரு பக்கத்தையும் இங்கு வரும் வெளிநாட்டவர்களும் அறியும் வாய்ப்பையும் அருள்பெறும் சந்தர்ப்பத்தையும் உகந்தை மலையான் உவந்தளிக்கிறான். உண்மையில் அதுவரை எம்மில் பலர் இதனை அறிந்திருக்கவில்லை. காலை இள்வெயிலும் மலை அடிவார மகிழ்வான காட்சியையும் பிரியமனமின்றி காலை 9.00 மணிக்கு மீண்டும் உகந்தை மலையானின் அன்னதான மடத்திற்குச் சென்றோம். மடத்தில் முல்லைப் பூப்போன்ற வெள்ளைவெளேரென்ற சாதமும் அவர்களுக்கே உரித்தான செத்தல் மிளகாய்ச் சம்பலும் பரிமாறினர். அப்பப்பா இதன் சுவையே தனி. அனைவருக்கும் போதும் போதுமெனப் பரிமாறினர். அத்துடன் அருமையான தேனீரும் சுடச்சுட வழங்கினர். அனைவரும் மாந்தியபின் அன்புச் சாமிமார் அனைவர்க்கும் எமது நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவித்தபின் எமது பயணம் தொடர்ந்தது.

9.45க்குத் தொடங்கிய பயணம் மீண்டும் அதே பரந்துவிரிந்த நெற் களனிகளுடாகக் கதிரமலையானை நோக்கித் தொடர்கிறது. 11.45 மணி அம்பாறைப் பெருந்தெருவின் மருங்கில் ஓர் சிறிய பெட்டிக்கடை. அங்கு குலை குலையாக செவ்விளநீக் குலைக் குவியல். நீரைக்கண்ட நாம்பன்போல பேருந்து நிற்கிறது. அனைவரும் தாக சாந்தி செய்யுங்கள். இறங்கினோம் ஆளுக்கொரு இளநீர் அருமையாய் இருந்தது. வயிற்றெரிச்சல் என்னவென்றால் அத்தனை கோம்பைகளும் எம்மைப் பார்த்துச் சிரித்தன. இங்கு என்றால் இவற்றை விடுவோமோ? கயர் தொடக்கம் வழுக்கல் வரை வழிச்சு உண்டிருப்போமே! என் மனம் ஏங்கியது.


12.15க்கு மீண்டும் பயணம். எங்கும் ஒரே காடு. சில இடங்களில் பாதை மிக நெளிந்து வளைந்து சென்றது. இடைக்கிடையே சிறு சிறு கிராமங்கள் குடிசைகள் அந்தக்காலத்துக் கொட்டில்கள்போல் களிமண் சுவர்கள் தடிகளைத் தட்டிகளாக்கி சந்து அடைத்து சுவர் எழுப்பியிருந்தனர். இன்னிசை இராகம் மீட்க மிக லாவகமாக நெளிவு சுழிவுகளுக்கேற்ப பேருந்து பறந்துகொண்டிருந்தது. என் மனத்திரையில் நான் நினைந்த நேர்த்தி ஓடிக் கொண்டிருந்தது. சியம்பலாண்டுவ என்ற இடத்தில் பேருந்தை நிறுத்தி நாமே எடுத்துவந்த பொருட்களைக் கொண்டு தேநீர் தயாரிக்க ஆயத்தமானோம். அங்கு தள்ளி ஓர் வாய்க்கால் கரையோரமாக வண்டியை நிறுத்தி அடுப்பு அமைத்து அயலில் நீர்பெற்று தெருவோரத்தில் விறகு சேர்த்து தேனீர் தயாரித்து முடிந்தது. அருகில் இருந்த கடையில் பாண் இருந்தது. ஆனால் எம்மில் சிலர் விசாரித்தபொழுது எமக்குப் போதியளவு இல்லை என்றார்கள். ஆனால் எமது சகோதரப் பாசை தெரிந்த அருணாசலம் ஐயா போன்றவர்கள் தமது உரையாடல் திறனால் உரிய பாணைப் பெற்று எல்லோரும் ஆனந்தமாகக் கடித்துக் குடித்தோம். சற்று ஓய்வு எடுத்தபின் பிரயாணத்தைத் தொடர்ந்தோம். கதிர்காமத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாகப் பட்டறிவு பெற்றவர்கள் பகர்ந்தனர். நடுக்காடு. நீண்ட பெருந்தெரு கறுப்புக்கோடு போல நீள்கிறது. சாரதி லாவகமாக பேருந்தை ஓட்டிக்கொண்டு இருக்கிறார். எம்மில் சிலர் அங்கே அங்கே சலசலப்பு.......

(தொடரும்...

**ஆடம்பரம் அதிகரிக்க அதிகரிக்க ஒழுக்கம் மறைய ஆரம்பிக்கிறது.**

(தொடர்ச்சி...

# ஸ்ரீ கருடபுராணம்



– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

### பிரேத ஜென்மம்

ஸ்ரீ நாராயணரிடம் கருடாழ்வார், மானிடர்களுக்கு இறந்த பின்பு ஆவி உருவம் என்ற பிரேத ஜென்மம் ஏற்படாமல் இருப்பதற்கான வழிமுறைகள் எவை என்று வினாத் தொடுக்கிறார். அதற்கு பரந்தாமன் விளக்கமளிக்கிறார்.

மானிடர்கள் இறந்த பிறகு ஒரு உடலை அடைவது என்பதுதான் வழமையாக நிகழும். அப்படியின்றி ஆவி உருவம் - பிரேத ஜென்மத்தை எடுப்பது என்பது மிகவும் கொடியது. இந்த நிலை ஐந்து வயதுக்குட்பட்டவருக்கு ஏற்படாது. அதற்கு மேற்பட்ட ஆண், பெண் இருவருக்கும் ஏற்படலாம். அவ்வாறு ஏற்படாமல் தவிர்ப்பது எவ்வாறு என்றும் பரந்தாமர் கூறுகிறார்.

புவியில் பிறந்த ஒவ்வொருவரும் என்றோ ஒருநாள் இறக்கப்போவது நிச்சயம். இதனை யாரும் தவிர்க்க முடியாது. எனவே ஒவ்வொருவரும் தமது இறப்பிற்கு முன்னர் வாழும் காலத்தில் பிரேத ஜென்மம் ஏற்படாதவாறு நடந்துகொள்ள வேண்டும்.

ஆவி உருவம் அடையாமல் இருப்பதற்கு வாழும் காலத்தில் "தானதருமம்" செய்ய வேண்டும். தானதருமங்கள் எவ்வாறு செய்ய வேண்டும் என்று சாத்திர விதிகளில் கூறப்பட்டுள்ளன. அவ்விதிகளைக் கடைப்பிடித்து மன உறுதியும் மனத்தூய்மையும் கொண்ட நிலையில் தானதருமம் செய்யப்படல் வேண்டும். இவ்வாறின்றிச் செய்யப்படும் தானதருமங்களினால் பயன் ஏதும் விளையப்போவதும் இல்லை.

**வேலை என்பது உடம்புக்கும் மனதுக்கும் போடப்பட்ட தீனி.**

ஒருவர் தான் உயிருடன் இருக்கும் போது தானதருமங்கள் செய்யவேண்டும். அவ்வாறின்றி ஒருவர் இறந்த பின்னர் தான தருமம் வேறு நபர்களால் செய்யப்படுதல், இறப்பிற்கு முன்னால் தானே செய்யும் தருமத்திற்கு ஒருபோதும் இணையாகாது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இறந்த பின்னர் செய்யப்படும் ஆயிரம் தருமங்களும் அவர் இருக்கும் போது செய்த ஒரே ஒரு தானத்திற்கு இணையாகாது.

தானம் செய்பவர் நல்ல சிந்தனையுடையவராகவும், தானம் வாங்குபவரும் நல்லவராகவும் இருக்க வேண்டும். அத்துடன் தானம் அளிக்கப்படும் இடமும் நல்லதொரு இடமாக இருக்க வேண்டும். எல்லாமே நல்லதாக அமைந்து விட்டால் அவ்வாறு அளிக்கப்படும் தானத்தால் கோடிப்பயனைப் பெறலாம்.

தானங்களில் சிறந்தது கோதானம், அன்னதானம் முதலியவையாகும். சிறந்த பசுக்களை தானமாக அளிப்பது கோதானமாகும். நல்ல குணமுடைய ஏழைகளுக்கு அவர்கள் கேட்காதபோது பசுக்களை வழங்குதல் சிறந்த தானமாகும். ஏழையொருவன் தான் வாழ்வதற்காக யாசித்து நிற்கையில் வழங்கப்படுவது தருமம் ஆகும். தானம் என்பது ஒருவர் தாமாக முன்வந்து வழங்குவது. கேட்ட பின்னர் கொடுப்பது தருமம் ஆகும். தானத்திற்கும் தருமத்திற்குமுள்ள வேறுபாட்டை அறிந்துகொள்ள வேண்டும். எனவே தருமம் செய்வதைவிட தானம் செய்ய முயற்சி செய்ய வேண்டும். வறியநிலையில் உள்ளவருக்கு தேடிச் சென்று அவர்களுக்குத் தேவையான வாழ்வாதாரங்களை வழங்க வேண்டும்.

பிராமணர்களுக்கு தானதருமம் செய்வதாயின், தானம் பெறுபவர் நற்குண நல்லொழுக்கம் உடையவராக இருக்க வேண்டும். நற்குணமுடையவன் வேதசாத்திரங்களை கற்றவராக இருக்க வேண்டும். கற்ற வேதசாத்திரங்களுக்கு அமைய நடப்பவராக இருக்க வேண்டும். பெயரளவில் அந்தணராக இருப்பவனுக்குத் தானம் கொடுப்பது முறையல்ல. அத்தகையவர்கள் தானம் பெறும் தகுதியற்றவர் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

அன்னதானம் என்பது பசித்தவர்களை முதன்மைப்படுத்திச் செய்யப்படல் வேண்டும். அப்படியன்றி ஆடம்பர நோக்குடன் செய்யப்படலாகாது.

எந்தத் தகுதியும் அற்றவன் தானத்தைப் பெற்றால் அவன் நரகத்தை அடைவான். தானம் கொடுத்தவனுக்கு அதனால் பயன் இல்லை.

தானப் பொருளொன்று ஒருவருக்கு மட்டுமே வழங்கப்படல் வேண்டும். அனைவரும் எடுத்துக் கொள்ளுங்கள் என்று பலருக்கு ஒரு பொருளை வழங்கக் கூடாது.

தானம் வழங்குவதில் "விருஷோற்சர்க்கம்" என்பது சிறப்பாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருவர் உயிருடன் உள்ளபோது "காளைக் கன்று" ஒன்றை தகுதியானவருக்கு தானம் செய்வது விருஷோற் சர்க்கம் என்பதாகும். அது வேள்வி புரிவதைக் காட்டிலும் உயர்வானது. இதனைச் செய்து ஆவி உருவம் ஏற்படாது தவிர்க்கலாம்.

விருஷோற் சர்க்கம் கார்த்திகை மாதத்து பௌர்ணமியிலாவது மற்ற எந்தப் புண்ணிய நாளிலாவது செய்யலாம். உத்திராயண காலத்து வளர்பிறையிலாவது தேய்பிறையிலாவது துவாதசி திதியில் செய்யலாம்.

புண்ணிய திதியில் யோக நட்சத்திரம் கூடிய நாளில் புனிதமான திருத்தலத்தில், வேத சாத்திரங்களை முறைப்படி கற்றுணர்ந்த அந்தணர்களைக் கொண்டு ஓமகுண்டலம் வளர்த்து வேள்வி முதலானவற்றைச் செய்ய வேண்டும். இவ்வாறு இக்கருமத்தைப் புரிபவர் தம்மை தூய்மையுடையவராக மாற்றிக் கொள்கிறார்.

அதன்பின்பு நவக்கிரக பூசை செய்து மாதுர் தேவதைகளை அர்ச்சனை செய்து பூரண ஆகுதி கொடுத்து மகாவிஷ்ணுவைக் குறித்து சிரார்த்தம் செய்து காளைக் கன்றை

நண்பன் என்பவன் உன் குறைகளையெல்லாம் அறிந்தும் உன்னை விரும்புவான்.

நீராட்டி அதற்கு ஆடை மற்றும் தூயமலர் களைக் கொண்டு அலங்கரிக்க வேண்டும். மேலும் நான்கு காளைக் கன்றுகளோடு அந் தக் கன்றையும் நிற்கவைத்து, வேள்வியில் உண்டான அக்கினியை வலம்வரச் செய்ய வேண்டும். பின் வடதிசை நோக்கி நின்று அக்காளைக் கன்றை நோக்கி, "தருமமே நீயே காளை கன்றானாய்! பிரம்மதேவனால் ஆதியில் படைக்கப்பெற்றாய்! உன்னால் என் பாவங்கள் நீங்க வேண்டும்'' என்று கூறி அதைத் தானம் அளிக்க வேண்டும்.

இந்தத் தானத்தை இந்த முறையில் இறந்துபோன ஒருவருக்காகச் செய்யலாம். அவ்வாறின்றி இத்தகைய தானத்தை உயி ருடன் இருக்கும் காலத்தில் அவரே செய்ய லாம். அவ்வாறு செய்யும்போது தம்மைக் குறித்து அந்தக் காளைக்கன்றின் வாலில் மந்திர நீர்விட்டு, அந்த நீரை தன்னுடைய கையினால் ஏந்தி சிரசில் தெளித்துக்கொள்ள வேண்டும்.

பின்பு மற்றக் காளைக் கன்றுகளுடன் அக்கன்றையும் போகுமாறு விட்டுவிட வேண் டும். அதன்பின் தாம் விரும்பும் பொருட்களை அந்தணருக்குத் தானமாகக் கொடுக்க வேண் டும். இவ்வாறு செய்வது தான் விருஷோற் சர்க்கம் எனப்படும் தானமாகும்.

இன்று இருப்பவர் நாளை இருப்பார் என்பது நிச்சயம் இல்லை. மனித வாழ்க்கை அநித்தியமானது. ஆகையால் எந்த ஒரு நற் காரியத்தையும் நாளை, நாளை மறுநாள் என்று நாட்களைக் கடத்தாமல், இருக்கும் காலத்தில் உடனேயே செய்துவிடல் வேண்டும்.

இறந்தவருக்காகச் செய்யும் காரியங் களும், தானங்களும் உள்ளன. இறந்த பதினோ ராம் நாளிலிருந்து இந்தச் சடங்குகள் தொடங்கு கின்றன. பதினோராம் நாள் செய்யும் காரியத் திற்கு சோடசசிரார்த்தம் (திவசம்) என்று பெயர். இதன் பிறகு செய்யும் காரியத்திற்குச் சபண்டி கரணம் என்று பெயர்.

இவற்றைத் தவிர வேறுபல தான முறைகளும் உண்டு. உப்பு, எள், இரும்பு, பருத்தி ஆடை ஆகியவற்றையும் தானமாக வழங்கலாம். வசதி இல்லாதவர்கள் எல்லாம் பொருள்களையும் தானம் கொடுக்க முடியாது. எனவே தங்களால் முடிந்த ஏதாவது பொருட் களைத் தானம் கொடுத்தால்கூடப் போதுமானது. தானம் பெறும் அந்தணர்கள் எதனையும் கேட்டுக் கட்டாயப்படுத்தி வாங்கக் கூடாது.

ஒருவர் தன் வாழ்நாளில் யாத்திரை செய்ய வேண்டும். கங்கை, காசி, இராமேஸ் வரம், சிதம்பரம், திருவண்ணாமலை, திருக் காளத்தி போன்ற ஆலயங்களுக்குச் செல்ல லாம். இத்தலங்களில் புனித நீராடி வரவேண் டும். இதற்கு வாய்ப்பில்லாதவர்கள் அருகில் உள்ள ஆலயங்களுக்குச் சென்று புனித நீராடி முறைப்படி தரிசனம் செய்து வரவேண்டும்.

ஒருவன் பிரேத ஜென்மம் அடையா மல் இருக்க இறந்த பெற்றோருக்கு தவறாமல் காரியங்களைச் செய்ய வேண்டும். இறந்த ஒருவருக்குப் பதினோராம் நாள் மற்றும் பன்னி ரெண்டாம் நாள் காரியங்களைச் செய்வதுடன், ஒவ்வொரு மாதமும் இறந்த நாளான அதே திதியில் திவசம் செய்ய வேண்டும். இதற்கு மாசியம் என்று பெயர். இவ்வாறு பன்னிரெண்டு மாதங்கள் செய்ய பிறகு வருரஷாத்தியம், என்று சொல்லப்படுகின்ற முதல் வருட சிராா்த் தத்தைச் செய்ய வேண்டும்.

பிறகு ஆண்டுதோறும் திதி வரும் நாளில் பெற்றோருக்கு திவசம் செய்ய வேண் டும். இவ்வாறு முறைப்படி செய்பவர் ஆவி உருவம் அடையமாட்டார். அவதார புருடர் களான யோகிகள், துறவிகள் ஆகியோர் அடை யும் புண்ணிய லோகத்தை அடைவார்கள்.

மகாலட்சுமியின் மணாளனான ஸ்ரீ மகா விஷ்ணுவைப் பணிந்து, பறவை அரசனான கருடாழ்வார், பூலோகத்திற்கும், யமலோகத் திற்கும் இடைப்பட்ட தூரம் பற்றியும் யமலோ கத்தின் தன்மை பற்றியும் கேட்கிறார்.

அதற்குப் பரந்தாமன் விரிவாகப் பதிலளிக்கிறார்.

**அறிவற்ற அச்சம் இடையூறுகளை இரட்டிப்பாக்குகிறது.**

மானிடர் வாழும் பூலோகத்திற்கும் எமலோகத்திற்கும் இடையிலுள்ள தூரம் எண்பதாயிரம் காத தூரமாகும். ஒரு காததூரம் என்பது பத்துமைல் ஆகும். (16 கிலோமீற்றர்) எமலோகத்தின் தலைவனாக விளங்குபவர் எமதர்மராஜன். உலகில் பிறந்து வாழும் ஒவ் வொருவரது வாழ்க்கை காலம் முடிந்ததும் அவர்களின் உயிர்களைக் கவர்ந்து வருவதற்கு தூதர்களை அனுப்பி வைப்பான். அவர்கள் தங்களிடம் பாசம், முசலம் முதலிய ஆயுதங் களைக் கொண்டிருப்பர். இவ்வாறு எமனுக்கு ஏவல் புரியும் தூதர்களை கிங்கிரர்கள் என்பர்.

எமதர்மராஜன் கிங்கிரர்களில் மூவரை அனுப்பி வைப்பான். இவர்கள் பூலோகம் சென்று ஆயுட்காலம் முடிந்தவர்களின் உயிரை பாசத்தால் பிணைத்து காற்று உருவமான சூட்சும தேகத்தில் அடைத்து எமலோகத் திற்கு கொண்டு வருவர்.

எமதூதர்கள் ஆயுள் முடிந்தவரை ஆவியுருவத்தில் எமலோகத்திற்குக் கொண்டு வந்து எமதர்மராஜன் முன்பாக நிறுத்தி, "தர்ம பிரபு! தங்கள் கட்டளைப்படி ஆயுட்காலம் முடிந்த இந்த உயிர்களை தங்கள் சபைக்கு கொண்டுவந்து நிறுத்தியுள்ளோம்! இனித் தங் கள் கட்டளைப்படி நடக்கக் காத்திருக்கின் றோம்! என்று விண்ணப்பித்துக் கொள்வார்கள்.

எமதர்மராஜன் தூதர்களிடம், "கிங்கிரர் களே! ஆவியுருவில் உள்ள இந்த ஜீவனை நீங்களே கொண்டுபோய் அவன் வீட்டிலேயே விட்டுவிட்டு வாருங்கள். மீண்டும் பன்னிரெண்டு நாள் கழித்து நீங்களே சென்று முறைப்படி இச்சபைக்கு கொண்டு வாருங்கள்" என்று உத்தரவிடுவான்.

அவ்வாறு எமதர்மராஜன் கூறியதும் தாமதியாது மீண்டும் அந்த உயிரை அவன் வீட்டிலேயே அவனைக் கட்டியுள்ள பாசத்தை அவிழ்த்து விட்டுவிட்டுத் தம் இடத்திற்கு திரும்பி விடுவர்.

சூட்சும உடலுடன் ஆவிவடிவில் உள்ள அந்த உயிர் தன் உடல் வைக்கப்பட்ட சுடு காட்டுக்குச் செல்லும். அங்குதன் உடலுக்குள் புகமுடியாது தவிக்கும். தன்னுடலுக்கு உற் றார் தீ வைக்கும் பொழுது உயரத்தில் ஆவி வடிவில் நின்றுகொண்டு ஓலமிட்டு அழும். அந்த ஆவி புண்ணிய ஆத்மாவாக இருந்தால் தன்னுடல் எரிந்து சாம்பலாவது கண்டு மகிழ்ச்சி அடையும்.

உடலானது எரிந்து சாம்பலானவுடன் அந்த ஜீவனுக்கு பிண்டத்தாலான உடலுண் டாகும். சிதையில் உடல் எரிந்து சாம்பலாகும் போது தலை வேகும் வரை அந்த ஜீவனுக்குத் தம் உடல்மீதும் மற்றும் உறவுகள், பொருள் கள் மீதுமுள்ள ஆசையானது இருக்கும்.

மரணமடைந்தவரின் மகன் பத்து நாட் களுக்கு தினமும் பிண்டம் போட வேண்டும். அவ்வாறு போடும் பிண்டத்தின் காரணமாக உயிருக்குப் பிண்டத்தாலான உடல் உண்டா கும்.

முதல் நாள் போடும் பிண்டத்தினால் தலை உண்டாகும்.
இரண்டாம் நாள் போடும் பிண்டத்தினால் கழுத்தும், தோலும்,
மூன்றாம் நாள் போடும் பிண்டத்தினால் மார்பும்,
நான்காம் நாள் போடும் பிண்டத்தினால் வயிறும்,
ஐந்தாம் நாள் போடும் பிண்டத்தினால் உந்தியும் (தொப்புளும்),
ஆறாம் நாள் போடும் பிண்டத்தினால் பின்பகுதியும் (முதுகும்)
ஏழாம் நாள் போடும் பிண்டத்தினால் குய்யமும் (அபானவாயில்),
எட்டாம் நாள் போடும் பிண்டத்தினால் தொடைகளும்,
ஒன்பதாம் நாள் போடும் பிண்டத்தினால் கால்களும்,
பத்தாம் நாள் போடும் பிண்டத்தினால் உடல் முழுவதும் உண்டாகும்.

இவ்வாறு முழு உடல் பெற்றவுடன் தாம் வசித்து வந்த வீட்டிற்கு வருவார். ஆனால் வீட்டிற்குள் செல்ல மாட்டார். வீட்டு வாசலில் நின்று விடுவார். வருவோர் போவோ ரைப் பார்ப்பார். ஆனால் பேச முடியாது, பசி தாகம், காரணமாக வருந்தும்.

இவ்வாறு பிண்ட உருவைப் பெற்று பதினோராம் நாளிலும், பன்னிரெண்டாம் நாளி லும் தன் மகனால் அந்தணர் மூலமாக அளிக் கப்பட்டதை உண்பர்.

பதின்மூன்றாம் நாள் எமதூதர்கள் வந்து பிண்ட உருவம் பெற்ற உயிரை முன் போல பாசத்தால் பிணைத்துக்கட்டி இழுத்துச் செல்வர். அந்த உயிர், தான் வாழ்ந்த வீட்டை திரும்பித் திரும்பிப் பார்த்துக் கதறியபடி செல்லும்.

கிங்கரர்கள் பிண்ட உடலைப்பெற்ற உயிரை இழுத்துச் செல்லும்போது இடையில் பல துன்பங்களுக்கு ஆளாக நேரும். அவர் கள் இவ்வுடலை நாளொன்றுக்கு இருநூற்று நாற்பத்தேழு காததூரம் வீதமாக பகல் இரவு என்று பாராமல் இழுத்துச் செல்வர்.

அவ்வாறு செல்கையில் வழியில் ஒரு காட்டைக் கடந்து செல்ல வேண்டும். அக்காடு மிகவும் அடர்ந்ததாக இருக்கும். மரங்களின் இலைகள் வாள் போன்று கூர்மையானதாக இருக்கும். பசியாலும், தாகத்தினாலும் வருந் தும் அவ்வுடல் அந்தக் காட்டைக் கடக்க பெரும் சிரமப்படும். அவ்வாறு சிரமப்படும்போது, தன் சுற்றத்தாரை நினைத்துப் பார்க்கும். யாராலும் தனக்கு உதவ முடியாத நிலை இருப்பதை எண்ணி எண்ணி வருந்தும். இறப்பதற்குப் பிறகும் ஒரு வாழ்க்கை உண்டு என்பதை இப்போது புரிந்து கொள்ளும் அவ்வுயிர் தனது கடந்தகால தவறுகளுக்காக துன்பப்படும். தான் தானதருமம் செய்யாததையும், பிறரை நிந்தித்து துன்பப்படுத்தியதையும், குருவைத் துணையாகக் கொள்ளாததையும், இறைவன் புகழ் பாடாததையும், அவனது நாமத்தைச் சொல்லாததையும், விரதங்களை முறைப்படி யாக கடைப்பிடிக்காததையும் நினைத்து அழுது புலம்பும். எமதூதர்கள் வதைப்பதால் ஏற்படும் வேதனையால் அந்த உயிர் அலறும்.

உற்றார் உறவினரை, நண்பர்களை நினைத்து உதவுவதற்கு யாரும் இல்லையே எனத்துடிக்கும் உயிர்களின் அவலம் கண்டு, எமதூதர்கள், "அடே! மடையா, வாழும் காலத் தில் தானதருமங்களைச் செய்யாமல் தகாத காரியங்களைச் செய்தாயே, இப்போது உனக் குத் துணையாக யார் வருவார்கள்?" என்று பாசக்கயிற்றால் அடித்து இழுத்துச் செல்வார் கள். மேலும் வழியெங்கும் பல்வேறு இடை யூறுகளைக் கடந்து செல்ல வேண்டும்.

எமலோகத்தை அடைவதற்கு முன்பாக "வைவஸ்வதபட்டணம்" என்று ஒரு நகரை அடைய நேரும். அங்கே பெரிய பெரிய மாளி கைகள் ஒன்றோடொன்று நெருங்கியதாகவும், அச்சம் தரும் நிலையில் பிரமாண்டமானதாக வும் இருக்கும். அங்கே பலவித விலங்குகள் காணப்படும். அவை யாவும் பயத்தை உண் டாக்கும் கோர உருவங்களை உடையவை. அந்த இடத்தை காணவே பிண்ட உடலுக்கு நடுக்கமும் வேதனையும் உண்டாகும். அது மட்டுமன்றி அந்த இடத்தில் ஆவியுருவில் உள்ளவர் பலர், அந்த இடமே அதிரும்படி வானமே கிளியுமாறு பெருங்குரலில் ஓலமிட்டுக் கதறிக் கொண்டிருப்பர். அவர்கள் யாவரும் பாவஞ் செய்தவர்கள். அதைக் கண்டு பிண்ட உடலுக்குக் தம்மை நினைத்துத் துக்கம் அதிகரிக்கும்.

அந்த இடத்தில் தண்ணீர் இருக்கும். ஆனால் அருந்துவதற்கு உதவாது. அங்குள்ள நீர் யாவும் வெப்பத்தால் கொதித்துக் கொண் டிருக்கும். அதனால் தாகத்தால் துடிக்கும் பிண்ட உடலுக்குக் குடிக்கத் துளி நீரும் கிடைக்காது. அந்த இடத்தில் மேகங்கள் சூழ்ந்து காணப்படும். மழையும் பொழியும் அது இரத்த மழையாக இருக்கும்.

தனக்கு வசதிவாய்ப்பிருந்தும் ஒருவரின் பசியையும் தாகத்தையும் போக்கவில்லையே!

**செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான். செய்யத் தெரியாதவன் போதிக்கிறான்.**

ஒருவருக்கும் எந்த நன்மையும் செய்யாது இருந்து விட்டோமே என்று பிண்ட உருவில் இருந்து சிந்திப்பதனால் என்னபயன் விளையப் போகிறது. வாழும் காலத்தில் முறைப்படியாக நல்ல சிந்தனையை உடையவராக இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு துன்ப நிலையில், தனக்கு நல்லது சொன்னவர்களை எல்லாம் உதாசீனம் செய்து நன்னெறிக்கு மாறாக தீயவைகளில் நாட்டம் வைத்து, அதனால் பாவம் சூழ்ந்துவிட்டதே என்று அப்போது - பிண்ட நிலையில் இருந்து கொண்டு வேதனைப்படுவதில் பயனில்லை. குமுறி அழுவதால் கண்ணீரை துடைக்க யாரும் இருக்கமாட்டார்கள்.


தம் குறையைக் கேட்பவர் யாரும் இல்லை என்றாலும், ஓலமிட்டு அழுது கொண்டிருக்கும் பிண்ட உடலை எமதூதர்கள், எமலோகம் நோக்கி இழுத்துச் செல்வதிலேயே குறியாக இருப்பர்.

(தொடரும்...

## நீங்கா நினைவில்...

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியாகும் "ஞானச்சுடர்" ஆன்மிக மலருக்காக தவறாது ஆக்கங்களை வழங்கி வந்த பெருந்தகை சிவ. சண்முகவடிவேல் அவர்கள் காலமானார் எனும் செய்தி சைவப் பெருமக்கள் அனைவரையும் பெருந்துயரில் ஆழ்த்தியது.

"ஞானச்சுடர்" கட்டுரையாளர் கௌரவிப்பு நடைபெற்ற மூன்று முறையும் சிவ. சண்முகவடிவேல் ஐயா அவர்கட்கு "மூத்த கட்டுரையாளர்" எனும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையை பேரவை பெருமையுடன் நினைவிற் கொள்கிறது.



"புராண வித்தகர்" எனும் சிறப்புப் பெயருடன் வலிகாமத்து ஆலயங்கள் அனைத்திலும் அன்னாரது புராண விரிவுரைகள் நடைபெற்றமையை சைவ அபிமானிகள் என்றும் நினைவிற் கொள்வர்.

சந்நிதியான் ஆச்சிரமத்தோடு மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த ஒரு நல்ல உள்ளத்தின் இழப்பு பேரவையினரையும், ஆச்சிரம சுவாமிகளையும் பெருந்துயரில் ஆழ்த்தியுள்ளது.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய முருகன் திருக்கருணை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

-பேரவையினர்-

**வலிமையின் ரகசியம் நம்பிக்கை.**

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருப்பரங்குன்றம்

# ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோவில் (முதற்படைவீடு)

– வல்வையூர் அப்பாண்ணா –

பாண்டி நாட்டின் தலைநகராக விளங்கிய மதுரைக்குத் தென்மேற்கே ஐந்து மைல் தூரத்தில் அமைந்துள்ளது திருப்பரங்குன்றம். மதுரை நகரின் இரு பிரதான பேருந்து நிலையங்களான அண்ணா பேருந்து நிலையம், பெரியார் பேருந்து நிலையம் ஆகியவற்றிலிருந்து அடிக்கடி பேருந்துகள் திருப்பரங்குன்றம் நோக்கிப் புறப்பட்டுச் செல்கின்றன. மதுரையில் தமிழ் வளர்த்த கடைச்சங்க காலத்தில் இந்நகரம் அமைந்திருந்ததாக "மாடமலி மறுகில் கூடல் குடவயின்" என்று திருமுருகாற்றுப்படையும், "கூடற் குடவயின் பரங்குன்று என அகநானூறும் கூறுகிறது.

திருப்பரங்குன்றம் நகருக்கு நடுவே, சுமார் முன்னூறு அடி உயரத்தில் காணப்படும் மலை சிவலிங்க வடிவிலே தோற்றமளிப்பதால், சிவபெருமானே குன்றுருவில் காட்சியளிப்பதாகக் கருதப்பட்டு தொன்றுதொட்டே "பரங்குன்று" என அழைக்கப்பட்டு வருகிறது. இக்குன்றைச் சிவபெருமான் என்று எண்ணி நித்தம் தொழுவதால் வினைகளெல்லாம் தீர்ந்துவிடும் எனத் திருஞானசம்பந்தர் பாடிய தேவாரம் இது.

"மைத்தகு மேனி வாளரக் கன்தன் மகுடங்கள்
பத்தின திண்தோள் இருபதும் செற்றான் பரங்குன்றைச்
சித்தம தொன்றிச் செய்கழல் உன்னிச் சிவன்என்று
நித்தலும் ஏத்தத் தொல்வினை நம்மேல் நில்லாவே"

கைலாயத்தில் இறைவன் உமாதேவிக்குப் பிரணவப் பொருளை உபதேசிக்கையில் தன் தாயின் மடிமீது அமர்ந்திருந்த பாலமுருகனும் அம்மந்திரப் பொருளைக் குருமுகமாகவன்றி மறைமுகமாக அறிந்து கொண்டார். புனிதமான மந்திரப் பொருளைக் குருமூலமாகவே தெரிந்துகொள்ள வேண்டுமென்றும், மறைமுகமாக அறிந்துகொள்ளுதல் பாவமென்றும் சாஸ்திரங்கள் கூறுகின்றன. குரு பக்தியில்லாமல் ஞானத்தை அடைய முடியாது என சாஸ்திரம் வலியுறுத்துவதையே திருமந்திரம் இவ்வாறு கூறுகிறது.

"தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே"

-திருமந்திரம்

முருகப்பெருமானே பிரணவ மந்திர சொரூபமாக இருந்தபோதிலும், உலக நியதிக்குப் புறம்பான காரியத்தைச் செய்ததால், அக்குற்றத்திற்குப் பரிகாரம் செய்யவேண்டிக் குருமூர்த்தி திருப்பரங்குன்றத்திற்கு வந்து தவம் செய்யலானார். முடிவில் சிவபிரானும் பார்வதி அம்மையும், பரங்கிநாதர் - ஆவுடையநாயகி எனும் பெயருடன் காட்சி கொடுத்து ஆசி வழங்கினர். முருகப்

பெருமானால் வழிபடப்பட்ட இக்கோவில் மீனாட்சி - சுந்தரேஸ்வரர் ஆலயம் எனும் பெயரில் (திருப்பரங்குன்றம் கோவிலருகே) சந்நிதி வீதியில் அமைந்திருக்கிறது. இவ்வாலய தரிசனம் செய்த பின்னரே முருகன் கோவிலுக்குச் செல்லவேண்டுமெனப்பது ஐதீகம். முருகக் கடவுளுக்கு சிவபெருமான் காட்சி தந்த நன்னாள், திருப்பரங்குன்றத்தில் தைப்பூச விழாவாகப் பத்து நாட்கள் கோலாகலமாகக் கொண்டாடப்படுகிறது. சேர சோழ பாண்டியர் மூவரும் பரங்கிரி நாதரை வழிபட்டுப் பேறுகள் பெற்றமையை சுந்தரமூர்த்தி சுவாமிகளின் "அடிகேள் உமக்காட் செய...." என்று தொடங்கும் தேவாரப் பாடலில் "முடியால் உலகாண்ட மூவேந்தர் முன்னே..." எனவரும் அடிகள்மூலம் அறிகிறோம்.

சூரன் முதலான அசுரர்களை அழித்துத் தேவர்களின் துயர்துடைத்தமைக்கு நன்றி செலுத்தும் வகையில் இந்திரன் தன் புதல்வியாகிய தேவசேனாதேவியை திருப்பரங்குன்றத்திலே திருமணஞ் செய்து கொடுத்ததாக கந்தபுராணம் கூறுகிறது. இத் திருமண விழாவில் பிரம்மா விவாகச் சடங்குகள் இயற்றவும், சூரிய சந்திரர்கள் ரத்ன தீபங்கள் தாங்கி நிற்கவும், பார்வதி-பரமேஸ்வரர் கண்டு களிக்கவும், இந்திரன் தாரை வார்த்துக் கொடுக்க முருகப்பெருமான் தேவசேனாதேவியைத் திருமணஞ் செய்துகொண்டார் என்பதை திருப்பரங்கிரிப் புராணம் தெளிவுபட உரைக்கிறது. முருகன் தேவசேனையைத் திருமணஞ் செய்த பங்குனி உத்தர நன்னாளை இத்தலத்தில் பிரம்மோற்சவமாகக் கொண்டாடுகிறார்கள். இந்த வரலாற்றினை விளக்கும் வகையில் திருப்பரங்குன்றத்தின் மலைக்கருவறையில் முருகப்பெருமான் தேவசேனை அம்பாளுடன் மட்டுமே வீற்றிருக்கிறார்.

திருப்பரங்குன்றத்திற்கும் திருமுருகாற்றுப்படைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. தமிழ் வளர்த்த கடைச்சங்கத்தின் தலைவரான நக்கீரர் மதுரையில் கோயில் கொண்டுள்ள சோமசுந்தரரோடு தமிழ்வாதம் புரிந்த பாவம் தொலையத் தீர்த்த யாத்திரை புறப்பட்ட வேளை, திருப்பரங்குன்றில் ஒரு குளக்கரையில் அரசமரத்தடியில் அமர்ந்து சிவபூசை செய்யும்போது நிகழ்ந்த அதிசயமும், மலைக்குகையில் (நக்கீரருடன் சேர்த்து) ஆயிரம் பேரையும் பூதம் அடைத்து வைத்ததும், "திருமுருகாற்றுப்படை" பாடி நக்கீரர் அனைவரையும் விடுவித்த வரலாறும் "ஞானச்சுடர்" வாசகர்கள் ஏற்கனவே பல்வேறு கட்டுரைகள் மூலமும் அறிந்துள்ளீர்கள். அதனால் விரிவான "திருமுருகாற்றுப்படை" வரலாற்றினை விடுத்து, அதனோடு தொடர்புடைய சில குறிப்புகளை மட்டும் கீழே தந்திருக்கிறேன்.

நக்கீரர் பூசை செய்த இடம் பரங்குன்றின் "சரவணப்பொய்கை" குளத்தருகிலுள்ள "பஞ்சாட்சரப் பாறை" எனக் குறிப்பிட்டு, அதனருகே நக்கீரருக்கு ஓர் ஆலயமும் காணப்படுகிறது. ஆயிரம் பேரும் அடைபட்டிருந்த குன்றினை, முருகன் திருக்கைவேல் பிளந்த அடையாளத்தை குன்றின் தென்பாகமாகிய தென்பரங்குன்றத்தில் இன்றும் காணமுடியும் எனத் திருப்பரங்குன்ற வரலாறுகள் கூறுகின்றன.

பரங்குன்றத்து அடிப்பாக வடபுறத்தில் முருகப்பெருமானது ஆலயம் அமைந்துள்ளது. கோபுர வாசலுக்கு முன்பாக உள்ள விஸ்தாரமான "சுந்தரபாண்டியன் மண்டபமும்", மண்டபம் முன்பாக உள்ள வீதியும் மிக நெருங்கியே உள்ளன. நமது தரிசன நாளுக்கு முதல்நாள் பங்குனி உத்தர தேரோட்ட நன்னாளாக இருந்தமையால், கோயிலின் முன்பாக (வீதியின் மறுபுறம்) அலங்கரிக்கப்பட்ட பிரம்மாண்டமான தேர் நின்றிருந்தது. இத் தேரின் அழகுடன், தேரினில் முருகன் பவனிவரும் அழகினையும் சேர்த்து மனதில் நிறுத்திப் பார்த்து உள்ளம் பூரித்தேன்.

சுந்தரபாண்டியன் மண்டபத்தின் இடதுபக்க நுழைவாசலால் உள்ளே போய் கருப்பண்ண சுவாமியையும், வெற்றி விநாயகரையும் வணங்கித் திரும்பினால், மண்டபத் தூண் ஒன்றில் சுமார் 6' உயரம் கொண்ட பத்ரகாளி அம்மன் வடக்குப் பார்த்தபடி காணப்படுகிறாள். தூணுடன் இணைந்தபடி இத்தனை உயரமான காளியின் பயங்கரத் தோற்றமும் - முக பாவமும், கைகளில் காணப்படும் ஆயுதங்களும், அணிந்துள்ள நகை அலங்காரமும், நடன பாணியில் அமைந்துள்ள கால்களும் பார்க்கப் பிரமிக்க வைக்கிறது. என்னே சிற்பியின் கைவண்ணம்! காளியின் சிலை அருகிலேயே வெண்ணெய் உருண்டை விற்பனை செய்கிறார்கள். உள்ளே வரும் ஒவ்வொருவரும் நெய் உருண்டைகளை வாங்கி காளியை நோக்கி எறிகிறார்கள். அதனால் காளியின் கால்முதல் திருமுடிவரை நெய் உருண்டை பதிந்து திட்டுத் திட்டாக நீக்கமற நிறைந்து ஒரு வித்தியாசமான அழகைக் கொடுக்கிறது. சிறுவர் முதல் பெரியோர் வரை இதனை ஒரு ஆலயக் கடமையாகக் கொள்வது ஆச்சரியமாக இருக்கிறது.

சுந்தரபாண்டியன் மண்டபம் 66 தூண்கள் கொண்ட பெரிய மண்டபம். நுண்ணிய வேலைப்பாடமைந்த யாளிகள், குதிரை வீரர்கள், சிவனின் திரிபுர தகனக்கோலம், நர்த்தன விநாயகர், துர்க்கையம்மன், தேவசேனாதேவி, வீரவாகு தேவர் முதலிய பல எழில் மிகுந்த சிற்பங்கள் 26 மையத் தூண்களிலும் காணப்படுகின்றன. தேவசேனாதேவியின் திருமணக் காட்சியினை விளக்கும் சிற்பமே அதி அற்புதமான உச்சக் கலைவடிவமாகக் காணப்படுகிறது. பிரம்மா ஹோமம் வளர்க்க, இந்திரன் தாரை வார்க்க, முருகன், அன்னை தேவசேனாதேவியின் கைப்பற்றும் திருக்கோலத்தில் ஒவ்வொரு உருவும் வெளிப்படுத்தும் மகிழ்ச்சி, நாணம், பெருமிதம் ஆகிய உணர்ச்சிப் பாவங்களைப் பார்த்து பிரமித்து நிற்கிறோம். அந்த முகபாவங்கள் நம் மனதைவிட்டு இன்றும் அகலாமல் கண்முன்னே நிற்கிறது.

கல்லிலே கண்டிருக்கும் மெய்சிலிர்க்க வைக்கும் கைவண்ணங்கள் விரிந்த கண்களினால் உள்வாங்கி மனதில் நிறுத்தி வியந்து போற்றியவண்ணம் ஏழு நிலைகள் கொண்ட ராஜகோபுரத்தினூடாக உள்ளே வர "கல்யாண மண்டபம்" வருகிறது. கல்யாண மண்டபத்தின் கிழக்குப் பக்கத்தில் லக்ஷ்மி தீர்த்தமும், மேற்குப் பக்கத்தில் "பிரம்மகூபம்" எனப்படும் சந்நியாசிக் கிணறும் காணப்படுகிறது. இந்த பிரம்மகூபத்துத் தீர்த்தமே இறைவனது அபிஷேகத்திற்கு உபயோகப்படுகிறது.

கல்யாண மண்டபத்தை அடுத்துள்ள கொடிமர மண்டபத்திற்கு ஆறுபடிகள் மேலேறிப் போகவேண்டும். இந்தக் கொடிமர மண்டபத்தின் இருபுறமும் குதிரைகள் இழுத்தபடியான ஒரு அமைப்புக் கொண்ட திருமண்டபமாக அமைத்துள்ளார்கள். கொடிமரத்தின் முன்பாக நடுவே பெரிய நந்தி, வலதுபுறம் எலி, இடதுபுறம் மயில் ஆகிய மூன்றும் தம்பம் முன்பாக அருகருகே இருப்பது தனி விசேடமாகும்.

அடுத்ததாக உள்ள மகாமண்டபத்திற்குச் செல்லும் படிக்கட்டருகே வேதவியாசர் முதலான முனிவர்களின் சந்நிதியும், அண்டரா - உக்கிரர் முதலான பூதகணத் தலைவர்களதும் சந்நிதிகள் அடுத்தடுத்து இருக்கிறது. இந்தப் பூதகணங்களே திருப்பரங்குன்றின் காவற்தெய்வமாக உள்ளமையால் இவர்களை வணங்கியே மேற்கொண்டு படியேறிச் செல்கிறோம். மண்டப வாயிலின் இரு மருங்கும் இரட்டை விநாயகரும், அதிகார நந்தியும் அமர்ந்துள்ளனர்.

மகாமண்டபத்தின் இடதுபுறமாக ஒன்பது படிகள் கீழிறங்கினால் கார்த்திகை முருகன், தெய்வயானை முருகன், கருடாழ்வார், காமாட்சி - ஏகம்பேஸ்வரர், அகிலாண்டேஸ்வரி - ஜம்புகேஸ்வரர், உண்ணாமுலைநாயகி - அண்ணாமலையார், சிவகாமி - சிதம்பரேஸ்வரர், ஞான பரணீனாம்பிகை, காளத்தீஸ்வரர் ஆகியோர் சந்நிதிகள் தொடர்ச்சியாக உள்ளன.

**பொறாமை பொல்லாததொரு தீயசக்தி.**

அதேபோன்று மகாமண்டபத்தின் வலது பக்கமாக சில படிகள் கீழிறங்கினால், தெற்குப் பார்த்த வரிசையில் ஸ்ரீகால பைரவர், சந்திரன், சாவித்ரி, சூரியன், உஷாதேவி, விநாயகர் உள்ளனர். சற்றுத்தள்ளி நால்வர் திருவுருவங்கள் பெரியதாகவும், அதனைத் தொடர்ந்து அறுபத்துமூவர் திருவுருவங்களும் வரிசையில் ஒரே அளவினதாகவும் காணப்படுகின்றன. ஒரு பக்கத்தில் சந்தான குரவர்களான மெய்கண்டார், அருள்நந்தி, உமாபதிசிவம், மறைஞானசிவம் ஆகிய நால்வரும் உள்ளனர்.

மண்டபச் சுவர்களின் பல்வேறு இடங்களிலும் திருப்பரங்குன்றம் (முதற் கவசம்), கந்தசஷ்டி கவசம், நக்கீரரின் திருமுருகாற்றுப்படை ஆகியன தெளிவாக எழுதப்பட்டுள்ளது. மலையும் மண்டபங்களும் அடுத்தடுத்து காணப்படுவதால் தூய காற்றும், வெளிச்சமும் உள்நுழைவதற்காக பல்வேறு இடங்களிலும் காற்றோட்ட வழிகளை அமைத்துள்ளார்கள்.

ராஜகோபுரத்திற்கு இடது கைப்பக்கமாக நடராஜர், தட்சணாமூர்த்தி, சண்டிகேஸ்வரர், ஸ்ரீ வீரவாகு - ஸ்ரீ வீரசூரர் - ஸ்ரீ வீரகேசரி - ஸ்ரீ வீரமார்த்தாண்டன் முதலான நவவீரர்களும், அருகே உற்சவ மூர்த்தங்களுக்கான பாதுகாப்பு அறையும், கிழக்குப் பார்த்தபடியான கஜலெட்சுமியும் உள்ளனர். நவக்கிரகங்கள் இல்லாமல் தனியாக சனீஸ்வர பகவான் உள்ளார்.

இப்போது நாம் மீண்டும் மகாமண்டபம் சென்று ஆறுபடிகள் மேலேறி வருகிறோம். மலையைக் குடைந்து உருவாக்கப்பட்டுள்ள குடைவரைக் கோயிலாகப் பரங்குன்றின் கருவறைப்பகுதி அமைந்துள்ளது. வழமையாக ஒருருவம் மட்டுமே கருவறையில் காணப்படுவது போன்றில்லாமல் இந்த குடவரையில் வரிசையாகப் பல தெய்வங்களும் உள்ளனர். தாமரை மலரின் மீதமர்ந்து கரங்களில் கரும்பும் வில்லுமேந்திப் பூதகணங்கள் சூழக் காட்சியருளும் கற்பக விநாயகர் திருவுருவம் மிக அற்புதமாக மலையைக் குடைந்து வடிவமைக்கப்பட்டுள்ளது. கற்பக விநாயகருக்கு அருகிலுள்ள குடைவரைக் கோவிலில் ஸ்த்யகிரீஸ்வரர் எனும் சிவன் லிங்க வடிவில் அமர்ந்துள்ளார். மூலவர் முருகப்பெருமான் தெய்வயானையைத் திருமணஞ் செய்த திருமணக் கோலத்தில் அருள் பாலிக்கிறார். முருகனின் வாகனங்களான மயில், ஆடு முதலியவையும், வேல் - கொடி ஆகியவையும் மூலவரின் திருவுருவோடு ஒட்டியபடி அழகுற அமைத்துள்ளனர். மூலவர் மலையைக் குடைந்தெடுத்த திருவுருவாக உள்ளமையால் முருகன் திருக்கரத்தில் உள்ள வேலுக்கே அபிஷேகங்கள் அனைத்தும் நடைபெறுகின்றன.

மூலவராகிய முருகப் பெருமானின் சந்நிதிக்கருகே (மலையைக் குடைந்து) பெருமாள் மகாலெட்சுமியுடன் அமர்ந்துள்ளார். இந்த சந்நிதிகளின் மலைச்சரிவில் ஆதிஷேசன்மீது பாற்கடலில் அமர்ந்திருக்கும் பெருமாள், வராஹமூர்த்தி, நரசிம்மமூர்த்தி ஆகியவர்களின் அர்த்த சித்திர உருவங்களுடன், ஒரு ஓரத்தில் சோமஸ்கந்தர் திருவுருவமும், கோபூஜை செய்யும் பார்வதி, சந்தியா தாண்டவமாடும் சிவன் ஆகியோரின் திருவுருவங்களும் உள்ளன. பொதுவாகக் கூறினால் தெய்வங்கள் அனைத்தும் முருகப்பெருமானது திருமணத்திற்கு வந்திருந்து வாழ்த்துவதற்காகக் கூடியுள்ள நிலையிலேயே ஒரே கர்ப்பக்கிரகத்தில் பாறையைக் குடைந்து அமைக்கப்பட்டுள்ளதாகக் கொள்ளலாம்.

சங்க இலக்கியங்களில் குறிக்கப்படும் இக் குடவரைக் கோயில் பல்லவர் காலத்திற்குப் பல நூற்றாண்டுகள் முன்னரே பாண்டிய மன்னர்கள் பாறைகளைக் குடைந்து கோவில்களை அமைத்தார்கள் என்பதற்குச் சான்றுகள் இருப்பதாகக் கோயிற்குறிப்புக் கூறுகின்றது.

கருணையே வடிவான தேவசேனா அம்பிகையுடன் வேண்டுவார் வேண்டுவன ஈந்தருளும் முருகப்பெருமான் வீற்றிருக்கும் பரங்குன்றம் கோவிலில், அச்சம் அகற்றும் சேவற்கொடியானது பட்டொளி வீசிப் பறந்து கொண்டேயிருக்கிறது.

# வைகாசிமாத வாராந்த நிகழ்வுகள்

**02.05.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "அன்புடைத் தோன்றல்"

வழங்குபவர் :- சிவத்திரு வ. குமாரசாமிஐயர் அவர்கள்

---

**09.05.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

விடயம் :- "இன்னிசை" (பக்கவாத்திய சகிதம்)

வழங்குபவர் :- பேராசிரியர் என். சண்முகலிங்கன் அவர்கள்

[முன்னைநாள் துணைவேந்தர், தலைவர், சமூகவியல்துறை, யாழ். பல்கலைக்கழகம்]

---

**16.05.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "வேகம் கெடுத்தாண்ட வேந்தன்"

வழங்குபவர் :- திரு ஐ. சண்முகலிங்கம் (குப்பிளான் சண்முகம்) அவர்கள்

[இளை. ஆசிரியர்]

---

**23.05.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்**

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை]

---

**30.05.2014 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில்**

# ஞானச்சுடர் வைகாசிமாத வெளியீடு

**197ஆவது மலர்**

வெளியீட்டுரை :- திரு சி. சிவபாலசிங்கம் அவர்கள்

[இளை. கிராம உத்தியோகத்தர், பொலிகண்டி]

மதிப்பீட்டுரை :- திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள்

[ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி]

பதிவு இல. QD/16/NEWS/2014

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

